உதயன்

சுடர்: 29 கதிர்: 236 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 4, ஞாயிறு 20.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

52 பக்கங்கள்

யாழ். - 30/=

வன்னி - 20/=

German Language Academy

ஜேர்மன், சுவிஸ் செல்பவர்களுக் கான் டொச் மொழிகள் ஜேர்மனி யில் வசித்து வந்த ஆசிரியர் S.கோனேஸ்வரன் அவர்களால் இலகுவாக கற்பிக்கப்படுகின்றது.

தொலைபேசியில் தொடர்புகொண்ட பின் நேரில் வரவும்

077 9707 322

German Language Academy

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h

ஈரப்பதம்: 48%

காற்றமுத்தம்: 1008 hPa

வெளிச்சத் தெளிவு: மிக நன்று

சூரியோதயம்: 05:23

சூரியஸ்தமனம்: 18:04

## உள்ளே...


இலங்கைக்கு தீராத பழி! 8


சம்பியனானது ஹென்றியரசர் கல்லூரி 22


பிலிப் லாம்ப் ஓய்வு 23

# 13 ஆவது திருத்தம் பெரும் தோல்வியே

### வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

13 ஆவது திருத்தம், நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் தோல்வி என்றே கூற வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.


சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு நிதியில், பெரிய செயற்றிட்டங்களைத் தொடக்கி, எம்மைக் கடனாளிகளாக ஆக்கி அவற்றின் நிழலில் இருந்து கொண்டு தமது பைகளையும் நிரப்பிக் கொண்டு பத்திரிகைகளுக்கும் அறிக்கை கொடுக்கும் நிலைக்கு நாங்கள் தள்ளப்படவில்லை.

தொடர்ந்து எங்கள் சேவைகள் மக்களுக்குக் கிடைக்கும் என்பதை இத்தால் கூறி வைக்கிறேன். ஆனால் இவை 13 ஆவது

21 ஆம் பக்கம் பார்க்க



## ரமபோஷவின் அறிக்கை இந்தியாவுக்கு

கொழும்பு, ஜூலை 20

இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பில், தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷவினால் இந்தியாவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதையும்,

21 ஆம் பக்கம் பார்க்க

## ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதி பெறாமலேயே அபிவிருத்திப் பணி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேச செயலர் பிரிவுகளில் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அனுமதி பெறப்படாமல் தனித்து ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் அனுமதியுடன் மாத்திரமே நடைமுறைப்படுத்தப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இது குறித்துப் பொதுமக்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிரதேச மட்டத்திலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக நடத்தப்படாதிருப்பதே இதற்குக் காரணம் என்று குறிப்பிடப் படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன. இந்த 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படவில்லை. இந்தப் பிரதேச ஒருங்

21 ஆம் பக்கம் பார்க்க

## போர்க் குற்றங்கள் குறித்து யாரும் சாட்சியமளிக்கலாம்

### ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில், காணாமற்போனோர் ஆணைக்குழு முன்பாக எவரும் சாட்சியமளிக்க முடியும் என்று ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

காணாமற்போனோரின் உறவுகள் மாத்திரமே ஆணைக்குழு முன்பாக இந்த விடயங்கள் தொடர்பில் சாட்சியமளிக்க வேண்டியதில்லை என்றும் அந்த உயர் அதிகாரி குறிப்பிட்டார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விடயப் பரப்புக்கள் கடந்த 15 ஆம் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விரிவாக்கப் பட்டுள்ளன.

புதிய விடயப் பரப்புக்கள் மூலம், இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்

21 ஆம் பக்கம் பார்க்க

## அநாமதேய விசாரணையை ஒருபோதுமே ஏற்காது அரசு

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்


கொழும்பு, ஜூலை 20

ஐ.நா. விசாரணைக் குழுவில் உள்ளவர்கள் யார் என்று தெரியாமல் அந்த விசாரணைக் குழு மீது நாம் எப்படி நம்பிக்கை வைப்பது.இந்த அநாமதேய விசாரணைக் குழுவின் இரகசிய விசாரணையை இலங்கை அரசு ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. விசாரணைக் குழுவில் இடம்பெற்றுள்ளவர்களின் விவரங்களை வெளியிடுவதற்கு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பேச்சாளர் ருபேர்ட் கொல்வில் மறுத்திருந்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமொன்று வெளி

21 ஆம் பக்கம் பார்க்க



நீர்வேலிச் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தொன்றில் மோட்டார் சைக்கிள் ஒன்று பயணிகள் பஸ்ஸின் பின் பக்கமாக மோதியது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (கு)

## பொலிஸ் பாதுகாப்புடன் நாளை அச்சுவேலியில் காணி அளவீடு

### எதிர்ப்பதற்கு கூட்டமைப்பு முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 20

அச்சுவேலியில் இராணுவ முகாம் அமைப்பதற்குச் சுவீகரிக்கப்படவுள்ள காணியை நில அளவை செய்வதற்குப் பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், குறித்த காணியை நாளை திங்கட்கிழமை நில அளவைத் திணைக்களத்தினர் அளவீடு செய்யவுள்ளதாகவும், இதற்குரிய பொலிஸ் பாதுகாப்பு யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலராகவுள்ள பெரும்பான்மையின உத்தியோகத்தரால் ஏற்பாடு செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது யாழ். மாவட்டத்தில், இராணுவத் தேவைக்காகக் காணிகள் சுவீகரிக்கப்படுவது தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதன்போதே, கோப்பாய் பிரதேச செயலா

21 ஆம் பக்கம் பார்க்க

## அரசின் விசாரணைத் தராதரத்தை ஐ.நா. தொடர்ந்து கண்காணிக்கும்

### மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள போர்க் குற்ற விசாரணைகள், சர்வதேச தராதரத்துக்கு ஏற்றதாக உள்ளனவா என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தொடர்ச்சியாகக் கண்காணிக்கும். அத்துடன் விசாரணைக் குழுவிடம் தகவல் வழங்குபவர்கள், அச்சுறுத்தப்படுவதையோ அல்லது பழி வாங்கப்படுவதையோ தடுப்பதற்கான உத்தரவாதங்களும்

21 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை சுவீகரிக்கவுள்ள காணி பொது மக்களால் இன்று துப்புரவு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கீரிமலையில் கடற்படைத் தேவைக்காகச் சுவீகரிப்புச் செய்யப்படவுள்ள காணியை, முன்னரே தெரிவித்தவாறு இன்று துப்புரவு செய்யவுள்ளதாக பொதுமக்கள் அறிவித்துள்ளனர்.

வலி.வடக்குப் பிரதேச சபையின் முழுமையான ஒத்துழைப்புடன் இன்று இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கடற்படையினரின் தேவைக்காக நகுலேஸ்வரத்தில் பொது மக்களின் 183 ஏக்கர் காணிகளைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த 11 ஆம் திகதி குறித்த பகுதிகளை நில அளவீடு செய்வதற்குச் சென்ற

21 ஆம் பக்கம் பார்க்க

# படுத்திருக்கும் யானை பலமற்றது என்று சுற்றி நிற்கும் நரிகள் எண்ணக் கூடாது

## அரசையும் அடிவருடிகளையும் நேற்றுக் கடுமையாகச் சாடினார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

படுத்திருக்கும் யானை பலமற்ற யானை என்று சுற்றி நிற்கும் நரிக் கூட்டங்கள், தப்புக்கணக்குப் போடக்கூடாது என்று தெரிவித்த வடக்கு மாகாண சபை முதலமைச்சர், பல பேர் முன்னிலையில் தருவேன் என்பதும் பின்னர், அதை வழங்க முடியாது என்று நொண்டிச் சாட்டுச்சொல்லி ஆள் அனுப்புவதுமே ஜனாதிபதியின் வழக்கமாகி விட்டது என்றும் அரசைச் சாடினார்.

சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா நகர மண்டபத் திறப்பு விழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில் இணை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு காரசாரமாகத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு,

இந்த மண்டபமானது உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. வேலைகளில் மாற்றம் ஏற்பட்டதால் கட்டடம் முழுமை பெறவில்லை. ஜனாதிபதிக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நகராட்சி மன்ற தவிசாளரால் இதுகுறித்துத் தெரிவித்த போது, கட்டட வேலையை முழுமைப்படுத்த தனது நிதியத்தில் இருந்து நிதி ஒதுக்கப்படும் என்று எல்லோர் முன்னிலையிலும் கூறிய ஜனாதிபதி இரு வாரங்களின் பின்னர் அதற்கு கையை விரித்து விட்டார்.

ஏமாற்றுவது கைவந்த கலை

இந்த வருடம் ஜனவரி மாதம் 2 ஆம் திகதியின் பின்னர் இந்த நிலை நேர்ந்தது. அந்த நேரத்திற்குச் சுற்றில் இருப்போர் மனங்குளிர ஒன்றைக் கூறுவது பின்னர் அதற்கு நேர்மாறாக நடப்பதும் ஜனாதிபதிக்குக் கைவந்த கலையாகியுள்ளது.

எனக்குத் 'தருகிறேன்' என்று ஜனவரி 2 ஆம் திகதி கூறியவற்றில் ஒன்றை, அதாவது பிரதம செயலாளரை உடனே மாற்றுகின்றேன் என்பதைத், தொடர்ந்து ஜனவரி 19 ஆம் திகதி வரையில் அதாவது தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக் கட்டடத் திறப்பு விழா மட்டும் ஏமாற்றிவந்தார்.

அன்றுகூட்டம் முடிந்ததும் நொண்டிச் சாட்டொன்றைக் கூறி 'முடியாமைக்கு வருந்துகிறேன்' என்றார். அதாவது பிரதம செயலாளரை மாற்றினால் அவரின் தொழிற்சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும். ஆகவே உடனே அதைச் செய்ய முடியாது என்பதுதான் அவரது சாட்டு. நான் மாகாணசபையின் பிரதம செயலாளர், அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட உடனேயே அவர் பொது நிர்வாக சேவை தொழிற்சங்கத்தின் உறுப்பினராகத் தொடர்ந்து இருக்கக் கூடிய தகைமையை இழந்து விட்டார் என்று கூட்டத்தை முடித்து வெளியில் வந்ததும் நான் தெரிந்து கொண்டேன்.

'தருவேன்' என்று தரணி கேட்கக் கூறிவிட்டு 'தரமாட்டேன்' என்று இருகிழமைகளில் ஆளை விட்டுக் கூறுவது அவரின் குணாதிசயத்தை வெளிக்காட்டுகின்றது.

வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாணத்தின் மீது கரிசனை கொள்ளாது ஜனாதிபதியின் கருத்தை வெளியிடும் கருவியாக அங்கு மாறியிருந்தார். அவர் அவ்வாறு கருவியாகக் கடமையாற்றுவதால் தான் எமது வேலைகள் தடைப்படுகின்றன - தாமதம் அடைகின்றன - தடுக்கப்படுகின்றன.

மாகாணசபை துவண்டு விடவில்லை

தருவதாகக் கூறிய பணம் கிடைக்கவில்லையே என்று உங்கள் நகராட்சி துவண்டு விடாமல் செயற்பட்டு வருவது போல்த்தான் வட மாகாணசபையும் செயற்பட்டு வருகின்றது. நாங்கள் மாற்றார் கையை நம்பி இல்லாமல், எம் கையே எமக்கு தவி என்றவாறு காரியங்களைச் சாதித்துச் செல்வதே இன்றைய காலகட்டத்தில் உசிதமென எமக்குத் தெரிகின்றது.

மாகாணசபை தானாக ஏதேனும் ஒரு செயற்திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்த எத்தனித்தால் உடனே அரச சார்புடைய அரசியல்வாதிகள் அதே இடத்துக்குச் சில தினங்களுக்கு முன்னர் சென்று தாங்களே அந்தச் செயற்திட்டத்திற்குக் காரணகர்த்தாக்கள் என்று மக்களுக்குக் கூறி வருகின்றார்கள்.

அரசின் திருகுதாளம்

மாவை கந்தசுவாமி ஆலய புனருத்தாரணம் பற்றி நாங்கள் உரிய அமைச்சருடன் கதைத்திருக்க நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) சிலர் கோயிலுக்குச் சென்று உதவிகள் செய்யப்போவதாகக் கூறியுள்ளார்கள்.

இத்தனை பெருந்தெருக்களைப் போட்ட அரசின் சார்பான அரசியல் கட்சிகளை எதிர்கொண்டு, எமக்கு வாக்களித்த எமது மக்களுக்குத் தெரியாதா இந்தக் கட்சிகளினதும் அரசினதும் திருகுதாளங்கள்?

அதே ஆளுநரை மீண்டும் நியமித்து விட்டார்கள். ஆகவே யானை படுத்தது, படுத்தே விட்டது. இனி எழ மாட்டாது என்று எக்காளம் ஊதின தெற்கில் உள்ள பத்திரிகைகள். யானையைப் படுக்க வைக்க அத்தனை மும்முரம் தெற்குப் பத்திரிகைகளுக்கு!

என்னிடம் கேட்ட பத்திரிகைகள் யாவற்றிற்கும் 'தான்தோன்றித்தனமாகத் தப்புக்கணக்குப் போடாதீர்கள். எங்கள் பணி சிறப்பாகத் தொடர்ந்து கொண்டு போகின்றன. சில்லறைக் கனவுகளில் திளைக்காதீர்கள்' என்றேன்.

இடரிலும் தளரோம்

இன்று எங்கள் பிரதிநிதிகள் மக்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு மக்கள் சேவையாற்றி வருகின்றனர். பலவிதமான சவால்களையும் எதிர்கொண்டு முன்நோக்கி நடந்து செல்கின்றார்கள். ஆளணிபற்றாக்குறை, அறிவு செறிந்த, அனுபவம் நிறைந்த அலுவலர் பற்றாக்குறை, நிதிப்பற்றாக்குறை ஒரு புறம், இராணுவ உள்ளீடல் சுற்றுத்தலையீடுகள் மறுபுறம், அதிகார துஷ்பிரயோகங்கள் இன்னொரு புறம், களவான குடியேற்றங்கள் வேறொரு புறம், 13 ஆவது திருத்தத்தின் கையாலாகாத நிலை மேலும் ஒரு புறம்.

இவ்வாறு பல சவால்களின் மத்தியிலும் எமது வடமாகாண சபை வெற்றிநடை போட்டுச் செல்வதைப் பார்க்கச் சகிக்காதவர்கள், 'என்ன செய்தீர்கள்?' என்று கேட்கின்றார்கள். எமது சேவையைப் பெற்ற எங்கள் மக்களிடம் சென்று இதைக் கேளுங்கள். அதற்காக நீங்களே அவர்களிடம் செருப்படி வேண்ட நேரிடும்.

அரசின் ஏமாற்றுக்காரர்கள்

அரசால் எவ்வாறு எம்மை ஏமாற்றிக் காரியங்களை நடத்த அரசில் உள்ளோர் நடவடிக்கை எடுக்கின்றார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்ய ஒரு உதாரணம் கூறுகின்றேன். அண்மையில் வடமாகாண தேவைகள் பற்றி, போரில் இருந்து வெளிவந்த எங்கள் மக்களின் தனித்துவமான தேவைப்பாடுகள் பற்றி, அவற்றை எதிர்கொள்ளும் உபாயங்கள் பற்றி ஒரு ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியிடம் கேட்டிருந்தேன். முழுமையாக ஒத்துழைப்பது போல அவரது கருத்து அமைந்தது. ஆனால் நடந்தது அதற்கு மாறாகவே நடந்தது. அந்த அதிகாரி எம்மைப் புறக்கணித்து விட்டு அதே ஆய்வினைச் செய்யப் போவதாக அரச அமைச்சர் ஒருவருடன் உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டார்.

ஏன் என்று அந்தப் பிரதிநிதியிடம் நான் கேட்டதற்கு, நாங்கள் அரசுடன் தான் ஒப்பந்தங்கள் கையெழுத்திடலாம் மாகாண அரசுடன் அப்படி செய்யமுடியாது என்றார். எதற்காக எமக்கு அறிவிக்காமல் இதைச் செய்தீர்கள் என்ற கேள்விக்கு அவர் பொறுப்பான பதில் ஏதும் தரவில்லை.

அரசியல் என்றால் அறத்திற்குப் புறம்பான நடத்தையே என்பதை நாடு பூராகவும் அறியச் செய்து வருகின்றது இந்த அரசும் அதன் அடிவருடிக் கூட்டங்களும். ஆனால் அதற்காக அதே வழியில் நாம் போவதாக இல்லை. எமது மார்க்கம் அற மார்க்கம் - அன்பு மார்க்கம் - அரவணைக்கும் மார்க்கம். மக்களின் நன்மையே எமது குறிக்கோள்.

யார் தருகின்றார்கள்? யாருக்குப் புகழ் செல்ல வேண்டும் என்பது எமக்கு முக்கியமல்ல. யார் தமக்குப் பேர் சூட்டவேண்டும் என்று சதிகளில் இறங்குகின்றார்களோ அவர்களை நாங்கள் மன்னித்து முன்னேறி வருகின்றோம்.

ஒரேயொரு தடங்கல். அதாவது சில அதிகாரிகள் நரிவேலை செய்து வருகின்றார்கள். ஆனால் அவர்களை அடையாளம் கண்டு வருகின்றோம். ஆவன செய்வோம் - என்றார். (ஐ-5)

# இந்திய, இலங்கை மீனவர் பிரச்சினை மூன்றாம் கட்டப் பேச்சு அடுத்த மாதம்

கொழும்பு, ஜூலை 20

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கான மூன்றாம் கட்டப்பேச்சை அடுத்த மாதம் அளவில் சென்னையில் நடத்துவதற்கு இந்திய மத்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது என்று இலங்கைத்தரப்பு அறிவித்துள்ளது.

இரு நாட்டு மீனவர் பிரச்சினைகளையும் தீர்க்க இரண்டு கட்டப்பேச்சுக்கள் முடிவடைந்துள்ள நிலையில் இதுவரை தீர்வு காணப்படாத நிலையில் மூன்றாங்கட்டப்பேச்சு நடைபெறவுள்ளது.

மூன்றாம் கட்டப்பேச்சுக்கு தாம் தயாரக இருக்கிறோம் என்று தமிழக மீனவப்பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். இதற்கு இந்திய மத்திய அரசும் உடன்பட்டுள்ளது என்றும் பேச்சை நடத்துவதற்கு இலங்கை அரசிடம் மத்திய அரசு அனுமதி கேட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்புக்கு இலங்கை மீனவர் பிரிதிநிதிகள் உடன்பாடு தெரிவிக்காததால் அதற்கான திகதி குறிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை இந்தியாவுக்கான மீன்பிடி ஆலோசகர் எஸ்.பி.அந்தோணிமுத்துவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, இந்திய மீனவர்கள் பேச்சுக்கு தயார் என ஏற்கனவே அறிவித்தல் வழங்கியுள்ளனர். ஆனால் இலங்கை மீனவர்கள் இது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. கடற்றொழில் அமைச்சு இந்திய மத்திய அரசின் வேண்டுகோளை ஏற்றுள்ளது. மீனவப்பிரதிநிதிகளின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும் பேச்சை சென்னையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் - என்றார். (ஐ-14)

# இஸ்ரேலிய அரசுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்




கொழும்பு, ஜூலை 20

பலஸ்தீனத்தின் காஸாவில் அப்பாவி முஸ்லிம்கள் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் தாக்குதல்களைக் கண்டித்து கொழும்பு, தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு முன்னால் பாதையை இடைமறித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முஸ்லிம் அரசியல்வாதிகள் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் அமைச்சர் ரவூவ் ஹக்கீமும் கலந்து கொண்டார்.

ஆர்ப்பாட்டத்தின்போது கருத்து தெரிவித்த ஹக்கீம்,

இஸ்ரேலிய அரசு புரிகின்ற அட்டூழியத்தால் அங்கு வாழும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் அரசு நடத்தும் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். பலஸ்தீன மக்களுக்காக இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களும் ஏனைய சமூகத்தினரும் ஒருமித்துக் குரல்கொடுக்கும் நிலைமை இன்று இங்கு உருவாகியிருக்கின்றது. கட்சி வேற்றுமையின்றி நாங்கள் இதில் ஒன்றுபட்டிருக்கிறோம்.

பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள இஸ்ரேலிய அரசுக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்து வரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் எங்களது கண்டனத்தை உரத்துச் சொல்ல வேண்டியுள்ளது. - என்றார்.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாகச் செயற்படுவதாக கூறிக்கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இஸ்ரேலுடன் ராஜதந்திர செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகிறார் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய முஸ்லிம் அரசியல்வாதிகளான மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், மத்திய மாகாண சபை உறுப்பினர் அஸாத் சாலி ஆகியோர் தெரிவித்தனர். (ஐ-10)

# படகு உரிமத்தைக் கையளித்து தொழிலையே கைவிடுவோம்

## கைதை தடுக்காவிட்டால் இது உறுதி என தமிழக மீனவர் சங்கங்கள் மீள அறிவிப்பு

இராமேஸ்வரம், ஜூலை 20

மீனவர் பிரச்சினைக்கு மத்திய அரசு இனியும் நடவடிக்கை எடுக்காவிட்டால் தமது தொழிலைக் கைவிட்டு படகு உரிமப் புத்தகங்களை மத்திய அரசிடம் ஒப்படைப்பது என்று தமிழகத்தின் இராமேஸ்வரம் மீனவர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 6 மீனவர் சங்கங்களுக்கான கலந்துரையாடல் நேற்று இராமேஸ்வரத்தில் இடம்பெற்றது.

இதன்போது மீனவர்களும் சங்கங்களின் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். இதன்போது மீனவர்களின் கைதும் விடுதலையும் படகுப்பறிமுதலும் எமது வாழ்வாதாரத்தை பெருமளவில் பாதித்துள்ளன.

மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணக்கோரி ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்திய போதும் மத்திய மாநில அரசுகள் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றன.

இந்த நிலையில் இந்திய மத்திய அரசுக்கு கடந்த 14 ஆம் திகதி மீனவர் சங்கங்கள் தமது கோரிக்கை மனு ஒன்றை கையளித்திருந்தன.

மனுவில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் இராமேஸ்வரம் மீனவர்கள் கூட்டாக இணைந்து மாபெரும் போராட்டம் ஒன்றை எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்துவர் என்றும் படகு உரிமையாளர்களின் புத்தகங்களை மத்திய அரசிடம் ஒப்படைத்துவிட்டு மீன்பிடித் தொழிலை கைவிடுவோம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன்படி மத்திய அரசு நடவடிக்கை எடுக்காதுவிட்டால் தாம் போராடுவதே தீர்வு - என்று அவர்கள் நேற்றும் மீள வலியுறுத்தியுள்ளனர். (ஐ-14)

# இளம் பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

திருமணம் முடித்து 6 மாதங்களே ஆன பத்தொன்பது வயது இளம் பெண் வீட்டிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கொய்யாத்தோட்டம் பழைய பூங்கா வீதிக்கு அருகில் உள்ள வீடொன்றிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த அன்ரன் செலஸ்ரா (வயது-19) என்ற இளம்பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு நேற்று காலை சென்று விசாரணைகளை மேற்கொண்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார். (ஐ-14)

# பொன்விழா மண்டபம் திறப்பு



பொன் விழா மண்டபத்தை முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

தென்மராட்சி,ஜூலை 20

சாவகச்சேரி நகரில் 74 மில்லியன் ரூபா செலவில் சாவகச்சேரி நகரசபையால் நிர்மாணிக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபையின் 50 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் பொன் விழா மண்டபம் நேற்று முற்பகல் 10 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா ஆகியோரால் கூட்டாகத் திறந்து வைக்கப்பட்டது.

நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உறுப்பினர்களான கே.சயந்தன், பா.கஜதீபன், இ.ஆர்னல்ட், ப.அரியரத்தினம் மற்றும் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்ஸீல், தென்மராட்சி பிரதேச திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஓ-9)

# யாழ். அணிக்கு கல்லெறி

யாழ்ப்பாணம். ஜூலை 20

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் மாவட்டங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒளியின்றி இருளில் நடந்ததால் யாழ்.வீரர்கள் போட்டியைப் புறக்கணித்து வெளியேறினர். அவர்கள் மீது கல்லெறி தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா பண்டாரநாயக்க பாடசாலை மைதானத்தில் நேற்றைய தினம் பிற்பகல் 6.10 அளவில் கம்பஹா அணிக்கும் யாழ்ப்பாண அணிக்கும் இடையே போட்டி ஆரம்பமானது. அதில் யாழ்ப்பாண அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.யாழ்ப்பாண அணியினர் இரண்டாவது ஓவரில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இருள் சூழ்ந்துவிட்டது. இந்த நிலைமையை எடுத்துக் கூறிய போதும் அதிகாரிகள் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. அதனால் வேறு வழியின்றி யாழ்ப்பாண அணியினர் போட்டியைக் கைவிட்டுத் திரும்பி விட்டனர்.

அதற்கு முதல் யாழ்ப்பாண அணியினர் மீது அம்பாந்தோட்டை அணியினர் கல் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-4 -109)

# காரைநகரில் சிறுமிகள் வன்புணர்வு; மேலும் இருவருக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், ஜூலை 20

காரைநகரில் சிறுமிகளான பாடசாலை மாணவிகளை கடற்படைச்சிப்பாய் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் குறித்த காலப் பகுதியில் பணியிலிருந்து சம்பவம் தெரியவருவதற்குச் சில நாள்களுக்கு முன்னர் விடுமுறையில் சென்றிருந்த இரண்டு கடற்படைச் சிப்பாய்களையும் பொலிஸ் நிலையத்துக்கு வந்து வாக்குமூலம் பதிவு செய்யுமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 7 பேர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டபோதும் சில மணித்தியாலங்களில் அவர்கள் தொடர்பான வழக்கு மீள எடுத்துக் கொள்ளப்பட்டுப் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. அவர்கள் எவருமே சிறுமிகளால் அடையாளம் காணப்படவில்லை. அதன்பின்னர் நீதிவான் திருமதி ஜீவராணி கறுப்பையா முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 7 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சிறுமிகள் கடற்படைச் சிப்பாய்களால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்ற சம்பவம் வெளியே தெரியவருவதற்குச் சில நாள்களுக்கு முன்னர் குறித்த முகாமில் பணியாற்றிய இரண்டு கடற்படைச் சிப்பாய்கள் விடுமுறையில் சென்றிருந்தனர். அவர்களுக்கே வாக்குமூலம் பதிவு செய்ய வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் சந்தேக நபர்களின் பிரிவுப் பொலிஸாரூடாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

# வெள்ளை வானில் வந்து பட்டப் பகலில் கொள்ளை

## வவுனியாவைச் சேர்ந்த நான்கு பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 20

வெள்ளை வானில் சென்ற கொள்ளையர் பட்டப்பகலில் வீடு புகுந்து தாயையும் மகளையும் கட்டிவைத்துவிட்டு ஒன்றரை லட்சம் ரூபா பணம் உள்ளிட்ட பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் சந்தேகத்தில் வவுனியாவைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சுதுமலையில் கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த குடும்பஸ்தர் வேலை விடயமாக வெளியே சென்றுவிட்டார். தாயும் மகளும் வீட்டில் இருந்துள்ளனர். சுமார் முற்பகல் 11 மணியளவில் அவர்களது வீட்டுக்கு வெள்ளை நிற ஹயேஸ் வானில் சுமார் 8 பேர் வரை சென்றுள்ளனர். அவர்களில் 4 பேர் வீட்டினுள் சென்று இருவரையும் கட்டிப்போட்டுவிட்டு ஒன்றரை லட்சம் ரூபா பணம் மற்றும் கைத்தொலைபேசிகள் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அவர்கள் பயணித்த வாகன இலக்கத்தை வைத்து இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள். ஆனால் அவர்களுடன் பயணித்த ஏனையவர்கள் இன்னும் கைதாகவில்லை.

அது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இங்குள்ளவர்களுக்கும் இதில் தொடர்பிருக்கலாம் என்ற அடிப்படையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னர் உரும்பிராயில் இதே பாணியில் வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபட்டவர்களும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4-115)

# சகல தரப்பினரையும் உள்ளடக்கி தமிழ்த் தேசியச் சபை வேண்டும்

## ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

சகல தரப்பினரையும் உள்ளடக்கிய தமிழ்த் தேசியச் சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கவேண்டும் என்ற தீர்மானம் உள்ளிட்ட 14 தீர்மானங்கள், ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் 34 ஆவது வருட மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் 34 ஆவது வருட இரண்டு நாள் சிறப்பு மகாநாட்டின் முதல் நாள் பேராளர்கள் மகாநாடு 'வலுவான ஐக்கியத்தை நோக்கி' என்ற தொனிப் பொருளில் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

### புதிய யாப்பு

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் புதிய யாப்பு பேராளர்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டு திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இறுதியாக முன்னைய மத்தியகுழு சார்பில் முன்னைய செயலாளர் நாயகம் புதிய மத்திய குழுவுக்காக பரிந்துரைத்த 41 உறுப்பினர்களை மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட மத்திய குழு, கட்சியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரனை மீண்டும் தெரிவு செய்தது.

புதிய தலைவர் 9 பேர் கொண்ட அரசியற் பீடத்துக்கு 7 உறுப்பினர்களை தெரிவு செய்ததுடன் எஞ்சிய இருவரையும் அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் தெரிவு செய்து அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

உப தலைவராக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரத்தினம், செயலாளராக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், துணைச் செயலாளராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரன் மற்றும் பொருளாளராக மன்னார் நகர சபை உறுப்பினர் இரத்தினசிங்கம் (குமரேஸ்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### நிறைவேறிய தீர்மானங்கள்

இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு, வடக்கில் பௌத்த கலாசாரம் புகுத்தப்பட்டு வருகின்றது. இது தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

2009 ஆம் ஆண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ, ஐ.நா செயலாளர் பான் கி மூனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக, ஒரு வருட காலப் பகுதியினுள் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீளக் குடியமர்த்தவில்லை. வலி. வடக்கு, சம்பூரில் இன்னமும் மக்கள் அகதிகளாகவுள்ளனர். இவர்களது மீள்குடியேற்ற நடவடிக்கைகளை கண்காணிக்க ஐ.நா விசேட பிரதிநிதியை நியமிக்க வேண்டும்.

இராணுவத்தினர் இங்கு காணிகளைக் கையகப்படுத்துகின்றனர். இதனால் மக்கள் அகதிகளாக்கப் படுகின்றனர். எனவே தமிழர் தாயகப் பிரதேசங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும்.

இராணுவத்தினர் வசமுள்ள தனியார் காணிகள், பண்ணைகள் மீளவும் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பண்ணைகளை வடக்கு மாகாண விசாய அமைச்சு பொறுப்பேற்கவேண்டும்.

இராணுவத்தினர் வ்சமுள்ள பொதுமக்களின் மாடுகளை மீளவும் அவர்களிடம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

வடக்கிலுள்ள 10 லட்சம் மக்களுக்கு ஒன்றரை லட்சம் இராணுவத்தினர் உள்ளனர். இதனாலேயே இங்கு இராணுவ நிர்வாகம் நடைபெறுகின்றது. எனவே இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கில் இன்னமும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடைபெறுகின்றது. இதனை தடுக்க சர்வதேசம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்.

சகல தரப்பினரையும் உள்ளடக்கிய தமிழ்த் தேசிய சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்க வேண்டும்.

காணாமற் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழு மக்களை முட்டாளாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விரைவுபடுத்தப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் பக்கச் சார்பான நியமனங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

வேலை வாய்ப்புக்களின் போது இன விகிதாசாரம் பின்பற்றப்பட வேண்டும். (த-5)

# மாணவிகள் வன்புணர்வு தொடர்பில் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 20

காரைநகரில் சிறுமிகளான பாடசாலை மாணவிகள் கடற்படைச் சிப்பாயால் வன்புணர்வுக் குள்ளாக்கப்பட்ட குற்றச் சாட்டுத் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

நேற்று இந்த முறைப்பாட்டைச் செய்ததாக சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

காரைநகரில் குறித்த மாணவிகள் பாடசாலைக்குச் சென்றபோதே வன்புணர்வு செய்யப்பட்டுள்ளனர். அதனைச் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இத்தகைய சம்பவங்கள் தொடர்கின்றபோதும் தண்டிக்கப்படுவது குறைவாகவே உள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட மாணவிகளின் நலன்களை வடமாகாண கல்வி அமைச்சு மேற்கொள்ள வேண்டும். என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-4)

# ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிகழ்வு

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக நடைபெறும் கல்லூரியின் சர்வதேச பழைய மாணவர்கள் ஒன்றுகூடும் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரி அதிபர் அருட்திரு ஜே.எ.ஜேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசாவும் கௌரவ விருந்தினராக பழைய மாணவனும் தொழில் அதிபருமான ஜே.சுரேந்திரராஜும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-86)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமராட்சி வலயத்தின் பெருமை
மிக்க புகழ்பூத்த பாடசாலையாம்
ஹாட்லிக் கல்லூரியின்
புதிய அதிபராக இணைந்திருக்கும்

**தருமலிங்கம் முகுந்தன்**

அவர்களைப் பாராட்டுவதோடு,
அவர்தம் பணியும் அக்கல்லூரியும்
மேலும் பிரகாசிக்க
எங்களுடைய வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்: *மச்சான் குடும்பம்*
நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.




## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர்களான இ. பிரதீபன், பகீரதி, அபிராமி, சர்வேஸ்வரன் (ஈசா), சிவசங்கர் (சங்கர்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரன் **நடேசன் விக்னேஸ்வரன்** (விக்கி) அவர்களின் மறைவால் துயர் அடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு

**நண்பர்கள்:**
வளர்மதி முன்னேற்றக்கழகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



பிறப்பு- 28.09.1929 இறப்பு-20.06.2014

கடந்த 20.06.2014 இறைபதம் எய்திய எங்கள் கும்பத்தின் அன்புத் தெய்வம்

அமரர்

**குட்டியன் சின்னராசா** (நாயனார்)

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் எமது இல்லத்தில் இன்று பகல் 10.30 மணியளவில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**90, நாவற்காடு லேன்,**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**

குடும்பத்தினர்.

## இடம் மாற்றம்

இல.33. அரசடி வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த T.K.S. Enterprises ஸ்தாபனம். இல.350. நாவலர வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொதிகள் மற்றும் வீட்டுத் தளபாடங்களை மிக நம்பிக்கையுடன் கொண்டு வருவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

### T.K.S. Enterprises

கொழும்பு முகவரி
இல.220, கேசர் வீதி.
கொழும்பு-11
0112433679
0112336186

யாழ்ப்பாண முகவரி
இல.350, நாவலர் வீதி.
021 222 3509,
021 222 7904

## மரண அறிவித்தல்



### நடராசா மதியூகன்

பெரியதம்பிரான் வீதி வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மதியூகன் நேற்றுமுன் தினம் (18.07.2014) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் கோமலவதியின் அன்புக் கணவரும், டெலினாவின் அன்புத் தந்தையும், ஜெகதீசன் (பிரான்ஸ்), யசோதரன் (பிரான்ஸ்), சஜீவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (22.07.2014) செவ்வாய்க்கிழமை La maison Funerairede Villeneuve St. Georges Quigo Carrefour Jeam moulinuruedes Supeurs Pompiers Pde, Paris இல் இடம்பெறும்.

பெரியதம்பிரான் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.
077 9005589

தகவல்:
குடும்பத்தினர்.

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### பாலராணி பாலசிங்கம்

இருபாலை கட்டைப்பிராய் குளுக்கண்டி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலராணி பாலசிங்கம் நேற்று (19.07.2014) சனிக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - ராசமணி தம்பதியரின் அன்பு மகளும் ஆனந்தநடராசா, மனோரஞ்சிதம் (ராணி), விக்னேஸ்வரமூர்த்தி, ஜெயந்திரனின் (ஜெயம்) அன்புச் சகோதரியும் கேதீஸ்வரனின் (மான்குட்டி) சிறிய தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி மல்லிகாதேவி நாகராஜ சர்மா

துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி நாகராஜ சர்மா நேற்று (19.07.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசக் குருக்கள்-நல்லநாயகி தம்பதியரின் அன்பு மகளும், யோகேஸ்வரக் குருக்கள்-அன்னலஷ்மி தம்பதியரின் அன்பு மருமகளும், நாகராஜசர்மாவின் அன்பு மனைவியும், கௌரிசங்கர், உமாசங்கர், விஜயசங்கர், சங்கரணியா, உதயசங்கர் ஆகியோரின் அன்புத் தாயும், மதிவதனி, துஷ்யந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், மைத்திரேயின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துன்னாலை மத்தி, கரவெட்டி,**
T.P: 021 226 3483

(C/15479)(10)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கமுத்து நாகநாதி

(நாகம்மா)



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து (நாகம்மா) நாகநாதி (18.07.2014) வெள்ளிக் கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற நாகநாதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான இரத்தினம், பரமு, காங்கேசு மற்றும் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் திலகவதி(கட்டைக்காடு), குகதாசன்(சுவிஸ்), புவனேஸ்வரி(மீசாலை), யோகேஸ்வரி (சாவகச்சேரி பிரதேச சபை - கொடிகாமம்), கெங்காதரன் (சுவிஸ்), முருகமூர்த்தி (லண்டன்), காலஞ்சென்றவர்களான சகலகலாவல்லி, ஜெகதீஸ்வரன் மற்றும் குணவதனி(மீசாலை), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் விஸ்வலிங்கம் (கட்டைக் காடு), மகேஸ்வரி (சுவிஸ்), இராசேந்திரன்(மீசாலை), குமார் (லண்டன்), ராகுலா(லண்டன்), சூரியகுமார் (ப.நோ.கூ. சங்கம்-சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2014) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் பிற்பகல் 01.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (C/15478)(10)

தகவல்: குடும்பத்தினர்
தொ.இல: 0776259519

## திருமண சேவை

யாழ்.இந்து, கிறிஸ்தவ ஜாதகங்கள் உண்டு. உள்நாடு, வெளிநாடுகளில் உள்ளவர்கள் பொருத்தி பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்து

சகல தொடர்புகளுக்கும்
**க.திருச்செல்வம்**
திருநிறைவு விவாக பொருத்துனர்
கனையம் தோட்டம்
புலோலி வடக்கு, பருத்தித்துறை.
email : thiruchelvam1964@gmail.com
077 621 3832

(சி/15468)
(7.6.3)

## Photo Copy

தொகையான போட்டோ பிரதிகளுக்கு
இரண்டு பக்கத்துக்கும் இரண்டு ரூபாய்
யாழ். நகரின் மத்திய பகுதியில்
தொடர்புகளுக்கு:- 0772233308
மாணவர்களுக்கு முன்னுரிமை

## விற்பனைக்கு

NP - PG xxxx இலக்கமுடைய
MITSUBISHI/ DOUBLE CAB
36000 Km ஓடிய வாகனம்
விற்பனைக்கு உண்டு.
உற்பத்தி ஆண்டு 2011
தொடர்புக்கு: 0770129597

## வாகனம் உடனடி விற்பனைக்கு



சிறந்த நிலையில் HL xxxx
சுபாரு சம்பார் படி (Buddy)
வாகனம் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ளவும்:
077-6913328 : 077-2583494

## கடைகள் வாடகைக்கு

ஆறுகால்மடம் மானிப்பாய் பிரதான வீதியில் எட்டு பரப்பு காணியுடன் புதிதாக கட்டப்பட்ட நான்கு தொடர் கடைகள் 24 அடி அகலம் 40 அடி நீளம் கொண்ட உணவு விடுதி மற்றும் 12 அடி அகலம் 40 அடி நீளம் கொண்ட 3 கடைகள் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உள்ளது.

குறிப்பு:- கடைகள் மானிப்பாய் பிரதான வீதியில் உள்ளது. கடைக்கு மேல் இன்னும் ஓர் மாடி கட்டக்கூடியவாறு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கடைக்கு பின்பக்கம் இருவழி பாதையுடன் உங்கள் வசதிக்கேற்றவாறு கட்டடம் கட்டக்கூடியவாறு 5பரப்பு காணி உள்ளது.

தொடர்புகளுக்கு:-
ஜேர்மனி
00497113894879
00491521899 7832
இலங்கை (யாழ்ப்பாணம்)
077 6153786, 0213002187

## மரண அறிவித்தல்



### நடேசன் விக்கினேஸ்வரன் (விக்கி)

கொக்குவில் மேற்கு, மணியம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட நடேசன் விக்கினேஸ்வரன் (விக்கி) நேற்று (18.07.2014) வெள்ளிக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் நடேசன் - காலஞ்சென்ற கமலேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும் குமரேசன், தார்மினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நேற்று நடைபெறவில்லை. இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மணியம்பதி,**
**கொக்குவில் மேற்கு.**

**தகவல்:**
தி.நடேசன் (தந்தை).

## மாபெரும் ஆடித் தள்ளுபடி

அனைத்து விதமான அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்குத் தேவையான மர, இரும்பு, அலுமினிய, பிளாஸ்ரிக் தளபாடங்களை எங்குமில்லாதவாறு வியக்கத்தக்க விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.




* விஷேட விலைக்கழிவு
* இலவச விநியோகம்
* இலவசப் பொருட்கள்

இல: 15, சிவப்பிரகாசம் வீதி, தட்டதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 7892, 0773583879, 0778314201

# அரச ஊழியர்களுக்கு இலகு தவணை கொடுப்பனவுக்கு மோட்டார் சைக்கிள்




வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக (பொது) கூட்டுத்தாபனமானது எப்பொழுதும் அரச ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு செயற்படும் ஒரு அரச நிறுவனமாகும். அந்தவகையில் தொலைத் தொடர்பாடல் துறையில் புரட்சியை ஏற்படுத்தி அரச ஊழியர்களுக்காக குறைந்த கட்டணங்களை உள்ளடக்கியதாக 'உபஹார' திட்டத்தை அறிமுகப்படுத்தியதுடன் அதனைத் தொடர்ந்து மேலும் பல செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம். எமது நோக்கத்தை மேலும் ஸ்திரப்படுத்தும் வகையில் அரச ஊழியர்களின் மற்றுமொரு கனவை நனவாக்கிக் கொடுக்க எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரதீப் குணவர்தன தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கான தவணைக் கொடுப்பனவு முறையில் மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொடுக்கும் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாடு கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் இடம்பெற்றது. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே பிரதீப் குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

அரச ஊழியர்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு மோட்டார் சைக்கிள் முக்கிய தேவைப்பாடாக உள்ளது. அது அவர்களின் கனவாக உள்ளது. எனவே அவர்களின் அந்தக் கனவை நனவாக்கும் நோக்குடன் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் இலங்கையில் அனேகமானோரின் விருப்பத்துக்குரிய வர்த்தக நாமமாக திகழும் பஜாஜ் மோட்டார் வாகனங்களை இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்துடன் இணைந்து அரச ஊழியர்களுக்காக மோட்டார் சைக்கிளை இலகு தவணைக் கொடுப்பனவு முறைமைக்கு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

இத்த விஷேட திட்டத்தின் கீழ் பஜாஜ் மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யும் மோட்டார் சைக்கிளுக்கு 2,500 ரூபா விலைக்கழிவை வழங்க டேவிட் பீரிஸ் மோட் டார் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சகல பிரிவுகளிலும் தொழில் புரியும் அரச ஊழியர்கள் இத் திட்டத்தில் பயன்பெற முடியும். அத்துடன் மூன்று வருடங்கள் மீள் செலுத்தும் காலமாக வழங்கப்படும். இக்கடன் திட்டத்துக்குக் குறைந்த வட்டி வீதமே அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விஷேட அம்சமாகும் எனத் தெரிவித்தார். (த)

# எஸ்.எல்.ஐ.ஐ.ரி. மாணவர் கனடாவின் மெமோரியல் பல்கலைக் கழகத்துக்கு

முன்னணி உயர் கல்விச் சேவைகளை வழங்கிவரும் எஸ்.எல்.ஐ.ஐ.ரி. தனது வணிக முகாமைத்துவம் மற்றும் சர்வதேச வணிக முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டப் படிப்பு கற்கைகளை தொடரும் மாணவர்களின் ஒரு பகுதியினரைத் தமது இறுதியாண்டு கற்கைகளை கனடாவின் மெமோரியல் பல்கலைக் கழகத்தில் தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்ததாக அறிவித்துள்ளது.

நான்கு ஆண்டுகள் வரையிலான பட்டப்படிப்பு என்பது மாணவர்களுக்கு வணிக முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளதுடன், தற்போது சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு மாறுவதன் மூலம் சர்வதேச அனுபவத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது. எஸ்.எல்.ஐ.ஐ.ரி. அண்மையில் பல்கலைக்கழகங்களுக்கிடையில் மாணவர்களை மாற்றுவதற்கான புதிய உடன்படிக்கையொன்றில் கனடாவின் மெமோரியல் பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த முதல் கட்ட மாணவர்களின் மாற்றம் குறித்து அறிவிக்கும் நிகழ்வில் பேராசிரியர் லலித் கமகே, பேராசிரியர் சாம் கருணாரட்ன, பேராசிரியர் மற்றும் கல்வி ஆலோசகர் கலாநிதி. மஹேஷ கபுருபண்டார, கலாநிதி தீக்ஷன சுரவீர, வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் மான் மற்றும் கீர்த்தி ஜயசூரிய ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். இவ்வாறு வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு வெளிநாடுகளில் கல்வி பயிலும் போது தொழில் ஒன்றை மேற்கொள்ளும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றிய குறிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. மெமோரியல் பல்கலைக்கழகம், 4 பல்கலைக்கழக வளாகங்களைக் கொண்டுள்ளது. இதில் வெவ்வேறு கலாசாரங்களைப் பின்பற்றும் சுமார் 18,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றமை குறிப்பிடத்தக்கது. கனடாவில் அதிகளவு வெற்றிகரமாக இயங்கும் பல்கலைக் கழகங்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (த)



# உலக இரத்த தான தினத்தை அனுஷ்டித்த பீபிள்ஸ் லீசிங்

உலக சுகாதார தாபனத்தின் மூலம் 11 ஆவது சர்வதேச இரத்த தான தினத்தை அனுஷ்டிப்பதற்காக இலங்கை தெரிவு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் தேசிய இரத்த மாற்றீட்டு செயற்பாடுகளின் வெற்றிகரமான செயற்பாடுகளைக் கௌரவிக்கும் வகையில் இந்த தெரிவு அமைந்திருந்தது. 2004 ஆம் ஆண்டு முதல் உலக சுகாதார தாபனம் இந்த சர்வதேச நிகழ்வை முன்னெடுப்பதற்காக வெவ்வேறு நாடுகளை அவற்றின் தரம் மற்றும் மாற்றீட்டு சேவை ஆகியவற்றுக்கமைவாகத் தெரிவு செய்திருந்தது.

இவற்றில் தென்னாபிரிக்கா, பிரித்தானியா, தாய்லாந்து, கனடா, துபாய், ஆஸ்திரேலியா, ஸ்பெய்ன், ஆர்ஜென்ரீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளடங்கியிருந்தன.

உலக சுகாதார தாபனம் தனது அங்கத்துவ நாடுகளில் பாதுகாப்பான குருதி சேகரிப்பு கட்டமைப்பை 100 வீதம் தன்னார்வ கொடையாளர்களிடமிருந்து சேகரிக்க ஊக்குவிக்கிறது. 2013 ஆம் ஆண்டில் இலங்கை 100 வீதம் எனும் இலக்கை எய்தியிருந்தது.

சர்வதேச இரத்த தான தினத்தையும், பீபிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சியின் 18 ஆவது வருட பூர்த்தியையும் குறிக்கும் வகையில், நிறுவனத்தின் விளையாட்டு மற்றும் நலன்புரி சங்கத்தின் மூலம் நாடு முழுவதும் பரந்த குருதி விநியோக செயற்றிட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பு, கண்டி, அநுராதபுரம், பண்டாரவளை மற்றும் காலி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி, பீபிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் நிறுவனத்தின் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் இணைந்து இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்தனர். ஊழியர்கள் தன்னார்வ அடிப்படையில் முன்வந்து தமது பெறுமதி வாய்ந்த குருதியை இந்த திட்டத்துக்காக தானம் செய்திருந்தனர். நாடு முழுவதும் மொத்தமாக 600 பைன்ட்கள் குருதி சேகரிக்கப்பட்டிருந்ததுடன், இந்த பங்களிப்பு என்பது இலங்கையின் தேசிய குருதி மாற்றீட்டு சேவையின் வரவேற்பைப் பெற்றிருந்தது.

இலங்கையில் இரத்த தானம் செய்வதற்காக உயர் நுட்பமான முறைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இவற்றின் மூலம் எச். ஐ. வி, ஹெபடைடிஸ் பி, ஹெபடைடிஸ் சி, மலேரியா மற்றும் சைஃபில்ஸ் போன்றன குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பின்னரே மாற்றீட்டு நிலையத்துக்கு வழங்கப்படுவதாக தேசிய குருதி மாற்றீட்டு சேவையின் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். (த)

# கொமர்ஷல் வங்கியில் முகாமைத்துவ பணிப்பாளராக ஜெகன் துரைரட்ணம்

கொமர்ஷல் வங்கியின் புதிய முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் அனுபவம் மிக்க வங்கியாளர் ஜெகன் துரைரட்ணம் 2014 ஜூலை 17முதல் பதவியேற்றுள்ளார்.





தற்போது அந்தப் பதவியில் உள்ள ரவி டயஸ் ஓய்வு பெறுவதை அடுத்தே ஜெகன் துரைரட்ணம் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

துரைரட்ணம் தற்போது வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும், பிரதம செயற்பாட்டு அதிகாரியாகவும் பதவி வகிக்கின்றார். கடந்த ஒன்பது வருடங்களாக கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினராக உள்ள துரைரட்ணம்1982 ஆம் ஆண்டில் வங்கியில் இணைந்து கொண்டார்.

சர்வதேச வர்த்தகம், கடல் கடந்த வங்கித்துறை, கடன், செயற்பாடுகள், தகவல் தொழில்நுட்பம் என பல்வேறு துறைகளில் இவரது அனுபவம் வியாபித்துக் காணப்படுகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைமாணிப் பட்டதாரியான இவர் கொமர்ஷல் வங்கியின் பல்வேறு சிரேஷ்ட முகாமைத்துவப் பிரிவில் பணியாற்றியுள்ளார். பிரதிப் பொது முகாமையாளர், உதவி பொது முகாமையாளர்-சர்வதேச பிரிவு மற்றும் இறக்குமதி பிரிவு தலைவர் என்பன அவற்றுள் சில வாகும்.

ஏப்ரல் 2012இல் இவர் வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரியாகவும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். இந்தப் பதவிகளை அவர் வகித்த போது கூட்டாண்மை வங்கித் துறை, தனியார் வங்கிப்பிரிவு, தகவல் தொழில் நுட்பம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, கொள்வனவுகள் மற்றும் புதிய இடங்களைப் பெற்றுக்கொள்ளல், செயற்பாடுகள், வெளிநாட்டு நாணயப் பிரிவு, பயணங்கள் வங்கிச் செயற்பாட்டு மீளப்பெறல் என பல துறைகள் இவரின் பொறுப் பில் இருந்தன.

ஓய்வு பெற்றுச் செல்லும் ரவி டயஸ் 1974இல் வங்கியில் இணைந்து 2012 இல் அதன் உயர் பதவிக்கு வந்தார். (த)

# இலங்கையுடனான புதிய வர்த்தக முயற்சிகளுக்கு பெலாரஸ் ஆர்வம்

பெலாரஸ் குடியரசுக்கும் இலங்கைக்குமிடையே உத்தியோக பூர்வ இருதரப்பு உறவுக்கான வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான முதலாவது கூட்டு ஆணைக் குழு கூட்டத்துக்கான சந்திப்பு, கடந்த 09ஆம் திகதி கொழும்பில் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது.




இரு நாள்கள் இடம்பெற்ற (9-10 ஜூலை) இச்சந்திப்பில் கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன், பிரதி அமைச்சர் லஷ்மன் வசந்த பெரேரா, அமைச்சின் பிரதிநிதிகள், பெலாரஸ் குடியரசின் வெளியுறவு பிரதி அமைச்சர் வாலண்டின் பி. ரைபெக்கொவ், இலங்கைக்கான பெலாரஸ் நாட்டின் உயர்ஸ்தானிகர் விட்டாலி பிறிமா, யுரேசிய பொருளாதார ஒன்றியத்தின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் பெலாரஸ் அரசின் வலுவான உத்தியோகபூர்வ 20 அங்கத்துவ பிரதிநிதிக் குழுவினரும் அமைச்சர்களும் இந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த வர்த்தகசந்திப்பில் பங்கேற்றனர்.

பெலாரஸ் குடியரசின் வெளியுறவு பிரதி அமைச்சர் வாலண்டின் பி. ரைபெக்கொவ உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாம் எப்போதும் சர்வதேச நாடுகளுடனான கூட்டு பொருளாதார ஆணைக்குழு அமர்வுகளுக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். பெலாரஸ் மற்றும் இலங்கை இடையிலான இருதரப்பு வர்த்தக அளவுகள் நடைமுறையில் புறக்கணிக்கப்பட்டுள்ளன என நீங்கள் கூறியது முற்றிலும் சரி. இதன் விளைவாக, அறிந்துகொள்ளமுடியாத மிகப் பெரிய வர்த்தக சாத்தியம் காணப்படுகின்றது. இலங்கை வளர்ந்து வரும் ஒரு வர்த்தக பங்காளி, இலங்கை தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள ஒரு மிக முக்கியமான பங்காளி என்று பெலாரஸ் கருதுகிறது. நிச்சயமாக நாம் பல்வேறு பிரிவுகளில் இலங்கையுடன் நீண்ட கால வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு ஆர்வமாக உள்ளோம். இது உலகளவில் எமது வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை பேணுவதற்கான முக்கியமான திருப்பு முனையாக எங்களுக்கு அமையும்- என்றார் வெளியுறவுபிரதி அமைச்சர். (த)

## LEADING AIRLINE IN JAFFNA HAVING THE FOLLOWING VACANCIES



### Ticketing Assistant

- ✓ Female or Male aged below 25
- ✓ Should be Fluent in English
- ✓ Computer Knowledge is Necessary
- ✓ Good Communication Skills
- ✓ Previous experience in this field is an added advantage
- ✓ Salary Negotiable.

Please forward your resume giving details of two non related referees with Recent photograph with in 5 days to the following address.

Please do not apply if you are not willing to work in Jaffna

METRO TRAVELS & TOURS (PVT) LTD
#345, Galle Road, Colombo 04.
Email-info@metrotravels.lk (c 5459)
IATA ACCREDITED AGENT

## உயர் தொழில் நெறிமுறையுடனும், சிறந்த குழுவுடனும் முன்னேற்றத்தை நோக்கி..........

**MBSL** காப்புறுதி நிறுவனமானது மிகக்குறுகிய மூன்று வருட காலத்தில் ஒரு பில்லியன் என்ற இலக்கை அடைந்த பல்வேறுபட்ட வழிகளில் மிகவும் வேகமாக முன்னேறி வரும் ஒரு நிறுவனமாகும் இந்நிறுவனமானது மிகவும் துடிப்புள்ள இளம் திறமையாளர்களுக்காக ஒரு வாய்ப்பினை வழங்க முன்வந்திருக்கின்றது. இந்நிறுவனத்தின் வெற்றியாளர் குழுவுடன் இணைந்து உங்களை உயர்த்திட ஒரு பொன்னான வாய்ப்பு...

எமது நிறுவனத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கு குறிப்பிட்ட இடங்களில் இளம் துடிப்புமிக்க திறமையான ஆளணி தேவைப்படுகின்றது. ஆகவே எமது வெற்றியாளர் குழுவுடன் இணைய விரும்புபவர்கள் தாமதியாது எம்மைத்தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்கிக் கொள்ளுங்கள்.

**01. மீள்புதுப்பித்தல் அலுவலர் பணி:**

நிறுவனத்தின் செயலிழந்த காப்புறுதிப் பத்திரங்களை அதற்குரிய உரிமையாளர்களைச் சந்தித்து மீளவும் செயற்படு நிலைக்கு கொண்டுவரல்.

வேண்டப்படும் தகுதிகள்:

- காப்புறுதித்துறையில் முன்னனுபவம்
- வாடிக்கையாளர்களுடன் சரளமாக பழகும் பாங்குடன் தனிப்பட்ட ரீதியில் காப்புறுதிப்பத்திரங்களின் செயற்படு நிலையை உயர்வாக வைத்திருக்கும் தன்மை
- இலங்கை காப்புறுதிச்சபையின் ஆயுள் காப்புறுதி பரீட்சையில் சித்தி

**02. காப்புறுதி உதவியாளர் (பயிலுநர்)**

விண்ணப்பதாரி க.பொ.த உயர்தர பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் கணினி மயப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் வேலை செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பதுடன் , ஆங்கில மொழியில் தொடர்பாடல் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**03. விற்பனை முகாமையாளர் - பொதுக்காப்புறுதித்துறை**

குறிப்பிட்ட விண்ணப்பதாரி 30 வயதுக்குட்பட்டவராய் இருப்பதுடன் காப்புறுதித் துறையில் 05 வருட அனுபவத்தை கொண்டவராய் இருத்தல் வேண்டும். சந்தைப்படுத்தல் மற்றும் காப்புறுதி தொடர்பான மேலதிக தகைமைகள் கருத்தில் கொள்ளப்படும்.

**04. உதவி விற்பனை முகாமையாளர்**

குறிப்பிட்ட விண்ணப்பதாரி 30 வயதுக்குட்பட்டவராய் இருப்பதுடன், காப்புறுதித் துறையில் 03 வருட அனுபவத்தை கொண்டவராய் இருத்தல் வேண்டும். சந்தைப் படுத்தல் மற்றும் காப்புறுதி தொடர்பான மேலதிக தகைமைகள் கருத்தில் கொள்ளப் படும்.

**05. சிரேஷ்ட விற்பனை அதிகாரி**

குறிப்பிட்ட விண்ணப்பதாரி 25 வயதுக்குட்பட்டவராய் இருப்பதுடன் காப்புறுதித் துறையில் ஆகக்குறைந்தது 02 வருட அனுபவத்தை கொண்டவராய் இருத்தல் விரும்பத் தக்கது.

**06. விற்பனை அதிகாரி - பொதுக்காப்புறுதித்துறை**

குறிப்பிட்ட விண்ணப்பதாரி 25 வயதுக்குட்பட்டவராய் இருப்பதுடன் காப்புறுதித் துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவத்தை கொண்டவராய் இருத்தல் விரும்பத்தக்கது.

**07. சிரேஷ்ட கனிஷ்ட தனிப்பட்ட விற்பனை அதிகாரிகள் (ஆயுள் காப்புறுதித்துறை)**

இலங்கை காப்புறுதி நிறுவகத்தால் நடத்தப்படும் ஆயுள் காப்புறுதி முகவர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் சித்தியோடு காப்புறுதித்துறையில் ஆகக்குறைந்தது 02 வருட அனுபவத்தை கொண்டவராய் இருத்தல்வேண்டும்.

**08. தனிப்பட்ட விற்பனை அலுவலர் (ஆயுள் காப்புறுதித்துறை)**

இலங்கை காப்புறுதி நிறுவகத்தால் நடத்தப்படும் ஆயுள் காப்புறுதி முகவர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சித்தியோடு காப்புறுதித்துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவத்தை கொண்டவராய் இருத்தல்வேண்டும்.

**09. விற்பனை அலுவலர் (பொதுக்காப்புறுதித்துறை) /விற்பனை அபிவிருத்த் அலுவலர் (ஆயுள் காப்புறுதித்துறை)**

க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

**கிளை வலையமைப்புக்கள்:**

* கொழும்பு, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்ட, அம்பாறை, ஆனமடுவ, அனுராதபுரம், அவிசாவளை, பதுளை, பலாங்கொடை, பண்டாரவளை, மட்டக்களப்பு,சிலாபம், தம்புள்ளை, எம்பிலிப்பிட்டிய, காலி, கம்பகா, ஹொரண, ஹொரவப்பொத்தான, யாழ்ப்பாணம், ஜா-எல, கல்பிட்டி, களுத்துறை, கண்டி, கேகாலை, கிளிநொச்சி, கிரிபத்கொட, குளியாப்பிட்டி, குருணாகல், மகியங்கனை, மன்னார், மாத்தளை, மஹஓயா, மாத்தறை, மொனராகலை, முல்லைத்தீவு, நீர்கொழும்பு, நெல்லியடி, நிகவெரட்டிய, நுவரெலியா, பதவியா, பாணந்துறை, பொலன்னறுவவை, புத்தளம், புறக்கோட்டை, இரத்தினபுரி, தம்புத்தேகம, தலவத்துகொட, திஸ்ஸமஹராம, திருகோணமலை, வாழைச்சேனை, வவுனியா, வத்தளை, வெலிமடை, வென்னப்புவ.
* தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான கொடுப்பனவுகளுடன் விஷேட கொடுப்பனவுகள், மேலதிக கொடுப்பனவுகள், தனிப்பட்ட திறைமைகளுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் மருத்துவக்கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படும்.
* எமது வெற்றியாளர் குழுவுடன் இணைந்து நீங்கள் உங்கள் வாழ்க்கையை மேம்படுத்த விரும்பினால் தாமதியாது இவ்விளம்பரம் வெளிவந்த 10 நாள்களுக்குள் தங்கள் உறவினரல்லாத இருவரின் உறுதிப்படுத்தலுடன் தங்கள் சுயவிவரக்கோவையை எமது careers@mbslinsurance.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது கீழே குறிப்பிடப்பட்ட எமது நிறுவன முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு வேண்டுப்படுகின்றீர்கள். தாங்கள் விண்ணப்பிக்கும் பணிநிலை வேலைசெய்ய விரும்பும் இடம் என்பன குறிப்பிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

Manager-HR & Administration
No. 122, Kew Road, Colombo - 02.
email - careers@mbslinsurance.lk
web: www.mbslinsurance.lk (சி.15441) (46.8.3)

### விற்பனைக்கு

NP QV-xxxx இலக்கமுடைய மிகவும் நல்ல நிலையிலுள்ள முச்சக்கரவண்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 752 1585, 077 717 6500

### வீடு வாடகைக்குண்டு

மானிப்பாய் வீதியிலிருந்து ஆரம்பமாகும் வெள்ளாந்தெருவில் இருக்கும் மேல்மாடி 3அறைகள் மற்றும் சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு. தொழில் புரியும் (கணவன், மனைவி)குடும்பம் விரும்பத்தக்கது.
(50937) (12.3.6) தொடர்பு: 077 789 3125

### காணிகள் விற்பனைக்கு

கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கு முன்பாகவும் இராமாவில் கந்தசாமிகோயிலுக்கும் இடையில் A9 வீதியில் காணிகள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 460 5329 (49984) (45.6.3)

### மணமகள் தேவை

Cashier Age 47 number-3 சித்திரை, கன்னிdecent UK இல் Divorced தற்பொழுது யாழ்ப்பாணத்தில் வசிப்பவர். office work Hindu or NRC பெண் Partner கீழ் உள்ள விலாசத்திற்கு அனுப்பவும்.
விளம்பர இல.4506,
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

அற்லஸ் சுப்பர் விசேட நீண்ட காலபாவனையுடைய பற்றறியுடன் பைசிக்கிள் புத்தம் புதிய நிலையில். ரூபா 70, 000 இற்கு. முதல் வருபவருக்குக் கொடுக்கப்படும். தூர இடங்களுக்கு இலகுவாகப் பயணிக்கலாம். வைத்தியரின் குறுகிய காலப் பாவனை.
தொடர்பு: 077 667 9433

### அறைகள் வாடகைக்கு

கொழும்புத்துறை, 26 விபுலானந்தர் வீதியில் உள்ள வீட்டில் அறைகள் வாடகைக்குண்டு. மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், வங்கி அலுவலர்கள் விரும்பத்தக்கது. யாழ். கச்சேரி, சென்ஜோன்ஸ், சுண்டுக்குளி, தொழில்நுட்பக்கல்லூரிக்கு அண்மையானது.
தொடர்பு: 072 605 1078, 021 492 5202

### வேலையாள்கள் தேவை

**K.R.S.**
உணவு உற்பத்தி நிலையத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.
கே.கே.எஸ்.றோட்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(50079) (12.3.6) Tel: 021 492 1886

### வாகனம் விற்பனைக்கு

- DIMO அலுமினியம் பொடி அடிக்கப்பட்டது.
- ISUZU லொறி
- லேடன் வாகனம் அலுமினியம் பொடி அடிக்கப்பட்டது.
- லொறி ஆறுவீல் கென்டேயினர்

தொடர்பு: 077 072 6210

### J.C.B (பைக்கோ) வாடகைக்கு



குறிப்பு : .
போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.
தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (சுன்னாகம்)
077 984 7285 (பருத்தித்துறை)
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
(50093) (4.6.3) 207, K.K.S.வீதி, சுன்னாகம்.

### காணி தேவை

தெல்லிப்பழைச் சந்தியை அண்மித்ததாக காங்கேசன்துறை வீதியை முகப்பாகக் கொண்ட இரண்டு பரப்புக் காணி தேவை.
தொடர்பு: 077 087 9977

### மணமகள் தேவை

1984 ஆம் ஆண்டு, சதயம், செவ்வாய் தோஷமற்ற, 5' 8'' உயரம், கனடா பிரஜாவுரிமை M.C.EILCT. Engineer உடைய மணமகனுக்கு அழகிய, படித்த, வசதிகள் உடைய மணமகள் தேவை.
தொடர்பு: 076 535 6714

### விற்பனைக்கு DEEP FREEZER

மிகவும் நல்ல நிலையில் உள்ள HAIER டீப்பிறீசர் B.D 14 ( 2½' X 2½' )
(50040) (12.3.6) தொடர்பு:021 321 9781

### காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் 11 பரப்பு வெறுங்காணியும், அதற்கு அப்பால் நெற்பரப்பு - 16 கொண்ட தோட்டம் / நெற் காணியும் விற்பனைக்குண்டு. (விலை பேசித் தீர்மானிக்கப்படும்)
(50047) (12.3.6) தொடர்பு: 077 948 5703

### வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ISUZU - ELF 350 மொடல், White அலுமினியம் பொடி, கன்டர் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 773 8715

### வாடகைக்கு உள்ளது

யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகளுடன் 5 அறைகளுடன் 10 கார் தரிக்கக் கூடிய வசதியான வீடு அலுவலகப் பாவனைக்கு வாடகைக்கு உள்ளது. NGO விரும்பத் தக்கது.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள
தொடர்பு: 021 222 4616

### ஆஸ்பத்திரி உபகரணங்கள் விற்பனைக்குண்டு

Ultra Sound (ஸ்கானிங்) ECG Machine, பரிசோதனைக் குழாய்கள், Beds, கண்ணாடி அலுமாரி மற்றும் ஆஸ்பத்திரிப் பாவனைக்குத் தேவையான சகல தளபாடங்களும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 021 222 6180

### வீடு வாடகைக்கு

நாவலர் வீதியில் நான்கு அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. அசைவம் உண்ணாதவர்கள் விரும்பத்தக்கது. அலுவலகங்களுக்கு உகந்தது. (K.K.S.வீதியை அண்மித்துள்ளது)
(50076) (12.3.6) தொடர்பு: 072 141 5262

### G.S MARBLES & GRANITES

மாபிள்ஸ், கிறனைற் கற்கள்
ஒரு சதுர அடி 1000/= -2000/= வரை விற்பனைக்குள்ளது.
தொடர்பு: 077 155 4628, 072 129 9067
யாழ்ப்பாணம்.
web: www.kgexporters.com

0777302882
A1 B1 B2
Knowledge Universe Sri Lanka
Spoken IELTS
http://edu.kugroup.info
**London English College**
Call Now - 021-3208342
No 626,1/1, K.K.S Rd,Jaffna

### யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கம் (வரையறுக்கப்பட்டது) பதிவு இல - 1209

### பங்குதாரர்களுக்கான அறிவித்தல்

யாழ்/ஐக்கிய வியாபார சங்க ஆண்டு பொதுக் கூட்டம் விரைவில் கூட இருப்பதால் ஐக்கிய வியாபார சங்கத்தின் பங்குதாரர்கள் அனைவரையும் தமது பங்குத் தொகையையும், தற்போதைய முகவரியையும் உறுதிப்படுத்தி கடித மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**பொதுக்கூட்டத்துக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

இ.சபேசன், காரியதரிசி.
530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(50078) (12.3.6) தொ.பே.இல: 021 222 9979
சி.வசித்தீஸ்வரன், நிர்வாக இயக்குநர்.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 176

## குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பது எவ்வாறு?

**எனக்கு இப்போது 30 வயது. நான் வீட்டுப் பணிப் பெண்ணாக இருக்கின்றேன். ஒரு வாரத்துக்கு முன்னர் எனக்கு முதலாவது குழந்தை பிறந்தது. தற்போது தாய்ப்பால் சுரப்பது குறைவாக இருக்கின்றது. இதற்கு ஏதேனும் காரணங்கள் உண்டா? தாய்ப்பால் சுரப்பை அதிகரிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?**

பொதுவாகப் பல தாய்மார் தமது பாற்சுரப்புக் குறைவாக உள்ளது என்றெண்ணிக் கவலைப்படுகின்றனர். ஆனால் உண்மை அப்படி அல்ல. உங்களின் குழந்தையின் விகிதாசாரமான நிறை அதிகரிப்பு, போதுமானளவு சிறுநீர் கழித்தல், அடிக்கடி பாலூட்டப்படல் ஆகியன உரிய அளவு பாற்சுரப்பை எடுத்துக்காட்டும் சான்றுகளாகும்.

பாற்சுரப்புக் குறைவை ஏற்படுத்தும் காரணிகளாக மாப்பால், பழச்சாறு, தண்ணீர் போன்றவற்றால் பாலூட்டல் பிரதியீடு செய்யப்படுதல், பாலூட்டப் பயன்படுத்தப்படும் சூப்பிகளால் தாயின் முலைக்காம்புகள் மீதான சிசுவின் நாட்டமின்மை, முலைக்காம்புக் கவசம், சீரான கால இடை வெளியிலான திட்டமிடப்பட்ட பாலூட்டல், உறங்கும் குழந்தை சிசு பாலுறிஞ்சலை நிறுத்தமுன் பாலூட்டலை நிறுத்தல், அதிகரித்த பாற் கொழுப்பு, ஒரு மார்பகத்தை மட்டும் பாலூட்டலுக்குப் பயன்படுத்தல் போன்றவை அடையாளப்படுத்தப்படுகின்றன.

இனி பாற்சுரப்பை அதிகரிக்கும் வழி வகைகள் பற்றிப் பார்ப்போம். பாற்சுரப்பானது தேவைக்கேற்றவாறே நிர்ணயிக்கப்படுகின்றது. உங்களுக்கு அதிகரித்த பால் தேவைப்படுகையில் பாற்சுரப்பு அதிகரிக்கும். உங்கள் சிசுவுக்கு மிகத் திறனுடன் பாலூட்டுவதை உறுதிப்படுத்தவும். சிசுவால் அதிகளவு பால் உறிஞ்சலின் மூலம் அகற்றப்படுமிடத்து மேலும் மேலும் பாற்சுரப்பு அதிகரிக்கும்.

பாலூட்டலின் போது குழந்தையின் தலையும் உடலும் ஒரே நேர்தளத்திலிருத்தல், குழந்தையின் முகம் தாய் மார்பகத்துக்கும் முலைக்காம்புக்கும் எதிராக இருத்தல், குழந்தையின் மேலுதடு அல்லது மூக்கு தாயின் முலைக்காம்புக்கு எதிராக இருத்தல் ஆகியன பாற்சுரப்பைக் கூட்டும். அடிக்கடி தாய் குழந்தைக்குப் பால் ஊட்டவும். பகலில் 1½-2 மணித்தியாலத்துக்கு ஒரு முறையும் இரவில் மூன்று மணித்தியாலத்துக்கொரு தடவையும் பாலூட்டுதல் சிறந்தது.

பாலூட்டும் ஒரு தடவை ஒரு பக்க மார்பகத்தை முழுமையாகப் பயன்படுத்தவும். மறுமுறை மறுபக்க மார்பகத்தைப் பயன்படுத்தவும். பாலூட்டலுக்குச் சூப்பிகளையும் போத்தலையும் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். குழந்தைக்கு முதல் ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பால் மட்டும் கொடுக்கவும். திண்ம திரவ உணவுகளைத் தவிர்க்கவும்.

போதுமான ஓய்வும் உறக்கமும் பாலூட்டும் தாய்க்கு மிக அவசியம். மன அமைதியும் திருப்தியும் பாலூட்டலை அதிகரிக்கும். போதுமானளவு சுத்தமான நீரையும் சமச்சீரான போசணையுடைய உணவையும் உள்ளெடுக்கவும் (புரதம், கல்சியம்) பாலூட்டலுக்கு இடையிலான நேரத்தில் பம்பிகளைப் பயன்படுத்தி மேலதிகமாக மார்பகங்களில் தேங்கியுள்ள பாலை அகற்றல் அதிகளவு பாலுற்பத்தியைத் தூண்டும்.

குழந்தைக்குப் பசியெடுக்கும் போது பாலூட்டவும், மார்பகங்கள் பாலினால் நிரம்பும்வரை காத்திருக்க வேண்டாம். குழந்தையுடனான நேரடித் தொடுகையானது நீண்டதும் அடிக்கடி நிகழும் பாலூட்டலைத் தோற்றுவிக்கும். பாலூட்டும் நேரத்தை உங்கள் சிசுவே தீர்மானிக்கட்டும். ஒரு பக்க மார்பின் பாலின் அளவு குறையும் போது மறுபக்க மார்பில் பாலூட்டலைத் தொடரவும். இரவில் குழந்தையை அருகில் பேணுவதுடன் அடிக்கடி பாலூட்டலை மேற்கொள்ளவும். பகலிலும் நேரடித் தொடுகையைப் பேணவும். இளஞ் சூடானதுணியை மார்பகங்களின் மேல் இறுக்கமாகக் கட்டவும். விரல் நுனிகளால் மேலிருந்து கீழாக மார்பங்களை வருடி விடவும். முலைக்காம்பைச் சுற்றி வட்ட வடிவமாக மார்பகங்களை அழுத்திவிடவும். இறுக்கமாக மூடியுள்ள கையை மார்பின் மேல் வைத்து முலைக்காம்பை நோக்கிய வண்ணமாக உருட்டுதல் வேண்டும். பாலூட்டும் தாய் நாற்காலியில் அமர்ந்து முன்புறம் குனிந்து தனக்கு முன்னுள்ள மேசையின் மேல் தலையை வைத்து ஓய்வாக இருக்க வேண்டும். மார்பகங்கள் தளர்வாகத் தொங்கியபடியிருக்க வேண்டும். பின்கழுத்திலிருந்து தோள் பட்டைகளுக்குக் கீழான பகுதிவரை முள்ளந்தண்டின் இரு பக்கங்களிலும் பெருவிரல்களால் அழுத்திவிடல் ஒரு சிறந்த பயற்சியாகும்.

இந்த முறைகள் பயன்தராதவிடத்து வைத்திய ஆலோசனையை நாடி மருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலம் பயன் பெறலாம்.

மருத்துவர் ஆர்.பரமேஸ்வரன்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# உள்ளங்கை, பாதக் கசிவு

## (Hyper hidrosis)



உடலின் ஒரு சீர்த்திடனிலையின் ஒரு அங்கமே வெப்பச் சீராக்கல், சாதாரண உடல் வெப்பச்சீராக்கலில் வியர்வைச் சுரப்பிகளின் பங்கும் குறிப்பிடத்தக்களவில் அமைகின்றது. சாதாரண உடல் வெப்பச்சீராக்கலுக்கு மேலதிகமாக சிலரில் அதிகமான வியர்வை சுரக்கும் நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறு அதிக வியர்வை வெளியேற்றம் உடையோர் உளவியல் ரீதியில் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். நாளாந்த வேலைகளில் நெருக்கீடுகளை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக எழுது கருவியைத் தொடர்ந்து கையாள்வதில் கூட சிரமத்தைச் சந்திக்கின்றனர். அது மட்டுமன்றி அதிக வியர்வை ஏற்படும் இடங்களில் பக்றீரியாத் தொற்று ஏற்பட்டு துர்நாற்றம் ஏற்படுவதனாலும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அடிப்படையான உள்ளங்கை, பாதக் கசிவு உடையவர்களில் குறிப்பிட்ட பகுதிகளில் அதாவது உள்ளங்கை, பாதம் மற்றும் கமக்கட்டுப் பகுதிகளில் அதிக வியர்வைச் சுரப்பு காணப்படும். இருபுறமும் பொதுவாக சமாந்தரமாகவே வியர்த்திருக்கும். வாரமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது இவ்வாறான வியர்வை அதிசுரப்பு காணப்படும். பொதுவாக இவ்வாறான நிலைமை 25 வயதுக்கு முன்னதாகவே ஆரம்பித்திருக்கும். நித்திரையில் இவ்வாறான வியர்வை நிலைமை நிறுத்தப்பட்டிருக்கும். 65 வீதமானவர்களில் குடும்ப அங்கத்தவர் ஒருவர் இந்தவகை நோய் நிலைமையால் பாதிக்கப்பட்டிருப்பார்.

இந்த வகை வியர்வை அதிசுரப்பு நிலைமை எல்லா வயதினரிலும் ஏற்படலாமாயினும், பதின்ம பராயத்தினரிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. சிறுவர்களில் உள்ளங்கைகள் மற்றும் பாதங்களில் பூப்பின் பின் கமக்கட்டுகளிலும் இவ்வாறான வியர்வை அதிசுரப்பு காணப்படுகின்றது. ஆண்களைவிட பெண்களே சற்று அதிகமாக இந்த நிலைமையால் பாதிக்கப்படுகின்றனர்.


ஏன் இவ்வாறு ஏற்படுகின்றது? இவர்களிலும் மற்றையோரைப் போன்றே எண்ணிக்கையில் சமனான அளவு வியர்வைச் சுரப்பிகள் இருப்பினும் அவற்றால் உருவாக்கப்படும் வியர்வைச் சுரப்பு மற்றையோருடன் ஒப்பிடும் போது அதிகமாகக் காணப்படுவதுடன் இந்த வகை அதிக வியர்வை சுரக்கவல்ல வியர்வைச் சுரப்பிகள் உள்ளங்கை பாதம், கமக்கட்டு பகுதிகளில் செறிந்திருக்கின்றன. இந்த வகை வியர்வைச் சுரப்பிகள் உலர்கால நிலை, மன அழுத்தம், உடற்பயிற்சி மற்றும் சிகரெட், மதுபாவனை, உறைப்பான உணவு உண்ணுதல் என்பவற்றின் போது கிட்டத்தட்ட 10லீற்றர் வரையான வியர்வையைக் கூடச் சுரக்க முடிவதுண்டு. இவ்வாறான உள்ளங்கை, பாத கசிவினால் அவதியுறுவோர் இதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைத் தவிர்க்க வேண்டும். அதிகம் உணர்ச்சிவசப்படுத்தலையும் மன அழுத்தம் தரவல்ல சந்தர்ப்பங்களையும் இயன்றளவில் தவிர்க்க வேண்டும்.

உறைப்பான உணவுகள், சிகரெட், மதுபானம் பாவித்தல் என்பவற்றையும் தவிர்த்தல் வேண்டும். இயற்கை நாரிலான தளர்வான ஆடைகளையே அணிவதற்காகத் தெரிவுசெய்ய வேண்டும். இந்த வகை அடிப்படையான உள்ளங்கை பாதக் கசிவுடையோர் அலுமினிய குளோரைட் தயாரிப்புக்களை அதிசுரப்பு வியர்வை உடைய இடங்களில் பூசுவதன் மூலம் குணப்படுத்தலாம். எனினும் இது நிரந்தரத் தீர்வாகாது. சிலருக்கு பூசுமிடங்களில் கடி ஏற்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. வாழ்க்கைமுறை மாற்றம் அலுமினிய குளோரைட் தயாரிப்புப் பாவனையின் பின்னரும் அதிசுரப்பு வியர்வை நிலைமை இருப்பின் தோல் வைத்திய நிபுணரின் ஆலாசனை பெறுவது அவசியமானதாகும்.

குறிப்பிட்ட பாகங்கள் மட்டுமன்றி உடல் முழுவதும் கடுமையாக வியர்க்கும் தன்மை இரவு நேரத்தில் வியர்த்தல், திடீர் நிறை இழப்பு, நெஞ்சுப்படபடப்பு போன்ற நோயறிகுறிகள் இருப்பின் உடனடி வைத்திய ஆலோசனை பெற வேண்டியது அவசியமாகும். ஏனெனில் மேற்கூறிய அறிகுறிகள் உடலில் வேறு நோய்களின் தாக்கம் ஏற்பட்டு அந்த நோய்த்தாக்கத்தின் விளைவினாலேயே அதிக வியர்வை சுரத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்தியம்பவல்லன. அதாவது காசநோய், மலேரியா போன்ற தொற்று நோய்கள் ஏற்படும் போது சில வகை மருந்துகளாலும், நீரிழிவு, கேடயச் சுரப்பியின் அதிசுரப்பு நிலை (Hypethyrodism) மற்றும் சில அகஞ்சுரப்பிகளில் ஏற்படும் நோய் நிலைமைகள் (Hypethyrodism,phalochromoaytoma) சில வகைப் புற்றுநோய் (Lymphoma) இதய செயலிழப்பு, பதற்றம் (Anxiety) பாரிசவாதம், முண்ணான் பாதிப்பு ஏற்படல், மாதவிடாய் நிறுத்தம் ஏற்படல் போன்ற நிலைமைகளிலும் அதிகமான வியர்வை சுரத்தல் காணப்படும்.

உள்ளங்கை, பாதக் கசிவு தவிர்த்து மேற்படி நோயறிகுறிகளும் இருக்கும் பட்சத்தில் வைத்திய ஆலோசனையை நாடுதல் நன்று.





மருத்துவர் பு.தேவரஞ்சனா,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மலேசிய விமானம் மீதான தாக்குதலால் தீவிரமடையும் உக்ரைன் பிரச்சினை

உக்ரைனில் பிரிவினைவாதிகளுக்கு ரஷ்யா வழங்கிவரும் ஆதரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விதிக்கப்பட்ட தடைகளை அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் விரிவுபடுத்தியுள்ள சமயம் மலேசிய எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் விமானமொன்று உக்ரைன் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டிருப்பது உக்ரைன் பிரச்சினை சர்வதேச நெருக்கடியாக உருவெடுக்கும் ஆபத்தைத் தோற்றுவித்துள்ளது. உக்ரைன் பிரச்சினையில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ரஷ்யாவுமே நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தன. மலேசிய விமானம் சுடப்பட்டதையடுத்து இதுவரை அங்குள்ள பிரச்சினையில் கவனம் செலுத்தாதிருந்த சர்வதேச நாடுகளின் பார்வை உக்ரைன் பக்கம் திரும்பியுள்ளது.
நெதர்லாந்தின் அம்ஸ்டர்டாம் நகரிலிருந்து கோலாலம்பூர் நோக்கிப் பயணித்த எம்.எச்.17 ரக மலேசிய விமானமே நேற்றுமுன்தினம் 298 பேருடன் சென்று கொண்டிருக்கும்போது சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது. உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் கிழக்கு உக்ரைனில் இந்த விமானம் பறந்துகொண்டிருந்தபோது ரஷ்ய எல்லைக்கு 50 கிலோ மீற்றர் தூரத்தில் திடீரென தாழ்வாகப் பறந்து பின்னர் தீப்பிடித்து எரிந்து தரையில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. விமானம் வீழ்ந்து நொருங்கிய பகுதி ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் நிலைகொண்டுள்ள கிழக்கு உக்ரைனின் ஷக்டார்ஸ்க் நகருக்கு அருகில் உள்ளது. கடந்த சில வாரங்களில் உக்ரைன் இராணுவ விமானங்கள் கிளர்ச்சியாளர்களால் சுட்டுவீழ்த்தப்பட்ட பகுதி இது.
மலேசிய விமானம் சுடப்பட்டதற்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை. சுடப்பட்ட சமயம் ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையிலான பிரதான வான் பாதையில் இந்த விமானம் பறந்துகொண்டிருந்தது என்று கூறப்படுகிறது. யுத்த பிரதேசங்களுக்கு மேலால் பறப்பதை விமானி தவிர்த்திருக்கலாம். தவிர்த்திருந்தால் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்க மாட்டாது. நான்கு மாதங்களுக்கு முன் கோலாலம்பூரிலிருந்து சீனத் தலைநகர் பெய்ஜிங் நோக்கி 239 பயணிகளுடன் பறந்துகொண்டிருந்த மலேசியாவின் எம்.எச். 370 ரக விமானம் தென் சீனக் கடலில் காணாமற் போனது. அந்த விமானத்திற்கு என்ன நடந்தது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. அதன் மர்மம் நீடிக்கிறது. இப்படியான நிலையில் மற்றொரு மலேசிய விமானம் வீழ்ந்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. உக்ரைனில் வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியில் அப்பாவிப் பயணிகளின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.
வல்லரசு நாடுகள் ஒன்றும் இப்பொழுது நேருக்கு நேர் மோதிக்கொள்வதில்லை. தமது பலத்தைக் காட்ட மற்றொரு நாட்டைத்தான் இவை போர்க் களமாகத் தேர்ந்தெடுக்கின்றன. அதில் பலிக்கடாவானதற்கு நல்லதோர் உதாரணம் சிரியா. இப்பொழுது உக்ரைனும் இணைந்துகொண்டுள்ளது. சிரியாவின் ஆட்சியாளர்களுக்கு ரஷ்ய ஆதரவு இருக்கிறது. சிரிய எதிரணியினருக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஆதரவளிக்கின்றன. இரு பகுதியினரினதும் பலப்பரீட்சையில் பல்லாயிரக்கணக்கான சிரிய மக்கள் உயிரிழந்துள்ளனர். உக்ரைனிலும் இதே நாடுகள் தான் பலப்பரீட்சை நடத்துகின்றன.
உக்ரைன் பிரச்சினையில் மலேசியா சம்பந்தப்படவில்லை. அப்படி இருந்தும் உக்ரைன் பகுதியில் மலேசிய விமானம் சுடப்பட்டுள்ளது. இது தற்செயலான ஒன்றாகவும் இருக்கலாம். அல்லது உக்ரைன் பிரச்சினையில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க - பிரச்சினையைத் திசைதிருப்ப திட்டமிட்ட சதியாகவும் இருக்கலாம்.
தவறுதலாக விமானங்கள் சுடப்பட்ட சம்பவங்கள் இதற்கு முன்பும் பதிவாகியுள்ளன. 1988இல் தெஹ்ரானிலிருந்து டுபாய் நோக்கி 290 பயணிகளுடன் பறந்துகொண்டிருந்த ஈரானிய பயணிகள் விமானம் ஒன்று பாரசீக வளைகுடாவில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் போர்க்கப்பலால் தவறுதலாகச் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதேபோன்று 1983இல் நியூயோர்க்கிலிருந்து தென்கொரியாவின் சியோல் நகர் நோக்கிப் பறந்துகொண்டிருந்த தென்கொரிய விமானம் சோவியத் யூனியனின் ஜெட் விமானத்தால் சுடப்பட்டது. அதில் பயணம் செய்த 269 பேர் உயிரிழந்தனர். சோவியத் யூனியன் இதனை முதலில் மறுத்தது. பின்னர் ஒப்புக்கொண்டு அந்த விமானம் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக குற்றம் சாட்டியது. ஆனால் மலேசிய விமானத்தைச் சுட்டவர்கள் இதுவரை உரிமை கோரவில்லை. அதி உயரமாகப் பறந்து கொண்டிருந்தபோது இந்த விமானம் சுடப்பட்டதால் நீண்ட தூர ஏவுகணை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் உக்ரைன் நெருக்கடி அதிகரிப்பதற்கு வழிவகுக்குமாகையால் போர் நிறுத்தப்பட்டு உக்ரைன் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்பட வேண்டும்.

# இலங்கைக்கு தீராத பழி!

கந்தவனம் கோணேஸ்வரன்



மஹிந்த ராஜபக்ஷ

தவளைகள் தம்வாயால் கெட்டுவிடும் என்பதுபோல இலங்கை அமைச்சர்களும் தம்வாயால் கெட்டுக் கொண்டிருக்கிறார்கள். தாம் கெட்டுப்போவது மாத்திரமன்றி, இலங்கைக்கும் உலக அரங்கில் தீராத பழியை உண்டுபண்ணி வருகிறார்கள்.
தராதரம் கருதாது, கடைகெட்ட மனிதர்களைப் போல் வார்த்தைகளைக் கொட்டுவதில் எங்கள் அமைச்சர்கள் வல்லவர்களாகவே இருக்கிறார்கள். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கை வந்தபோது அவரைத் திருமணம்செய்யத் தாம் தயாரென அழைத்திருந்தார் அமைச்சர் மேர்வின் சில்வா. பிறகு நிதானப்போக்குள்ள அமைச்சர்கள் மேர்வின் சில்வாவின் வார்த்தைப் பிரயோகத்துக்காக நவநீதம்பிள்ளை அம்மையாரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதாயிற்று.
இப்போது உயர்கல்வி அமைச்சராகப் பதவி வகிக்கும் எஸ்.பி.திசாநாயக்க ஊவா - பரணகமப் பகுதியில் கடந்தவாரம் பொதுமக்கள் முன்னிலையில் நவநீதம்பிள்ளை அம்மையார் தொடர்பாகப் படுமோசமான வார்த்தைகளை உதிர்த்திருப்பதாக இணையத்தளம் ஒன்றின் செய்தி கூறுகின்றது. மக்களை உஷார்ப்படுத்துவதாக அவர் எண்ணிக்கொண்டு சாதாரண குடிமகன்கூட உதிர்க்கத் தயங்கும் வார்த்தைகளைவெகு இயல்பாகவே கூறியிருக்கிறார்.
ஐக்கிய நாடுகளின் விசாரணைக்குழு என்று புறப்பட்ட எந்த உதவாக்கரையையும் இந்த நாட்டுக்குள் நாம் அனுமதிக்கப்போவதில்லை. விசாரணை எங்கேனும் - எப்படியேனும் நடந்துவிட்டுப் போகட்டும். அதுபற்றி நாம் கவலைப்படப்போவதில்லை. இலங்கைக்கு எதிரான ஐ.நா. சபைத் தீர்மானம், விசாரணைகளின் முடிவில் வெளியாகும் அறிக்கை என்பவற்றை நவநீதம்பிள்ளை தனது ஆசனவாயிலில் சொருகிக்கொள்ளட்டும் எனப் பொதுமக்கள் மத்தியில் கூச்சமின்றி அவர் வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார்.



நவநீதம்பிள்ளை



ரமபோஷ

இணையத்தளம் கூறுகின்ற இந்தச் செய்தி நூறுவீதமும் சரியாயின், அது சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகப்பெரும் அவமானச் சின்னமாகக் கொள்ளப்பட வேண்டியது. அமைச்சர் ஒருவர், அதுவும் உயர்கல்வி அமைச்சராக இருப்பவர் சபை நாகரிகம், கல்விப் பண்பு, பதவிச்சிறப்பு எதனையும் நோக்காது மோசமான குடிகாரனைக் காட்டிலும் கீழானவராகச் செயற்பட்டிருப்பதையிட்டு நாடே வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது. இந்த மனிதர் கூச்சநாச்சமின்றி மேடையில் நின்று எவ்வாறு இத்தகைய கேவலமான வார்த்தைகளை உதிர்த்தார் என எண்ணத் தோன்றுகிறது.
அண்மையில் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுடைய ஏகப் பிரதிநிதியல்ல. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இனப்பிரச்சினைத் தொடர்பாக அரசு நேரடியாகப் பேச்சு நடத்தமுடியாது. அவர்கள் ஏனைய கட்சியினரைப்போல் தெரிவுக்குழுவுக்கு வந்து தமது குறைகளை முன்வைக்கட்டும். அங்கே பார்த்துக் கொள்ளலாம் என்ற ரீதியில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.
இந்தக் கருத்து உயர்கல்வி அமைச்சரின் கருத்தைப் போல் தனியமைச்சருக்குரிய கருத்தல்ல, அரசின் கருத்து எனக் கொள்ளப்பட வேண்டியது. இத்தகைய ஒரு கருத்தை அரசு வெளிப்படுத்தியிருப்பதன் காரணம் என்ன என்பதுதான் இப்போது எழுகின்ற கேள்வி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தம்மைத் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றுஎப்போதாவது, எங்காவது சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை என்பதுதான் பதில். அவர்கள் சொல்லாத வார்த்தைகளை அரசு கற்பனையில் தூக்கிப்பிடித்து மறுப்புத் தெரிவிப்பது ஏன் என்பதுதான் புரியாதவிடயம்.
அரச படையினரையும், அரச எடுபிடிகளையும் தவிர, வேறு எவரும் வன்னி மக்களின் துயரங்களில் அக்கறை கொள்ளவில்லை என்பதுபோன்ற பாசாங்குகள் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டன. உறவுகளைக் காவுகொடுத்து, உடைமைகளையும் முற்றாக இழந்து, உடலுறுப்புகளும் சிதைந்த நிலையில் மரணத்திலிருந்து மீண்டுவந்த மக்கள் அந்த நெருக்கடியான நேரத்திற்கூட தமது ஒரே அரசியல் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் என்பதைத் தேர்தலின் போது உறுதிப்படுத்தியிருந்தார்கள்.
கிழக்கில்கூட அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தமிழர்களின் வாக்குகள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே கிடைக்கப்பெற்றிருந்தன. அரச அமைச்சர்கள் முகாமிட்டிருந்தும், தேர்தலைக் குறியாகவைத்து அரச சலுகைகள் அள்ளி வழங்கப்பட்டிருந்தும், வேலைவாய்ப்புகள் தருகின்றோம் என்று ஆசைவார்த்தைகள் கூறப்பட்டிருந்தும் தமிழர்கள் இவற்றை யெல்லாம் புறக்கணித்துவிட்டு, அபிவிருத்தி செய்ய முடியாத, சலுகைகளைப் பெற்றுத்தர முடியாத, வேலைவாய்ப்புகளை வழங்க முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமது ஆதரவை முழுமையாக வழங்கியிருந்தனர். அரசின் திருகுதாளங்களுக்கு ஏமாந்துபோகமாட்டோம், எதிர்காலச் சந்ததியின் சுயாதீன கௌரவமான இருப்பே எங்கள் நோக்கம் என்று சொல்லாமல் சொல்லி வைத்தார்கள்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர் எனின், தெரிவுக்குழு முடங்கிக்கிடக்க வேண்டியதன் காரணம் என்ன? அரசின் கையாள்களான தமிழர்களை வைத்து நிறைவுசெய்ய ஏன் அரசால் முடியாமல் போனது? தெரிவுக்குழு அமைக்க முன்னர் கூட இதே அரசுடன் தமிழர் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாமே பேச்சுகளில் ஈடுபட்டிருந்தனர்.
அரசின் கபடத்தனமான போக்குகளால் முறிந்த பேச்சுக்கு இன்னமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக அரசு காத்துக் கொண்டிருப்பதுபோல் உலகின்முன் பாசாங்கு செய்வதன் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒப்புதலின்றி ஒரு தீர்வை தமிழ்மக்கள் மேல் திணிக்க முடியாது என்பதால்தானே.
இலங்கை அரசு என்னதான் தலைகீழாக நின்று நாடகமாடினாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஏற்றுக்கொள்ளப் படாத ஒரு தீர்வைத் தமிழர்கள்மேல் திணித்துவிட முடியாது என்பதுதான் நிதர்சனம்.
தென்னாபிரிக்க இராஜதந்திரிகளை இலங்கைக்கு வருகைதருமாறு கேட்டுக்கொண்டவர்கள் இலங்கை அரசதரப்பினர்தான். பொதுநலவாய மாநாட்டின்போது ஜனாதிபதி இதற்கான அழைப்பை விடுத்திருந்தார். உங்கள் அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அவற்றினூடாக எங்கள் அமைதிக்கு வழிகாட்டுங்கள் என்றுகேட்டுக் கொண்டார்.
இவற்றின் தொடர்ச்சியாகத்தான் தென்னாபிரிக்காவிலிருந்து உப ஜனாதிபதி சிறில் ரமபோஷ தலைமையிலான வல்லுநர் குழுவொன்று கடந்ததிங்களன்று இரண்டுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்தது. அரசதரப்பைச் சந்தித்த அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் தனித்தனியாகச் சந்தித்து உரையாடியிருந்தனர்.
இது தமிழர்தரப்பின் தெளிவையும், நெஞ்சுறுதியையும், நேர்மைப் பண்பையும் காட்டுகிறது. ஆனால், அரசதரப் பினரால் இவ்வாறு வெளிப்படையாக நடந்து கொள்ள முடியவில்லை. இலங்கையின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக வெளியார் தலையீடுகள் எவையும் தேவையில்லை என்றொருதீர்மானம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அப்படியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு ரமபோஷவை நாட்டுக்குள் அனுமதிப்பது எந்தவிதத்தில் நியாயம் என்று கேட்கிறார் ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத். ரமபோஷ அரசியல் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்யத் தலைப்பட்டால் அரசுடனான ஆதரவு உடனடியாக விலக்கப்படும் எனக் கூறுகிறார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.
சிங்கள இனவாதிகள் எதற்கும் அஞ்சப் போவதில்லை. அவர்களுக்குச் செக்கும் சிவலிங்கமும் சமமானவைதாம். இப்போது பாப்பரசரை மன்னிப்புக் கேட்க வைத்தே தீருவோம் என்று புறப்பட்டிருக்கிறார்கள். தம்விதியைத் தாமே மோசமாக எழுதத் தொடங்கியவர்களைப் பிறர் என்னதான் செய்துவிட முடியும்?



முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி உதயராணி முனீஸ்வரனுக்கு உடையார்கட்டு மகா வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர்கள் வரவேற்பு வழங்கியபோது... (க-433)



இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்ட அருட் பணி ஆர்.எஸ்.முருகுப்பிள்ளை, மன்னார் மாவட்ட குரு முதல்வர் விக்ரர் சோசை, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



முல்லைத்தீவு சிலாவத்தை டில்லி குஞ்சன் முன்பள்ளியைச் சேர்ந்த மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழாவின்போது... (க-102)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் இடம்பெற்ற மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பொருள்களை அங்கு வருகை தந்த அதிகாரிகள் பார்வையிடுகின்றனர். (க-56)



வவுனியாவில் வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசாவின் அலுவலகத்தின் பெயர்ப் பலகையை வடமாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைக்கின்றனர். (க-421)



முல்லைத்தீவு உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயத்தில் ஆடிப் பிறப்புத் தினத்தன்று ஆடிக் கூழ் காய்ச்சி வழங்கப்படுகின்றது. (க-433)



வவுனியாவில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கென பூங்கா வீதியில் விடுதி அமைக்கப்பட்டு வருகின்றது. (க-402)



மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள தொழில் நுட்ப பீடத்துக்கான அடிக்கல்லை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா பாரூக் நட்டு வைக்கின்றார். அருகில் பாடசாலை அதிபர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன், உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.அமலதாசன் ஆகியோர் காணப்படுகின்றனர். (க-56)




மாகாண மட்ட இணைப்பாடவிதானப் போட்டிகளில் சாதனை புரிந்த முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் பாடசாலை அதிபர் உட்பட கல்விப் புலம் சாந்தவர்களுடன் காணப்படுகின்றனர். (க)



# மலிவு விற்பனையில் தரமற்ற பழங்கள்

## குருநகரிலுள்ள சில வீதிகளில்



குருநகரிலுள்ள சில வீதிகளில் வைத்து தரம் குறைந்த பழ வகைகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுவதால் அவற்றை வாங்கும் பொது மக்கள் பாதிப்புக்குள்ளாவதால் இத்தகைய தரமற்ற வியா பாரத்தை தடை செய்ய யாழ்.மாநகர பொதுச் சுகா தாரப் பரிசோதகர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரியுள் ளனர். குருநகர் பொதுச்சந்தைக் குச்சமீபமாகவுள்ள வீதிகள், குரு நகர் கடற்கரையில் அமைந் துள்ள மீன்வாடி ஆகிய இடங் களில் மற்றும் சிறிய ரக லொறிகளில் வைத்து இத்த கைய தரமற்ற பழவகைகள் மலிவு விலையில் விற்கப் படுவதாக பொதுமக்கள் தெரி விக்கின்றனர். மாம்பழம், பலாப்பழம் ஆகிய வைகள் முற்ற முன்னர் வியாபாரி களால் எடுத்து வரப்பட்டு அங்கு வைத்து விற்பனை செய்யப்படுகின்றது. விற்கப் படும் மாம்பழங்களில் பால் மணம் வீசுவதுடன் பலாப் பழங்கள் பழுக்காத நிலையில் காணப்படுவதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர். வியா பாரிகள் சிலர் மாம்பழங் களைத் தனித்தனியாக விற் பனை செய்யாமல் கிலோ ரூபா 100இற்கு விற்பனை செய்வதையும் அவதானிக்க முடிந்தது. வீதியோரங்களில் வைத்து வியாபாரிகளால் விற் பனை செய்யும் தரம் குறைந்த பழ வியாபாரம் காரணமாக குருநகர் பொதுச் சந்தையில் தரமான பழங்களை விற் பனைசெய்யும் வியாபாரிகளின் பழ வியாபாரம் பாதிக்கப்படு வதால் வீதியோர பழ வியா பாரத்தைத் தடைசெய்ய உரியவர்கள் உடன் நடவ டிக்கை மேற்கொள்ள வேண் டும் என்று பொதுமக்கள் தெரி வித்தனர். (வ-51)

## சாயி பாபா சேவை நிலையத்துக்கு பிரார்த்தனை மண்டபம்

தென்மராட்சி, ஜூலை 20

சாவகச்சேரி ஸ்ரீ சத்திய சாயிபாபா சேவை நிலை யத்துக்கு 5 மில்லியன் ரூபா செலவில் பிரார்த்தனை மண் டபம் நிர்மாணிக்கப்படவுள் ளது.

சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியில் உள்ள தனது காணியை கனடாவில் வதியும் சாயி பக்தர் ஒருவர் நிலை யத்துக்கு அன்பளிப்பாக வழங் கியதை அடுத்து மண்டபம் அமைக்கும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (வ-9)




கொமர்ஷல் வங்கி இவ்வருடம் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுகளை பெறுகின்ற சிறுவர்களுக்கு அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கின் மூலம் மாதாந்த புலமைப்பரிசில்களையும் பணப்பரிசில்களையும் வழங்கவுள்ளது.

அகில இலங்கை சாதனையாளர்

5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் அகில இலங்கையில் அதிகூடிய புள்ளிகளை பெற்று சித்தியடைபவர்களுக்கு 18 வயதாகும் வரை மாதாந்தம் புலமைப்பரிசில்கள்

1ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.2,000/- வீதம் ரூபா.170,000/- வரை
2ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.1,500/- வீதம் ரூபா.127,500/- வரை
3ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.1,000/- வீதம் ரூபா.85,000/- வரை

மாவட்டத்தின் சாதனையாளர்

ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் இடத்தில் சித்தியடைபவர்களுக்கு ரூபா.50,000/- விசேட பணப்பரிசில்

பாடசாலையின் சாதனையாளர்

சகல பாடசாலைகளிலும் உயர்ந்த பெறுபேறுகளை பெறுபவர்களுக்கு விசேட பணப்பரிசில்கள்

1ஆம் இடம் - ரூபா.10,000/-
2ஆம் இடம் - ரூபா.7,500/-
3ஆம் இடம் - ரூபா.5,000/-

இப்பரிசில்களை பெற்றுக்கொள்ள செய்ய வேண்டியது யாதெனில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை திகதியன்று அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கில் ஆகக்குறைந்தது ரூபா.5,000/- மீதியை பேணுவதேயாகும்.

Arunalu
Children's Savings Account

COMMERCIAL BANK

வ.வி.வீ. 8.3%

C/14689

பிட்ச் ரேட்டிங் - AA(lka)   ரம் ரேட்டிங் - RAM AA+/P1   நிபந்தனைகளுக்கு உட்பட்டது   +94 112 353 333   www.combank.lk




சம்பத் வங்கியிடமிருந்து தங்க ஆபரணங்களுக்கான
அடகுத்தொகை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது..!

கெரட் 24 ற்கு 35,000/-*
கெரட் 22 ற்கு 32,000/-*

மாதாந்தம் 1.25% எனும் குறைந்த வட்டி வீதம்!*

சம்பத்

நாடு முழுவதிலுமுள்ள சம்பத் வங்கிக் கிளைகளில் தவணை முறையில் செலுத்தமுடியும்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
G/14681

Sampath Bank Fitch Ratings AA-(lka) 0112 30 30 50 www.sampath.lk




சகல
HYBRID
வாகனங்களுக்கும் அதிசிறந்த குத்தகை வசதி
அல்ஃபலாஹ் வழங்கும் விசேட இஜாரா குத்தகை சேவை

லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ்

0115 500 786

AL-FALAAH
ISLAMIC FINANCIAL SERVICES

C/14679

SINGER



SINGER X SERIES
hp
ASUS
lenovo
SAMSUNG
HUAWEI
INTEX

# உலகப் பிரசித்தி பெற்ற
# வர்த்தக நாமங்களில் டிஜிட்டல் மீடியா சாதனங்கள்
## SINGER இடமிருந்து



வட்டியின்றி
ரூ.4,000/- ரொக்கக் கழிவு

SINGER X SERIES
SINX-243AT
- Intel Celeron Dual Core - 2GB DDR3
- 14" HD LED Display - 320GB SATA - DVDRW

ரூ. 49,999/- மாதாந்தம் ரூ. 3,333/-



வட்டியின்றி
ரூ.11,000/- ரொக்கக் கழிவு

lenovo
LEN-NB-I3-4G
- Intel Core i3 Processor (4th Gen) - 4GB DDR3
- 15.6" HD LED Display - 500GB SATA - DVDRW

ரூ. 75,999/- மாதாந்தம் ரூ. 3,937/-



வட்டியின்றி
hp Pavilion 15
ரூ.13,400/- ரொக்கக் கழிவு

hp
HP-I3-15NB
- Intel Core i3 Processor (4th Gen) - 4GB DDR3
- 15.6" HD LED Display - 500GB SATA - DVDRW

ரூ. 93,399/- மாதாந்தம் ரூ. 6,227/-

HUAWEI



Huawei Honor 3C
- 5" (720x1280) HD
- 8MP
- Jelly Bean

ரூ. 29,999/-

INTEX



Intex CLOUD X12
- 3.5" (480x320)
- 2MP
- 2 SIM

ரூ. 8,999/-

INTEX



Intex CLOUD Y 17+
- 4.5" (854x480)
- 5MP + 1.3MP
- 2 SIM

ரூ. 14,999/-

SAMSUNG



Samsung Galaxy Grand 2
- 5.25" (720 x 1280)
- 8MP + 1.9MP
- 4G LTE

ரூ. 62,990/-

SAMSUNG



DUAL SCREEN
16 MP CCD SENSOR
5x OPTICAL ZOOM
WiFi CERTIFIED
FREE

Samsung SMART CAMERA
DV150F
ரூ. 19,999/-

SAMSUNG



16 MP CCD SENSOR
5x OPTICAL ZOOM
HD 720P
LIVE PANORAMA
WiFi CERTIFIED
FREE

Samsung CAMERA ES95
ரூ. 13,999/-

SAMSUNG



16 MP CMOS SENSOR
12x OPTICAL ZOOM
WIDE
FREE

Samsung SMART CAMERA
WB35F
ரூ. 23,999/-

http://www.singersl.com
www.facebook.com/singersl
011 5 400 400

கிடைக்குமிடங்கள்
SINGER Plus காட்சியறைகள்
மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம்


Hero
கேளிக்கை உலகின் புதிய பரிணாமம்
அறிமுகப்படுத்துகின்றோம் கண்களை கவரும் விதத்தில் அமையப்பெற்ற புதிய ஹீரோ ப்ளஷர், நவீன வசதிகளுடன்
ஓட்டிச்செல்லுங்கள் புதிய புத்துணர்ச்சியுடன்
புதிய ஹீரோ ப்ளஷர் உங்கள் மனதை கொள்ளை கொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
புதிய மாற்றங்களின்றி வாழ்வின் புத்துணர்ச்சி ஏது?
புதிய
Pleasure
The light 'n' zippy scooter
2014
அறிமுக விலை
ரூ. 178,563 + vat
Hero
5
WARRANTY
கைப்பேசிகளை சார்ஜ் செய்ய ஏற்ற வசதிகள்
டியுப் லெஸ் டயர்கள் மற்றும் தரமான ப்ரேக் முறை
லக்கேஜ் பெட்டியில் லைட் வசதி
அழகிய மீற்றர் தொகுதி
C/14678
☎: 011 5777000
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
Abans

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் டெங்குக்கு சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தெ ராட்சி, ஜூலை 20

சா சேரி ஆதார மருத்துவமனை யில் ங்கு நோயால் பீடிக்கப்பட்டு சிகிச் பெறுவோரின் எண்ணிக்கை அதி த்துக் காணப்படுகிறது. மரு வமனையில் டெங்கு பரி சோ னக் கருவிகள் மூலம் டெங்கு பரி னைகள் மேற்கொள்ளப்படு வத சிகிச்சை பெற வருவோரின் என ரிக்கை அதிகரித்துக் காணப் படு . பரி தனை மேற்கொள்ளப்படு வே ன் அதிக டெங்குத் தாக்கம் காணப்படுவோர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்படு கின்றனர். ஏனையோருக்கு சாவ கச்சேரி மருத்துவமனையிலேயே சிகிச்சை வழங்கப்படுகிறது.

கடந்த ஆறு மாதங்களில் (ஜனவரி- ஜூன்) பிரதேசத்தைச் சேர்ந்த 66 பேருக்கு டெங்கு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் வாழும் பகுதிகளில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் புகையூட்டல் உட்பட்ட தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் ஜூலை மாதத்தில் திங்கட் கிழமை வரை தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 9 பேர் இனங்காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.



அவர்கள் அனைவரும் தென்பகுதிக்குத் தேவைகளுக்காகச் சென்றுவிட்டு திரும்பியவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மழை இல்லாத இந்தக் கால கட்டத்திலும் டெங்கு நுளம்பின் தாக்கம் காணப்படுவது குறித்துக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -பொதுமக்களால் பயன்படுத்தப்படும் குளிர்சாதனப் பெட்டி, வோஷிங் மெசின், குளியலறையில் காலங்கடந்து பயன்படுத்தும் சவர், மலசலகூடம் போன்றவற்றில் தேங்கி நிற்கும் நீரில் டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் அவற்றையும் நீர் தேங்க விடாமல் பார்த்துக் கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

கொழும்பில் பல இடங்கள் டெங்கு பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதிகளுக்குச் செல்வோர் அவதானமாக இருக்குமாறும் அறிவித்துள்ளனர். (வ-9)










## பொதுக்கேணி பிரதேச சபையால் துப்புரவு

வலி.வடக்கு, ஜூலை 20
வலி.மேற்கு சங்கானைப் பிரதேச சபைக்கு உட்பட்ட அராலி கிழக்கு அம்மன் கோயிலடி பகுதியிலுள்ள பொதுக் கேணி பிரதேச சபையால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கேணி தூர்ந்துபோகும் அவ நிலையால் கால்நடைகள் நீர் பருக முடியா தவிப்பது தொடர்பாகவும் அந்தப் பகுதியி உள்ள குடிதண்ணீர் கிணறுகள் பாதிப் பட வது குறித்தும் உதயன் ஊடகம் சுட்டிக் காட் இருந்தது.

அதனைத் தொடர்ந்து வலி. மேற்கு பிரதே சபை உறுப்பினர் த.நடனேந்திரன் துரி மாக நடவடிக்கைகளை மேற்கொண்டத காரணமாகத் தற்போது குறிப்பிட்ட கேண தூர் வாரப்பட்டு துப்புரவு செய்யப்பட்டு ளது.

குறிப்பிட்ட கேணியின் சிமெந்து கட்டுக்க உடைந்து சேதம் அடைந்துள்ளமையா குறிப்பிட்ட கேணியை மீண்டும் புனர்நி மாணம் செய்ய வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றமையும் இங்கு சுட்டிக்காட்ட தக்கதாகும். (வ-86

## மாணவருக்கு பற்சிகிச்சை முகாம்

தென்மராட்சி, ஜூலை 20
வரணிப் பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம் கடந்த வாரம் வரணி பிரதேச மருத்துவமனையில் இடம்பெற்றது.

பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்துப் பாட சாலைகளிலும் பல் ஆரோக்கியம் தொடர்பான குறைபாடுகள் காணப்பட்ட மாணவர்கள் இதில் கலந்துகொண் டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இயங்கும் பிரதேச பற்சிகிச்சைப் பிரிவும் சாவகச்சேரி சுகாதாரவைத்தியஅதிகாரிபணிமனையும்இணைந்து இந்தப்பற்சிகிச்சை முகாமை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)




பெண்கள் ஊடக கூட்டமைப்பு நடத்தும்

# குறுந்திரைப்படப் போட்டி 2014

Women and Media Collective

தொனிப்பொருள்: பெண்களின் அரசியல் பங்கேற்பு மற்றும் தீர்மானம் எடுக்கும்வகிபாகங்களில் பெண்கள்.

(பெண்கள் தொடர்பாக சாதகமான மனப்பாங்கை ஏற்படுத்தக்கூடிய ஆக்கபூர்வமான குறுந்திரைப்பட எழுத்துப்பிரதிகளை எமக்கு அனுப்புங்கள்)



சிறந்த 3 குறுந்திரைப்படங்களுக்கு

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரு 40,000/- |
| இரண்டாம் இடம் | ரு 25,000/- |
| மூன்றாம் இடம் | ரு 15,000/- |

இம்முறை சிறந்த 3 குறுந்திரைப்பட எழுத்துப் பிரதிகளுக்கும் பணப்பரிசு வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதலாம் இடம் | ரு 15,000/- |
| இரண்டாம் இடம் | ரு 10,000/- |
| மூன்றாம் இடம் | ரு 5,000/- |

2 நிமிட களுக்கு மேற்படாதவகையில் உங்களது குறுந்திரைப்பட எழுத்துப் பிரதிக ா (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) ஆகஸ்ட் 15ஆம்திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பவும். குறுந்திரைப்படப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட எழுத்துப்பிரதி படைப்பாளர்களுக்கு அதனை அறியத்தருவதோடு குறுந்திரைப்படத்தை தயாரிப்பதற்கு 60 நாள்கள் வழங்கப்படும். தனிநபர் ஆக்கங்களோடு குழு ரீதியான ஆக்கங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விவரங்களுக்கு எமது இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள்.

தொலைபேசி இல: (+94)11-5632045, 011-5635900, 011-2690201,011-2690192, 011-5635800
தொலைநகல்: 011-2690201
மின்னஞ்சல்: wmcsrilanka@gmail.com
இணையத்தளம்: www.womenandmedia.org
Facebook: facebook.com/womenandmediacollective
Twitter: twitter.com/womenandmedia

பெண்கள் ஊடக கூட்டமைப்பு: 56/1 சரசவி ஒழுங்கை, காசல் வீதி, கொழும்பு 08



தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சியில் பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலர் ஸ்ரீராமச்சந்திரனும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.ம.ஈஸ்வரதேவனும் இணைந்து நாடாவை வெட்டி ஆரம்பித்து வைப்பதையும் கல்விக் கண்காட்சியில் பல்வேறு இன தோற்றத்தை வெளிப்படுத்தும் மாணவர்களை பார்வையிடுவதையும் காணலாம். (ஒ)



மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் புதன்கிழமை பகல் அடியவர்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் இடம்பெற்றது. அந்தண குருமார் பூரண கும்பம் சுமந்து வருவதையும் தொடர்ந்து மண்டபத்தில் இடம்பெற்ற நடன நிகழ்வையும் காணலாம். (ஒ-86)



தென்மராட்சி கல்வி வலய மட்ட மெய்வன்மைப் போட்டி வரணி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அங்கு சமுகமளித்திருந்த வலய மட்ட பாடசாலைகளின் ஆசிரிய ஆசிரியைகள், நிகழ்வின் பிரதம விருந்தினராக் ஒலிம்பிக் வீரர் கலாநிதி என். எதிர்வீரசிங்கம், வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மற்றும் போட்டி முகாமையாளர் கு.சிவகுமார் ஆகியோருடன். (ஒ-122)







யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்தப் பரிசில் தினம் அண்மையில் நடைபெற்றது. மாணவர்களின் வரவேற்பு நடனம் முதல் நிகழ்வாக நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற நடன நிகழ்வையும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் குழுப் பாடல் நிகழ்வையும் காணலாம். (ஒ-51)




சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆங்கில தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் சில காட்சிகள். (ஒ)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாழ்வின் எழுச்சித் திட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சிப் பிரிவின் குழுத் தலைவர் பத்மநாதன், வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் குமாரசிறி உட்பட பிரமுகர்கள் காணப்படுகின்றனர். (க-18)





கிளிநொச்சி - )க்கரா யனில் மெதடி த திருச் சபையால் ..த்தப் படும் ஒறேப் ன்பள் ளியின் விளையாட்டு விழாவில் மாண வர்கள் போட்டிகளில் பங்கு கொண்டிருப் பதைக் காணலாம். (ஒ-18)





வவுனியா நகர சபைக்கு சொந்தமான பூங்கா புனரமைக் கப்பட்டு புதுப் பொலிவுடன் காணப்படு கின்றது. (க-402)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஆடி-05 திங்கட்கிழமை 21.07.2014
திதி: தசப முு.இ.11.41 வரை
நட்சத்திரம்: பரணி மு.ப.09.14 வரை
சுபநேரம்: 12.01 - 01.31 வரை
இராகுகாலம்: 07.31-09.01 வரை

**மேடம்**: உங்கள் முன் நடக்கும் சில சம்பவங்கள் மனதுக்குக் கஷ்டம் தரும். பொறுமையுடன் நடந்து கொள்வது அவசியமாகும். தொழிலில் அதிகம் பணிபுரிவதால் உற்பத்தி, விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும்.

**இடபம்**: உங்கள் மனதில் உதித்த திட்டம் செயல் வடிவம் பெறும். உத்வேகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் தேவை அறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்**: வாழ்வியல் நடைமுறை சிறப்புபெற, அக்கறையுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**கடகம்**: நிதானித்துப் பேசுவதால் மட்டுமே, நற்பெயரைப் பாதுகாக்கலாம். தொழிலில் உருவாகின்ற இடையூறைச் சரி செய்ய, தகுந்த உபாயத்தைப் பின்பற்றுவீர்கள். செலவு அதிகரிக்கும். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**சிங்கம்**:மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடமிருந்து விலகுவது நல்லது. திட்டமிட்ட பணி நிறை வேற, கால அவகாசம் தேவைப்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும்.

**கன்னி**: நீண்ட நாள் இலட்சியம் நிறைவேற்றத் திட்டமிடுவீர்கள். அன்புக்குரியவர்களின் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்**: ஆன்மிக சிந்தனையுடன் பணி புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பரிமாணம் ஏற்படும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**விருச்சிகம்**: சிறிய பணியும் அதிக சுமை போலத் தோன்றும். மற்றவரை விமர்சிக்க, சிலர் உங்களைப் பயன்படுத்த முயற்சிப்பர். கூடுதல் உழைப்பால் தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவுக்கு வரும்.

**தனுசு**: திட்டமிட்ட பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். சுயகௌரவத்தைப் பாதுகாக்க, பணச்செலவில் தாராள குணம் பின்பற்றுவீர்கள்.

**மகரம்**: அன்பு நிறைந்த மனதுடன், நண்பரிடம் பழகுவீர்கள். வாழ்வில் கூடுதல் வளம் பெற, புதிய வாய்ப்பு உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை திட்டமிட்ட இலக்கை அடையும்.

**கும்பம்**: அறிமுகம் இல்லாத எவரிடமும் பொதுவிடயம்பேசவேண்டாம். பணிகளில் முன் யோசனை, எச்சரிக்கை உணர்வுடன் செயற்படுவது நல்லது. ஆடம்பர செலவைத் தவிர்த்தால் கடன்பெறவேண்டிய அவசியம் ஏற்படாது.

**மீனம்**: சிலரது தூண்டுதலால் சவால்களை ஏற்று செயல்படுகிற எண்ணம் வளரும். தகுதி உணர்ந்து நடந்து கொள்வதால் உரிய நன்மை பெறலாம். தொழில், வியபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 8 | | 4 | 9 | | 2 | |
| | 9 | 6 | | | 1 | | | |
| | 5 | | 2 | | 6 | 9 | 8 | |
| 4 | 7 | | 8 | | | | | |
| 8 | | | 1 | | 4 | | | 3 |
| | | | | | 2 | | 4 | 5 |
| | 6 | 1 | 9 | | 7 | | 5 | |
| | | | 4 | | | 1 | 6 | |
| | 4 | | 6 | 1 | | 3 | | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 4 | 2 | 3 | 6 | 9 | 5 | 7 |
| 5 | 7 | 3 | 9 | 8 | 4 | 1 | 6 | 2 |
| 2 | 6 | 9 | 1 | 7 | 5 | 4 | 8 | 3 |
| 7 | 3 | 8 | 4 | 5 | 9 | 6 | 2 | 1 |
| 4 | 5 | 6 | 3 | 2 | 1 | 8 | 7 | 9 |
| 9 | 2 | 1 | 7 | 6 | 8 | 5 | 3 | 4 |
| 8 | 1 | 2 | 6 | 4 | 7 | 3 | 9 | 5 |
| 3 | 9 | 5 | 8 | 1 | 2 | 7 | 4 | 6 |
| 6 | 4 | 7 | 5 | 9 | 3 | 2 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## VISIT VISA



- சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், **மங்கல**, அமங்கல காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- பெற்றோர், பேரன், **பேர்த்தியர்களுக்கான** சுப்பர் விசா - கனடா, மணமான தம்பதியருக்கான வதிவிட விசா - சகல நாடுகளுக்கும்.

ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**தாமதமாகிய விசாக்கள் - நிராகரிக்கப்பட்ட விசாக்கள் உள்ளனவா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சினை உள்ளதா?**

Refused? Rejected?

- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் விசா முடிந்ததும் இலங்கைக்குத் திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்புப் பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் அது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.
- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- விசா விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- **Embassy** கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- **Ticket, Hotel Booking, Travel Insurance** செய்து தரப்படும்.
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

## வங்கியில் பணவைப்பு

***Savings Book, Fixed Deposit, Statement***

**3, 6, 12** மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.

**(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).**

## உங்களின் விசா எங்களின் சவால்

**Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals New Applications etc...**

SKYWALK Visa Solutions

**SKYWALK VISA SOLUTION**
**No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)**
**Web: www.skywalk.com**


**Hotline: 0777 711 905**

(c.14694)

## மரண அறிவித்தல்

### செல்லையா நவரத்தினராசா

(ஓய்வுபெற்ற ஊழியர் மரக்கூட்டுத்தாபனம்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நவரத்தினராசா நேற்று (19.07.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வரட்ணம்-இலட்சுமி தம்பதியரின் மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும், மயூரன், கோபிகா (மாணவி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும், சந்தான லெட்சுமி, பாக்கியவதி, சண்முகலிங்கம், கமலாதேவி ஆகியோரின் சகோதரனும், பாலசிங்கம், குணரட்ணம், கிருபா, குகநேயன்-கமலாம்பிகை, குகதாஸ்-ஆனந்தரஞ்சிதமலர், மகேந்திரன்-கலாமாலினி, பரமேஸ்வரன்-சிவசோதி, வாமபாகன்-உமாபதி, அனுரா-கலாவதி ஆகியோரின் மைத்துனரும், லோசனா, ஜெனனி, வதனி, நளினி, தர்மினி, அயந்தன், கமல், பிரியா, சுதன் ஆகியோரின் மாமனும், தர்சிகாவின் சித்தப்பா வும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/15472)(10) தகவல்: **குடும்பத்தினர்.**

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் நல்ல சூழலில் அமைந்த வீடு விற்பனைக்கு

தொடர்புக்கு : (50155)(10)

077 855 3546, 021 205 2430

## வீடு வாடகைக்கு உண்டு

No.335, அரசடி வீதி, நல்லூர்.

தொடர்புகொள்ள : (50154)(10)

T.P.No: 077 160 6578

## கடை வாடகைக்கு

பசார் வீதி இல.308 சைக்கிள் பாக் லேனில் அமைந்துள்ள புடவைக் கடை, பான்சிக் கடை அல்லது போன் கடைக்குத் தேவையான 12x12 அளவுள்ள கடை வாடகைக்கு உண்டு.

(50162)(10) தொடர்பு: 077 579 0147

## LOTO 27 வான் உடன் விற்பனைக்குண்டு

GE-XXXX, A- 1996 Model, Auto full A/C full Jappan Seat, Elow Weel, White Colour, Engine and body 100%.

(சி:5445)(12.3.6) தொடர்பு: 077 910 7242

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலிருந்து மானிப்பாய், சண்டிலிப்பாய் ஊடாக மாதகலுக்கு 16.07.2014 புதன்கிழமை மு.ப 9.15 - 10.00 மணிக்கிடையில் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது 06 பவுண் கத்தோலிக்க தாலிக்கொடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : (50160)(10)

0777 252 083

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 20.06.2014 வெள்ளிக்கிழமை
சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தெய்வம்
அமரர்
**பஞ்சரத்தினம் சண்முகதாசன்**
(காவேரி சில்க்ஸ் உரிமையாளர்)

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரில்வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலமாக உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், எம்மோடு நின்று உதவியவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.322,
ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை. (50100)(7.6.3)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி மயில்வாகனம்

கரவெட்டி மத்தொனியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மேற்கு, பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மயில்வாகனம் கடந்த 17.07.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், ஜெகநாதன் (ஓய்வூதியர்- ஸ்ரீலங்கா ரெலிகொம், உரிமையாளர் வானகம் போன் சிற்றி, யாழ்ப்பாணம்), குகநாதன் (சுவிஸ்), மாலதி, பத்மநாதன் (போதனாசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லையா, பார்வதி ஆகியோரின் அன்பு சகோதரனும், சாந்தினி, திலகவதி, தவராசா, லதா ஆகியோரின் அன்பு மாமனும், சஞ்சீவன், அர்ச்சனா, கானகன், மகிழ்ராசன் (ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை)-அஜித்தா, கார்த்திகா-தாமரைச் செல்வன், கோகுலதாஸ், ஐங்கரன், நிஷாந்தன், பானு, கௌதம், தீபிகா, மௌலிகா, மாதுலன் ஆகியோரின் அன்புப் பேரனும், பேரரசு, எழிலரசு ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2014) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பழைய ஆஸ்பத்திரி வீதி,**
(Science Center வீதி),
**கரவெட்டி மேற்கு, கரவெட்டி.** (50163)(10)

தகவல்: **குடும்பத்தினர்**
**021 320 1668**

## விற்பனைக்கு

MD 90 மோட்டார் சைக்கிள் இலக்கம் BAN-xxxx மற்றும் பாவித்த 400 ஓடுகள் விற்பனைக்குண்டு.

T.P : 077 706 6487 (50135)(7.6.3)

## Computer விற்பனை

4 மாதம் பாவித்த i3, Intel Board (i7)suport), 2GB Ram, 500GB HD, 19" LED View Sonic, UPS, Wireles Key Board & Mouse, Speaker, Web cam கணினி குறைந்த விலையில். (50099)(7.6.3)

தொடர்பு : 077 433 6247

## விற்பனையாளர் தேவை

எமது நிறுவனத்துக்கு நடமாடும் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு நன்கு அனுபவமுள்ள யாழ் மாவட்டத்தில் அனைத்து பிரதேசங்களும் தெரிந்த விற்பனையாளர் தேவை.

நேரில் தொடர்புகொள்ளவும் :

077 072 6210 (50153)(10)

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் சண்முகலிங்கம் புறூடி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் கொழும்பு கல்கிசை சென்.தோமஸ் கல்லூரி)

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சண்முகலிங்கம் புறூடி கடந்த 18.07.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் புறூடி-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சற்குணவதி பஞ்சலிங்கம் புறூடி, சிவபாக்கியவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயாம்பாள், பேரம்பலம், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, இராசலட்சுமி குணரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், காஞ்சனா, தர்சன் ஆகியோரின் பெரிய தந்தையும், வாமதேவா, இராஜேஸ்வரி (தேவி) மகாதேவா, ஜெயதேவா, கருணாசலதேவா, Dr. தேவகி, வாசுதேவா ஆகியோரின் சிறிய தந்தையும், சிறாணி, சுவேந்தினி, மகேந்திரன், பாமினி, பாஸ்கர் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.07.2014 வெள்ளிக்கிழமை பி.ப 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 122, A.V ரோட்,
**அரியாலை, யாழ்ப்பாணம்.** (50156)(10)

தகவல்: **ம.ப.புறூடி (சகோ்தரன்)**
**077 625 7918**

## மரண அறிவித்தல்



### செல்லையா சேனாதிராஜா (யப்பான்)

(ஓய்வுபெற்ற சுங்க இலாகா உத்தியோகத்தர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜப்பான் என்று அன்பாக அழைக்கப்பட்ட செல்லையா சேனாதிராஜா நேற்று (19.07.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், ரவீந்தினி, சசிகலா, சந்தர், சுகந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுமார், கிஷ்ணகுமார், கமலாதேவி, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான தங்கலட்சுமி, லிங்கசாமி மற்றும் யோகராசா காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் இரத்தினேஸ்வரி, தர்மலிங்கம், கமலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் எரிக்ஷான், நிரோசன், சங்கமி, கேசினி,கீர்த்தமி, கிசோனன், நிதேசன், ஜனுயன், பாவினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.77/1, ஆனந்தன் வடலி வீதி, அரியாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 77/1, ஆனந்தன் வடலி வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.** (50152)(10)

தகவல்: **குடும்பத்தினர்**
**021 205 1031**

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றும்
திருமதி கிருஸ்ணசாந்தி சிவகாந்தன்
அவர்களின் தாயார்

**திருமதி அன்னம்மா சின்னத்துரை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை. (50129) (7.6.3)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சாந்தநாயகி (சாந்தா) சிதம்பரலிங்கம்**

தோற்றம்
12★08★1940

மறைவு
20★07★2004

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
என்றென்றும் ஒளி வீசி இருந்தாயே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் – உங்கள்
நீங்கா நினைவுகளுடன் நாம் இருப்போமே
உங்கள் ஆசியுடன்....

(சி/15456)(4.3.6)

**பிள்ளைகள்:** நளினி, கவிராஜ், **மருமகன்:** ஜெயக்குமார்,
**பேரப்பிள்ளைகள்:** பிருதீவின், அஸ்வின்.

## மரண அறிவித்தல்



## மாணிக்கம் குணசேகரம்

அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் குணசேகரம் 15.07.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதி - இலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயமாலா (லண்டன்), நிஸாந்தன் (லண்டன்), தர்ஷிகா, பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தன் (லண்டன்), மிதிலா, யோககாந்தன், ஜெகமகேன் ஆகியோரின் மாமனாரும், ஜெறிமி, ஜெஸ்வின் (லண்டன்), கனுஸ்ரன், ஹேம்சிகா, கஜிபனா, தேனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெகசோதி, சூரியகுமார், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தர்மகுலசிங்கம், பரமேஸ்வரி (சுவிஸ்), பாலசிங்கம் (ஜேர்மனி), கோகுலசிங்கம் (சுவிஸ்), யோகராணி, லலிதா (ஜேர்மனி), கேசவன் (லண்டன்), ரஞ்சி, செல்லம்மா, காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம், ஜெகராணி, விஜயகுலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை ந.ப.12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.ஒருமணிக்கு அராலி கந்தன் தாழை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலிதெற்கு,
வட்டுக்கோட்டை. (50096) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்...

யாழ்ப்பாணம் ஜூலை 20

யாழ்ப்பாணம் - திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 30 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ)

★★★

வடமராட்சி, ஜூலை 20

பருத்தித்துறை, கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் தெப்பத் திருவிழா இன்று ஞாயிறு மாலை 4 மணி தொடக்கம் நடராசா கலை அரங்கம் அமைந்துள்ள பருத்தித்துறை கடற்கரையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் மேள வாத்தியங்கள் சகிதம் சண்டிகா பரமேஸ்வரி அம்மன் எழுந்தருளி வட்டுக்கோட்டை கிராமிய கலைக்குழுவினரின் குதிரையாட்டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், மானாட்டம் சகிதம் பிரதான வீதி வழியாக கடற்கரையைச் சென்றடைந்து அங்கு இருக்கை கொள்ள தெப்பத்திருவிழா இடம்பெறும். (ஒ-173)

★★★

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவி பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

தேர்த் திருவிழா 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமையும் நடைபெறும். (ஒ-250)

★★★

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

தேர்த் திருவிழா 25ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் இடம்பெறும். (ஒ-250)

## பொதுக் கூட்டம்

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் நடைபெறும் என்று அதிபர் அறிவித்துள்ளார்.

பாடசாலையில் அமைக்கப்படவுள்ள மஹிந்தோதய தொழில்நுட்பபீட கட்டட வேலை ஆரம்பித்தல் மற்றும் பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாட இருப்பதனால் பெற்றோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-288)

◆◆◆

கைதடி, ஜூலை 20

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் ஆ.நடராஜா தலைமையில் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சங்கத்தின் அபிவிருத்தி சம்பந்தமாகவும் எதிர்காலத்தில் நவீனமயப்படுத்தப்பட வேண்டியவை குறித்தும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பொதுச்சபை உறுப்பினர்களைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-288)

## மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வு கைதடியில்

கைதடி பிரதேச மாணவர்களுக்கு சைக்கிள்களும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவி நிதியும் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் ஊடாக டென்மார்க்கில் வதியும் புலம் பெயர்ந்தவர்களின் நிதி உதவியுடன் இவை வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் 7 மாணவர்களுக்கு சைக்கிள்களும், வறிய குடும்பத்தைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 5 பேருக்கு நிதி உதவியும் வழங்கப்படவுள்ளன. கழகத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் டென்மார்க்கிலிருந்து வருகை தந்துள்ள எஸ்.குகதாஸ் தம்பதியர், இ.அப்புத்துரை, பி.தர்மலிங்கம், ந.சுமன் ஆகியோருடன் கைதடி லயன்ஸ் கழகத் தலைவர் து.மகேந்திரனும் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஒ-9-288)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமணி பொன்னுத்துரை




கோண்டாவில் கிழக்கு, வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும், புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கமணி பொன்னுத்துரை நேற்று (19.07.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நடராசா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.17, கே.கே.வீதியில் அமைந்திருக்கும் இல்லத்திலிருந்து இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு, தில்லையடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கே.கே.வீதி, புத்தளம்.
032 226 5401 (50123)(5.6.3)

தகவல்:
பி.குணலிங்கம்,



### பசுபதி பாலச்சந்திரன்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், துறைமுக அதிகாரசபை)

புலோலி கிழக்கு, தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, பொற்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி பாலச்சந்திரன் 18.07.2014 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி (சட்டத்தரணி) - பொன்னம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபதி (ஆசிரியர்), பிறைசூடி (சட்டத்தரணி), பாலாம்பிகை, சிவகணேசன் (நிர்வாக அதிகாரி), உருத்திர கணேசன் (போக்குவரத்துச் சபை முகாமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா (சட்டத்தரணி) - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரியின் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) கணவரும், திரிபுவனசுந்தரி (வைத்தியர் MOH, நல்லூர்), தேவகாந்தன் (வைத்தியர் - மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தகப்பனும், தனீஸ்வரன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), ரஜேந்தினி (தாதிய உத்தியோகத்தர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனும், கானுப்பிரியா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை - மாணவி), லாஹித்தியன் (வளர்மதி பாலர் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15, பொற்பதி வீதி,
கொக்குவில். 021 221 2370 (50118) (12.3.6)

தகவல்;
குடும்பத்தினர்.

## தையல் பயிற்சி வகுப்பு

கொழும்பில் பயிற்றுவிக்கும் தையல் ஆசிரியையினால் 10 ஆவது Batch சிறந்த விளக்கத்துடன், இலகுவான முறையில் சாறி பிளவுஸ்கள், சல்வார்கள், பாவாடைகள், பிளவுஸ்கள், சட்டைகள், நைட்டி பயிற்றப்படும். ஆரம்பம்: 09.08.2014 காலை, 7ஆம் திகதிக்கு முன் பதியவும். 443, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0779 297 474

(சி/14700)(5.6.3)

## காணி விற்பனை

கோப்பாய் வடக்கு, இராசபாதை சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் (கிருஷ்ணன் கோயில் வீதியில்) தோட்டம் செய்யக்கூடிய குடியிருப்புக் காணி 12 பரப்பு விற்பனைக்குண்டு.

(சி/14670)(4.6.3)

தொடர்பு: 077 495 5593 (சுதா)

## காணி விற்பனைக்கு

யாழ். கண்டி வீதி, அரியாலை பொன்னம்பலம் சந்தியில் மெயின் வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் மூன்று பரப்புக்காணி (பத்திரிப்புக் கட்டியபடி) விற்பனைக்குண்டு. தொடர்பு: 011 2360525, 0714360525

(சி/15505)(5.6.3)

## விற்பனைக்கு

இத்தலி தச்சுவேலை பட்டறை விற்பனைக்கு உண்டு. (சி/15501)(5.6.3)

தொடர்பு: 0776 092 839 / 0778 946 757

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 32,UK Citizen மணமகனுக்கு படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

www.friendsmatrimony.com

(சி/15503)(5.6.3) தொடர்பு: 011 722 1674

## வைத்தியம்
### ஞாயிறு தொடக்கம் திங்கள் மட்டும்

நாள்பட்ட தலைவலி கழுத்து, தோள், முள்ளந்தண்டு, அடி முள்ளந்தண்டு வலிகள், முழங்கால், குதி, பாத வலிகள், Diabitics, High B.P, High Cholestrol, வாதம், Rheumatic, Rheumatoid, Arthritis, நெஞ்சுச் சளி, இருமல், அலர்ஜி, ஆஸ்த்துமா, இழுப்பு, குழந்தைப் பேற்றை நாடும் தம்பதியரின் பிரதான தேவைகள். (முட்டை வளர்ச்சி குறைபாடு, கருப்பைச் சுவர் தடிப்பு குறைவு) கெட்டித்தனம் இருந்தும் பாடசாலையில் படிக்க, Marks எடுக்க, நல்ல பெயர் எடுக்க முடியாதவர்களுக்கான உள வள ஆலோசனை வழிகாட்டல்.

படித்து இருந்தும் மகிழ்ச்சியாக வாழ முடியாமல் மனக் கோளாறுகளால் தம்மை அறியாமல் பீடிக்கப்படும், துன்புறுபவர்களுக்கான விசேட தெரபிகள்.

சித்த வைத்தியர் (சி/15506)(7.6.3)

Dr.R.Sivagurunathan 077 730 1669

நல்லூரில் சந்திக்கலாம். சந்திப்பு இலவசம்.



காரைநகர் திண்ணபுரம்
சிவன் கோயில்
## ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்
## வருடாந்த தேவி மஹோற்சவம் - 2014

உமையும் உமைஒரு பாகனும் ஏகஉருவில் வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்ய வைத்தார் இனிஎண்ணுதற்குச்
சமையங்களுமில்லை ஈன்றெடுப்பாள் ஒருதாயுமில்லை
அமையும் அமையுறு தோழியர் மேல் வைத்த ஆசையுமே.
- அபிராமி அந்தாதி

சிவனடியார்களே!

நிகழும் ஜய வருஷம் ஆடி மாதம் 5ஆம் நாள் (21.07.2014) திங்கட்கிழமை வருடாந்த தேவி மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடி உள்ளது.

அத்தருணம் அடியார்கள் யாவரும் ஆசாரசீலர்களாக வந்து மஹோற்சவத்தைக் கண்டு களித்து தேவியை வணங்கி இஷ்ட சித்திகளைப் பெறுவீர்களாக.

### கிரியாகால நிகழ்ச்சிகள்

ஆடி மாதம் 5ஆம் நாள் (21.07.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணி கொடியேற்றம். அதனைத் தொடந்து அம்பாள் இடப வாகனத்தில் திருவீதியுலா வருதல்.

ஆடி மாதம் 8ஆம் நாள் (24.07.2014) வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கு கைலாய வாகனத்தில் அம்பாள் திருவீதியுலா வருவார்.

ஆடி மாதம் 13ஆம் நாள் (29.07.2014) செவ்வாய்க்கிழமை
தேர் திருவிழா. காலை 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9.30 மணிக்கு அம்பாள் தேரில் எழுந்தருளி மூன்றாம் வீதியுலா வருவார்.

ஆடி மாதம் 14ஆம் நாள் (30.07.2014) புதன்கிழமை
காலை 7.00 மணிக்கு பூரகர்மம் (ருதுசாந்தி) அம்பாளுக்கு நடைபெறும். 10.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை இடம்பெற்று தீர்தோற்சவமும் நடைபெறும். இரவு 8.00 மணிக்கு கொடியிறக்கமும் நிகழும்.

1) தினமும் காலை 8.00 மணிக்கு பகல் உற்சவமும் மாலை 5.00 மணிக்கு இரவு உற்சவமும் ஆரம்பமாகும்.
2) திருவிழா நடைபெறும் பத்துத் தினங்களும் மாகேஸ்வர பூஜை (அன்னதானம்) நிகழும்.

குறிப்பு: ஆலயத்திற்கு வரும் அம்பிகை அடியார்கள் தங்களால் இயன்றளவு பால், தயிர், இளநீர், எண்ணெய், பூமாலை பூக்கள் மற்றும் அபிஷேகத் திரவியங்கள் போன்றவற்றைக் கொடுத்துதவி இறையருள் பெறுக.

அனைவரும் வருக சிவன் சக்தி அருள் பெறுக
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஆலய ஆதீன கர்த்தாக்கள்
ஆ.அம்பலவிமுருகன் மு.சுந்தரலிங்கம்

திண்ணபுரம், காரைநகர்.

(G/15403)(7.6.3)

## காணி தேவை

கரணவாய் மூத்த விநாயகர் கோயிலுக்கும் மாலிசந்திப் பிள்ளையார் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் பிரதான வீதிக்கு அருகில் இரண்டு பரப்பு வெறும் காணி தேவை.

(49706)(5.6.3) தொடர்பு: 077 615 2945







## பரதநாட்டிய அரங்கேற்றம்

கனடா சிதம்பர கலைமன்ற முதல்வர்
'நாட்டிய வித்தகி' கௌரிபாபு
அவர்களின் மாணவியும், கொக்குவில் கிழக்கு
கிருபாகரன் சாந்தினி தம்பதியரின்
ஏக புதல்வியுமாகிய

## பிருந்தா கிருபாகரன்

அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம்.

**காலம்:**
இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை
மாலை 4 மணி

**இடம்:**
சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்)
இல.37, சேர் பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

**தலைவர்**
செந்தமிழ்ச் சொல்லருவி க.லலீசன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தம்பதியர்
(முன்னாள் துணைவேந்தர், தலைவர், சமூகவியல்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
மருத்துவர் சி. யமுனாநந்தா (வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)
திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன் (முதுநிலை விரிவுரையாளர் இந்துநாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கலையின்பம் பருகி களிப்புற அன்பாக அழைக்கின்றோம்

(50134)(10.6.3) ஞானசுந்தரம் கிருபாகரன், கிருபாகரன் சாந்தினி

## வேலை ஆள் தேவை

வெல்டிங் வேலைக்கு அனுபவம் உள்ள ஆள் தேவை.

T.P : 077 491 1993 (80125)(7.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (Brown Road) நல்ல அமைதியான சூழலில் காணி விற்பனைக்கு உண்டு.

(49691)(12.3.6) தொடர்பு: 072 959 6597

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பாம் ஸ்கூலுக்கு மேற்குப் புறத்தில் (100 யார் தூரத்துக்குள்) கலைவாணி வீதியில் 12 அடிப்பாதை கொண்ட 3 ஆவது காணி நான்கு பரப்பு(4) உடன்விற்பனைக் குண்டு.கருணாலயத்துக்கு மிக அண்மையிலுள்ளது. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:075 767 6739,077 666 0631 (48994)(4.3.6)

## வேலையாள்கள் தேவை

ஜி.எச்.எ.டி.சில்வா அன் கோ என்ற நிறுவனத்திற்கு A/L இல் கணக்கியல் பிரிவில் கல்வி கற்ற ஆண்/பெண் இருபாலாரும் தேவை. (வயதெல்லை 20 - 40 வரை)

தொடர்பு: (43389)(12.3.6)
ஜி.எச்.எ.டி.சில்வா அன் கோ,
இல.64, பசார் வீதி, வவுனியா.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் றோட் சந்திக்கு அருகில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: (41326)(12.3.6)
077 022 2147/076 646 9503

## பூசகரின் வீட்டில் திருடிய சிறுவர்கள்

கரணவாய், ஜூலை 20

துன்னாலைப் பகுதியிலுள்ள கோயில் பூசகரின் வீட்டில் பித்தளைப் பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் இரு சிறுவர்களை நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

துன்னாலை இந்திரம்மன் கோயில் பூசகரின் வீட்டின் பின்புறத்தில் வைக்கப்பட்டிருந்த பித்தளைப் பாத்திரங்கள் களவாடப்பட்டு நெல்லியடிப் பகுதியில் உள்ள இரும்பு விற்பனை நிலையத்தில் 4,500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட விசாரணையை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அதே பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய இரு மற்றும் 16 வயது சிறுவர்களைக் கைதுசெய்தனர்.

சிறுவர் இருவரும் தற்போது நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-108)

## கூட்டுறவு தினவிழா விளையாட்டுப் போட்டி துரையப்பா அரங்கில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையின் 92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை உரிய நேர அட்டவணையின்படி துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த இந்தப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-ரி)

## மில்க்வைற் கனகராசா நினைவு தினம்

மில்க்வைற் கனகராசாவின் 16ஆவது நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனைஆராய்ச்சிநிலையத்தில் இடம்பெறவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அண்ணா நிறுவனத்தின் அதிபர் பொ.நடராசா கலந்து கொள்வார். (க)

### சின்ன வெங்காயம் அறுவடை ஆரம்பம்

சுழிபுரம் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. தற்போது அறுவடை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளது. சுன்னாகம் சந்தையில் இருந்தும் வியாபாரிகள் வெங்காயம் கொண்டுவந்து விற்பனை செய்கின்றனர். (ஒ-28)


## UHF / VHF Walkie Talkie for Easy Rent



- Competitive prices.
- Exclusive 40 KM UHF operator in Sri Lanka.
- Free supplement of required licence
- Quick and multiple connectivity.
- 24 years of solid trusted excellence.

TRC APPROVED

24 x 7 Guaranteed Service

For More Information Contact
Kumara-0770 106 090 / Chandima-0770 106 085 / Aruna-0770 106 086 / Lalith - 0770 106 088

Trunknet Powered by MOTOROLA

Dynacom Engineering (Pvt) Ltd. IWS Centre : 451, Kandy Road, Kelaniya. www.iwsholdings.com

An IWS HOLDINGS Company

# இராணுவத்தினரின் பிரசன்னமே வன்கொடுமைகளுக்குக் காரணம்

## இப்படி குற்றம் சாட்டுகிறார் மனோகணேசன்

யாழ்ப்பாணம், ஜூலை 20

பதினொரு, ஒன்பது வயது பாடசாலைச் சிறுமிகளை வல்லுறவுக்கு உள்ளாக்குபவர்கள் ஒரு போதும் வீரர்களாக இருக்க முடியாது. அவர்கள் எந்தப் பிரிவில், எந்த பதவியில், எந்த இனப்பிரிவில் இருந்தாலும் காடையர்களாகத்தான் இருக்க முடியும் என்று சாடியுள்ள மனோகணேசன், இந்தச் சம்பவங்கள் இன்று தமிழர் பிரதேசங்களில் நடத்தப்படும் இராணுவ ஆட்சியின் கோர முகமே என்றும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு,

தமிழ் தலைமைகளும், முற்போக்கு அணியினரும் இணைந்து இதை தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சி தலைவர்களின் கவனத்துக்கும், சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கும், தமிழக அரசியல் கட்சிகளின் கவனத்துக்கும் கொண்டு செல்ல வேண்டும். இதற்கான முன்முயற்சிகளை ஜனநாயக மக்கள் முன்னணி எடுக்கும்

காரைநகரைச் சேர்ந்த 11, 9 வயது சிறுமிகள் இருவர் காரைநகர் கடற்படை முகாமை சேர்ந்த சிப்பாய் களால் தொடர்ச்சியான வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டும், சம்பந்தப்பட்ட சிறுமிகளால் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள சிப்பாய்களை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்ட முடியாததால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள் என்ற விடயமும், இந்த விடயத்தை பெரிது படுத்த வேண்டாம்என்று சம்பந்தப்பட்ட குடும்பத்தவர் மிரட்டப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள தகவல்களும் மிகவும் பாரதூரமானவை.

போர் வெற்றியின் பின்னர் இலங்கையின் படைதரப்புகளை சேர்ந்த சிப்பாய்களையும், அதிகாரிகளையும் 'புனித பசுக்கள்' என்ற அந்தஸ்த்துள்ளவர்களாகவே, இலங்கையின் அனைத்து பெரும்பான்மை கட்சிகளும் கருது கின்றன.

படைத்தரப்பினர் எந்த ஒரு தவறையும், குறிப்பாக தமிழருக்கும் - தற்போது முஸ்லிம்களுக்கும் எதிராக செய்து விட்டு, சட்டத்தின் பிடியில் இருந்து சுலபமாக தப்பி விடலாம் என்ற எழுதப்படாத விதி நாட்டில் நிலவுகிறது. படைத் தரப்பினர் பற்றிய எந்த ஒரு விமர்சனத்தையும், குற்றச் சாட்டையும் நாம் முன்வைப் பதை பெரும்பான்மை கட்சிகள் விரும்புவது இல்லை. இந்த நிலைமை இனியும் நீடிக்க கூடாது.

படைத்தரப்பினர் 'புனித பசு'க்களாக கருதப்படும் இன்றைய யதார்த்தம் உடைத் தெறியப்பட வேண்டும். தமிழ் பிரதேசங்களில் இருந்து இராணுவம் மீளப் பெறப்பட வேண்டும் - என்றார். (ஐ-5)

## தொடர்ச்சிகள்

### ரமபோஷவின்

தென்னாபிரிக்க அமைச்சரவை அறிய விரும்புவதாக அந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு தென்னாபிரிக்கா சம்மதித்திருந்தது. அதனடிப்படையில் இலங்கை அரசு தரப்புப் பிரதிநிதிகளையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் தென்னாபிரிக்காவுக்கு அழைத்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது.

இதன் பின்னர் இலங்கைக்கு இரு நாள் பயணமாக கடந்த 7 ஆம், 8 ஆம் திகதிகளில் தென்னாபிரிக்கத் துணை ஜனாதிபதியும், இலங்கைக்கான விசேட தூதுவருமான சிறில் ரமபோஷ வருகை தந்திருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோருடன் அவர் சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.

இந்தப் பயணங்களின் முடிவில் இந்தியாவுக்குச் செல்வதற்கு ரமபோஷ திட்டமிட்டிருந்தபோதும் அது இறுதியில் கைவிடப்பட்டிருந்தது.

இலங்கைப் பயணம் தொடர்பில் இந்தியாவுக்குத் தெரிவிக்கப்படும் என்று ரமபோஷ, கூட்டமைப்புடனான சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தென்னாபிரிக்கா திரும்பியுள்ள ரமபோஷ, இலங்கைப் பயணம் தொடர்பில் இந்தியாவுக்கு தெளிவாக விளக்கி அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார். அத்துடன் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை தென்னாபிரிக்க அமைச்சரவை அறிய விரும்புவதாகவும் அந்த அறிக்கையில் அவர் கோரியுள்ளார். (த-5)

### அநாமதேய

விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் கேள்வி எழுப்பியிருந்தது. அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. குழு சார்பாக விசாரணையை மேற்கொள்பவர்கள் யார் என்று தெரியாமல் எவ்வாறு அந்த விசாரணை மீது நம்பிக்கை வைக்க முடியும்? இந்த அநாமதேயமான விசாரணைக்குழு, ஒருவேளை, கங்காரு நீதிமன்றத்தை விடவும் மோசமானதாக இருக்கலாம். எனவே இலங்கை இத்தகைய விசாரணையை ஒரு போதும் ஏற்றுக்கொள் ளாது.

குறைந்தபட்சம் விசாரணையை மேற்கொள்பவர்களின் அடையாளங்கள் கூட வெளிப்படுத்தப்படாத நிலையில், இலங்கையின் ஒத்துழைப்பைஎதிர்பார்ப்பது அபத்தம்.

ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள மூன்று நிபுணர்களில் ஒருவரான அஸ்மா ஜெஹாங்கீர் வெளியிட்டு வரும் தொடர்ச்சியான கருத்துகள் வருத்தமளிக்கின்றன. அவர் இலங்கையை இலக்கு வைத்து தனிப்பட்ட முறையில் பரப்புரைகளில் ஈடுபடுகிறார் என்று தெரிகிறது.

போருக்குப் பிந்திய நல்லிணக்க முயற்சிகளை, சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியினர் சீர்குலைக்க முனைகின்றனர்.

குறைகளைக் களைய இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைச் சர்வதேச சமூகம் புறக்கணிக்கமுடியாது. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவை வெளிநாட்டு அமைப்பு என்று திரிபுபடுத்துவதும் தவறு. எந்தவொரு சூழ்நிலையிலும், இலங்கை அரசு வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறையை அனுமதிக்காது-என்றார். (த-5)

### 13 ஆவது

திருத்தத்தின் மூலம் எமக்குக் கிடைத்த அனுசரணைகள் என்று கூறமுடியாது. 13 ஆவது திருத்தத் தேர்தல் எம்மை அதிகாரத்தில் ஆழ்த்தியது. எமது அந்தப் பொது அதிகாரத்தை முன்வைத்தே நாம் எமது சேவைகளை ஆற்றி வருகின் றோம்.

நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் 13 ஆவது திருத்தம் ஒரு தோல்வி என்றே கூற வேண்டும்.

உரிய தருணத்தில் எங்கள் சாதனைகள் வெளிவரும். நாம் சாதிப்பவற்றைச் சரியச் செய்ய சதி செய்யும் எமது எதிர்க்கட்சிச் சகோதரர்களுக்கு நாங்கள் எமது சாதனைகளைக் கூறவேண்டிய அவசியம் கிடையாது - என்றார். (த-5)

### அரசின்

அவசியம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு, விடயப் பரப்புக்களை விரவாக்கி, போர்க் குற்றம் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி பணித்துள்ளார். இந்த உள்ளக விசாரணைப் பொறிமுறையை நாட்டின் எதிர்க் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் கடுமையாக விமர்சித்துள்ளன.

சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், இந்த உள்ளக விசாரணைப் பொறிமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகப் பேச்சாளர் ருபேட் கொல்விலிடம் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டுப் பொறிமுறைகள் நம்பகத்தன்மைமிக்க சுயாதீன - சுதந்திரமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

சகல தரப்பாலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு உள்நாட்டுப் பொறிமுறைகளை ஏற்படுத்துமாறு ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் ஊக்குவிக்கும் அதேவேளை, அவ்வாறான பொறிமுறைகள் நம்பகத்தன்மைமிக்க சுயாதீன - சுதந்திரமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தராதரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

விசாரணைக் குழுவிடம் தகவல்களை வழங்கும் எவரும் அச்சுறுத்தலையோ அல்லது பழி வாங்கப்படுதலையோ எதிர்கொள்வதைத் தடுப்பதற்கான உத்தரவாதங்களும், நடவடிக்கைகளும் அவசியம்.

ஜெனிவாத் தீர்மானத்துக்கு அமைவாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணையின் படி, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தராதரங்கள் காணப்படுகின்றதா என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் கண்காணிக்கும் - என்றார். (த-5)

### பொலிஸ்

ளர் ம.பிரதீபன் மேற்கண்ட விடயத்தைத் தெரியப்படுத்தினார்.

அச்சுவேலி நகரப் பகுதியில், ஒன்பது தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணி மற்றும் அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆகியவற்றை நீண்டகாலம் தமது ஆக்கிரமிப்பில் வைத்துள்ள இராணுவத்தினர் தற்போது அதனை நிரந்தரமாகக் கையகப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இதற்கமைய சுவீகரிப்பு அறிவித்தல் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி ஒட்டப்பட்டிருந்தது.

இதன் பின்னர் காணிகளை நில அளவை செய்வதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் கடந்த மாதம் 2 ஆம் திகதி குறித்த பகுதிக்குச் சென்றனர். இதன்போது அங்கு திரண்ட காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர், நில அளவை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து நில அளவை நடவடிக்கைகளைக் கைவிட்டுத் திரும்பியிருந்தனர்.

பொதுமக்கள் தமது ஆட்சேபனையையும் மீறி நில அளவை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடும் செய்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே மீளவும் குறித்த காணிகளை அளவீடு செய்வதற் காக நாளை திங்கட்கிழமை மீளவும் நில அளவைத் திணைக் களத்தினர் குறித்த பகுதிக்கு வரவுள்ளதாகவும், பொலிஸ் பாதுகாப்பு உள்ளிட்ட ஏற்பாடுகளைச் செய்யுமாறு நில அளவைத் திணைக்களத்தினரிடமிருந்து பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பிரதேச செயலாளரால், யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் காணி சுவீகரிப்பு அலுவலருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த பெரும்பான்மையின உத்தியோகத்தர் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும், நாளையதினம் பொலிஸ் பாதுகாப்புடன் குறித்த காணி நில அளவை செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது. இதற்கு அனைவரும் ஒன்று திரண்டு எதிர்ப்பை வெளியிடுவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (த-5)

### கடற்படை

நில அளவைத் திணைக்களத்தினரைப் பொதுமக்கள் திரண்டு மறித்துத் திருப்பியனுப்பியிருந்தனர்.

அதன் தொடர்சியாக 14 ஆம் திகதியும் அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படப் போவ்தாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அங்கு திரண்ட காணி உரிமையாளர்கள், உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே அளவீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ள காணியைத் துப்பரவு செய்து தாம் அதில் குடியமரப் போவதாகத் தெரிவித்திருந்தனர்.

இதற்குக் கடற்படையினர் எதுவித இடையூறுகளையும் ஏற்படுத்தக் கூடாதென்று, அன்றையதினமே பொதுமக்கள் கடற்படை அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தனர்.அன்றைய தினம் நிலஅளவைத் திணைக்களத்தினர் அந்தப் பகுதிக்கு வரவில்லை.

இதன் பின்னர் கடந்த 16 ஆம் திகதி நில அளவைத் திணைக்களத்தினர் தீடீரென, குறித்த காணிகளைச் சுவீகரிப்பதற்காக நில அளவை செய்திருந்தனர். இதன்போது கடற்படையினரின் முகாம் அமைந்திருந்த பகுதியை மாத்திரமே நில அளவை செய்திருந்தனர். அதற்கு வெளியில் அமைந்திருந்த - பொதுமக்கள் துப்பரவு செய்ய திட்டமிட்டிருந்த காணியை அளவீடு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் முயற்சித்தபோது பொதுமக்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இதனால் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியிலிருந்த காணி மாத்திரம் நில அளவை செய்யப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில், ஏற்கனவே திட்டமிட்டவாறு குறித்த காணிகளைத் துப்பரவு செய்யப்போவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைக்கு தமது முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். (த-5)

### ஒருங்கிணைப்பு

கிணைப்புக் குழுக்களின் தலைவர்களாக ஈ.பி.டி.பியின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில்வஸ்திரி அலென்ரின், முருகேசு சந்திரகுமார் ஆகியோரே உள்ளனர்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலேயே, பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் யாவும் அனு மதிக்கப்படுகின்றன. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன் முகப்படுத்தப்பட்ட வரவு - செல வுத் திட்ட ஒதுக்கீடுகள், நெல்சிப் திட்டங்கள் என்பனவும் இதில் அங்கீகரிக்கப் படுகின்றன.

மேலும் மக்கள் நேரடியாகக் கலந்துகொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்கும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இரண்டு வருட காலத்துக்கு மேலாக நடத்தப் படாமல் இருக்கின்றபோதும், பிரதேச செயலாளர்களோ அல்லது யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமோ எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப் படாமல் இருப்பதால், அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்காத நிலைமை இருக்கின்றது. ஆனாலும் பிரதேச செயலாளர்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரிடம் மாத்திரம் கையொப்பத்தைப் பெற்று திட்டங்களைச் செயற்படுத்தும் நிலைமை காணப்படுகின்றது.

இதேவேளை மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கூட இன்னமும் அங்கீகரிக்கப்படாத நிலையிலேயே உள்ளன. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் இன்னமும் முழுமையாக நடத்தி முடிக்கப் படாமையால் இந்த நிலைமை காணப்படுகின்றது. (த-5)

### போர்க்

பிலும் விசாரணை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆனால் காணாமற்போனோர் ஆணைக்குழுவுக்கு இதுவரையில், காணாமற்போனோரின் உறவினர்கள் மாத்திரமே விண்ணப்பித்து சாட்சியமளிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஏனையோர் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளிப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

விரிவாக்கப்பட்ட புதிய விடயப் பரப்புக்கும், காணாமற்போனோரின் உறவினர் மாத்திரமா சாட்சியமளிக்க முடியும் என்று ஆணைக்குழுவின் உயர் அதிகாரியிடம் கேட்டபோது, புதிய விடயப் பரப்பு போரின் போதான மீறல்கள் குறித்து விசாரணை செய்யுமாறு பணித்துள்ளது.

அதனடிப்படையில் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற சம்பவங்கள் விசாரணை செய்யப்படவுள்ளன. இதன் போது காணாமற் போனோரின் உறவினர்கள் தவிர்ந்த, எவரும் சாட்சியமளிக்க முடியும். இந்த மீறல்கள் தொடர்பில், எமது ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமும் அனுப்பி வைக்க முடியும் என்று அந்த அதிகாரி குறிப்பிட்டார். (த-5)


# சம்பியனானது ஹென்றியரசர் கல்லூரி

வலி.வடக்கு. ஜூலை 20
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டைக் கொண்டாடும் முகமாக நடைபெற்ற யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகியது.
கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.
போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. இரு அணிகளும் சம பலம் வாய்ந்த அணிகள் என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டன.
முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகிய 7ஆவது நிமிடத்தில் மிகவும் வேகமாக உதைக்கப்பட்ட நேர் உதை ஒன்றைக் கோல் கம்பத்துக்கு அண்மையில் தடுத்து நிறுத்திய அலன்ராஜ் பந்தைத் தட்டிக் கொடுக்க யாரும் எதிர்பாரா வண்ணம் அனோஜன் அதனை உதைத்துக் கோலாக்கிக் கொண்டார்.
போட்டியில் முதல்பாதி ஆட்டத்தில் ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சிகள் அனைத்தும் எதிரணியினரால் முறியடிக்கப்பட்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.
ஆட்ட நிறைவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.
(த-86)



வெற்றி பெற்ற அணியினர்

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 20
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 20
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆயர் ஜோசப் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து வவுனியா உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 20
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2 ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

கரணவாய், ஜூலை 20
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமைதிக்கம்இளைஞர்விளையாட்டுக்கழக மைதானத்தில் பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டம் ஒன்றில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியும், முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணியும் மோதவுள்ளன. (த-108)



அரியாலை காந்தி விளையாட்டுக்கழகம் முதல் முறையாக நடத்திய காந்தி பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரி பிறின்ஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது. (த)

# இலங்கை வங்கியின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் ஜூலை 20
வடமாகாணத்தில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளைகளுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இன்றைய நிகழ்வுக்குப் பிரதம விருந்தினாரக இலங்கை வங்கியின் பொது முகமையாளர் டி.எம்.குணசேகரவும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கியின் விற்பனை மற்றும் நெறிப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் ஜினசோமவும், இலங்கை • வங்கியின் கிளை வங்கியியல் பிரதி பொது முகாமையாளர் டபிள்யூ. பி. ருசல் பொன்சேகாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

# சென்.மேரிஸ், ஞானமுருகன் அபாரமாக ஆட்டத்தில் அசத்தின

யாழ்ப்பாணம், ஜூலை 20
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இடம் பெற்று வருகின்றன.
கடந்த புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 20
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
வல்வை விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதிக் கொண்டது.
இதில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி 3:2 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்றது.
சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்றது.(த-23)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது. 17 வயது பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வாரம் வித்தியாலய அதிபர் சி.மனோகரன் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. கௌரவிக்கப்பட்ட வீராங்கனைகள் விருத்தினர்களுடன். (த-23)

# பிலிப் லாம்ப் ஓய்வு



அண்மையில் பிரேஸிலில் நடந்த உலகக்கிண்ண உதைபந்துப் போட்டியில் 24 ஆண்டுகளுக்கு பிறகு ஜேர்மனி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி சாதனை படைத்தது. ஜேர்மனி அணியை வெற்றிகரமாக வழிநடத்தியவர் பிலிப் லாம். இந்த நிலையில் அவர் சர்வதேச உதைபந்தில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டியின் போதே இந்த முடிவை எடுத்து விட்டதாகவும், உலக சம்பியன் அந்தஸ்துடன் மகிழ்ச்சியுடன் விடை பெறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவருக்கு புகழாரம் சூட்டியுள்ள ஜேர்மனி உதைபந்துச் சங்கத்தின் தலைவர் வோல்ப்காங் நியர்ஸ்பாச் கருத்து வெளியிடுகையில்,

"பிலிப் லாம்ப் என்னைத் தொடர்பு கொண்டு பேசி, ஓய்வு முடிவு குறித்துத் தெரிவித்தார். அப்போது ஓய்வு முடிவை மறுபரிசீலனை செய்யும்படி அவரை அறிவுறுத்துவது பயனற்றது என்பதை அவரிடம் பேசியதில் இருந்து உடனடியாக உணர்ந்து கொண்டேன். அவர் ஜேர்மனியின் மிகச்சிறந்த வீரர் மட்டுமல்ல, முன்மாதிரியான வீரராகவும் திகழ்ந்தார். 10 ஆண்டுகளாக ஜேர்மனி அணிக்கு அவர் அளித்த பங்களிப்புக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

30 வயதான பிலிப் லாம்ப் இது வரை 113 சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 5 கோல்கள் அடித்துள்ளார். நிறைய கோல்கள் அடிக்கா விட்டாலும், அணியைத் திறம்பட வழிநடத்துவதிலும், மற்ற வீரர்கள் கோல் அடிக்க உதவுவதிலும் கில்லாடி யாக விளங்கினார்.

2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் குரோஷியாவுக்கு எதிராக 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியுடன் தனது சர்வதேச உதைபந்து வாழ்க்கையை தொடங்கிய அவர் 2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிரான உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் 1:0 என்ற கணக்கில் வெற்றியுடன் நிறைவு செய்துள்ளார்.

சர்வதேச உதைபந்துக்கு முழுக்குப் போட்டாலும், ஜேர்மனியைச் சேர்ந்த பெய்ன் முனிச் அணிக்காகத் தொடர்ந்து விளையாடுவார். அந்த அணியுடனான அவரது ஒப்பந்தம் 2018ஆம் ஆண்டு வரை நீடிக்கிறது. (நு)

## ரொனால்டோவை கருவில் கொல்ல முயற்சித்த தாய்



பிரபல உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டி யானோ ரொனால் டோவைக் கருவில் அழிக்க முயற்சி செய்ததாக அவரது தாய் அதிர்ச்சித் தகவலை வெளியிட் டுள்ளார்.

உலகில் பிரபலமான உதைபந்தாட்ட வீரர்களின் பட்டியலில் கிறிஸ்டியானொ ரொனால்டோவும் உள்ளார். அவர் போர்த் துக்கல் மற்றும் ரியல் மட்ரிட் அணிகளுக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் அவரைக் கருவில் சுமந்தபோதே அழித்து விட வேண்டும் என்று முயற்சித்தேன் என அவரது தாயார் டோலோ ரஸ் அவிரோ அதிர்ச் சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

[illegible]ணிச்சலான தாயார் என்ற பெயரில் டோலோரஸ் சுயசரிதை புத்தகம் எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்தில் ரொனால்டோவை கருவில் இருக்கும் போதே அழிக்க நினைத்தேன். கருவைக் கலைப்பதற்கு மருத்துவரை அணுகிய தாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் முடியாது என்று மறுத்து விட்டார். இதனால் வேறு வழியிலாவது கருவைக் கலைத்து விடலாம் என்று நினைத்து, பியர் குடித்து விட்டு, நீண்ட தூரம் ஓடினேன். ஆனாலும் எனது எண்ணம் ஈடேறவில்லை. பின்னாளில் இந்த இரகசியத்தை தெரிந்து கொண்ட ரொனால்டோ அவ்வப்போது ஜோக் செய்வார். அம்மா என்னைப் பாருங்கள்...நீங்கள் கருவிலேயே அழிக்க நினைத்தீர்கள். ஆனால் நான் தான் இப்போது சம்பாதித்து உங்களையும். வீட்டையும் காப்பாற்றுகிறேன் என அடிக்கடி சொல்வார் என்று அந்தப் புத்தகத்தில் டோலோ ரஸ் குறிப்பிட்டுள்ளார். (த)

## வெற்றியை நோக்கி இலங்கை அணி

தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் இறுதி நாளான இன்று 9 இலக்குகள் மீதமுள்ள நிலையில் 260 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில்இலங்கை அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது.

நேற்றைய தினம் நான்காம் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி மேலதிகமாக 9 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் 292 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

தனது இரண்டாவது இனிங்ஸ்சை தொடர்ந்த தென்னாபிரிக்க அணி 6 இலக்குகளை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. தென்னாபிரிக்க அணி சார்பாக டி வில்லியர்ஸ் அதிகபட்சமாக 51 ஓட்டங்களையும் டு பிளசிஸ். டி கொக். பீற்றர்சன் ஆகியோர் முறையே 37.36.32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் தில்ருவான் பெரேரா 4 இலக்குகளையும் ரங்கண ஹேரத் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

370 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இலங்கை அணி 14 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது முதலாவது விக்கெட்டாக உப்புல் தரங்கவை இழந்து தடுமாறியது. அதன் பின் ஜோடி சேர்ந்த கௌசல் சில்வா மற்றும் சங்கக்கார ஆகியோர் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினர். நேற்றைய ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இலங்கை அணி வெற்றி பெறுவதற்கு ஆட்ட இறுதி நாளான இன்று 9 இலக்குகள் மீதமுள்ள நிலை யில் 260 ஓட்டங்களை பெற வேண்டியுள்ளது.



## யாழ் மண்ணில் முதல் முதலாக

அரச அங்கீகாரத்துடன் கூடிய
14 நாட்கள் பயிற்சியுடன் 100%
இலங்கையிலும், வெளிநாடுகளிலும்
தொழில் வாய்ப்பு
**011-4388593**

நன்மைகள்
- பயிற்சி முடிவில் சர்வதேச சான்றிதழ்
- பயிற்சி முடிந்த ஒவ்வொருவருக்கும் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு
- கை நிறைய சம்பளம்
- தங்குமிட வசதி
- இலவச பிரயாண சீட்டு
- இலவச மருத்துவ வசதி

இன்று முதல் பதிவுகளை மேற்கொள்ளுங்கள் 077 933 93 53

இம்மாத இறுதியில் நேர்முகத் தேர்வு
Emerald Isle Retail Training Center - Colombo
Regional Training Centers

| Jaffna | Mannar |
|---|---|
| **Mind Vision** Technology CAMPUS | **BCS College** |
| No - 04, Clock Tower Lane, Jaffna | No - 67/3, Pettah, Mannar |
| Phone:- 021 2219460 | Phone:- 023 3238570 |

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

உடன் விற்பனைக்குண்டு

Net Caffe இற்கு உரிய பொருள்கள் (கண்ணாடிப் பிற்றிங் உட்பட) மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. (8/15461)(7.6.3)
தொடர்பு: 076 548 2676

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு (யாழில் 1976 முதல்) FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர் குழு. அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS

இன்றே அனுமதிகளை பெறுங்கள் ஆரம்பம் 26.07.2014
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

## எந்த வகை விசா என்றாலும் 7 நாள்களுள் நடவடிக்கை இதுவே திசைகாட்டியின் நவீனத்துவமான சேவை

- *ஆஸ்திரேலியா குடும்ப விசா
- *நியூஸிலாந்தில் படிக்க IELTS வேண்டாமே
- சுவிஸ், இத்தாலி, நோர்வே, ஜேர்மன் உட்பட 26 நாடுகளுக்கு செங்கன் விசா
- *ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க ஒரு லட்சம் வரை உழைக்க கையிலுள்ள காசே போதும்
- *கனடாவில் படிக்க 3 வருடம் வரை உழைக்க இணைந்து மறுநாளே நடவடிக்கைகள் ஆரம்பம்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090



## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணித ஆசிரியர்
பிரகாஷ் அவர்களின்
பாசமிகு தந்தையார்

**மாணிக்கம் செல்வராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (50122)(7.6.3)

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
றோயல் அக்கடமி நல்லூர், யாழ்ப்பாணம்.

## Luxmy Computer Repairing

Home & Office Visit
வீடு மற்றும் அலுவலகத்திற்கு வந்து குறுகிய நேரத்தில் கணினிகள் திருத்திக் கொடுக்கப்படும். (50126)
தொடர்பு: 021 320 3387 (7.6.3)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் சந்தி, கண்டி வீதிக்கு 300m தூரத்திலுள்ள 25 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. (43391)(7.6.3)
தொடர்பு: 071 440 6373

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் கடிதங்கள், பொதிகள் சேவையில் பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளர்களின் மனதில் இடம்பிடித்து நிற்கும்

## திருமுருகன் கொம் நெற்

தமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கவுள்ளது.
- 220 க்கு மேற்பட்ட நாடுகளுக்கான துரித சேவை.
- 3 - 5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- உங்கள் இல்லங்களில் வந்து பொறுப்பேற்று உரிய முகவரியில் ஒப்படைக்கும் வசதி.
- கடிதங்கள், உடுபுடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடலுணவுகள், மருந்துப் பொருட்கள், மற்றும் இதர பொருட்களையும் அனுப்பிட முடியும்.
- தற்போது 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள். (1kg க்கான கட்டணம்).

(லண்டன் 625/=, கனடா 950/= பிரான்ஸ் 675/=, ஜேர்மனி 650/=, சுவிஸ் 750/= இத்தாலி 800/=, அவுஸ்ரேலியா 700/=)

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிட்டெட்
271A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

கிளைகள்:
- 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- 18, பிரதான வீதி, நெல்லியடி.
- 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
- 50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
- பிரதான வீதி, சங்கானை. (ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)



தொடர்புகளுக்கு: 0766901514 / 0212227835

## German Institute

யாழ்ப்பாணம் Palaly Road இல் 5 வருட காலமாக நடைபெறும் எமது Institute இப்பொழுதும் Avarankal, Atchchuveli யில் புதிய Branch ஆரம்பமாக உள்ளது. Deutsch மொழி படிக்க விரும்புவோர் உடனே தொடர்பு கொள்ளுங்கள். (50110)(7.6.3)

No. 10, Palaly Road, Jaffna. ஆவரங்கால் சந்தி,
Mrs.P.Kajenthini 077 160 4823

# Study in UK

Admission open for IELTS new batch!
Weekdays: 21.7.14 | 25.7.14 Weekend: 20.7.14 | 26.7.14

**Jan/ Feb** இற்கான அனுமதிகள் தற்போது ஏற்று கொள்ளப்படுகின்றன

**Colleges** • IELTS Overall : 4.5 **Universities** • IELTS overall band: Minimum 5.5 Each Band >5.0

Accounting & Finance, Architecture & Construction, Business & Management, Computing - Information Technology | Business Computing | Computer Security | Computer Systems and Networking | Software Engineering, Economics, Engineering - Civil | Computing | Electrical | Mechanical, Law, Statistics, Multimedia, Pharmacy, Philosophy, Science - Biomedical | Biosciences | Forensic | Pharmaceutical

- கடந்த 14 வருட காலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் UK உயர் கல்வி கனவை நனவாக்கி வெற்றி நடை போடுகின்ற ஸ்தாபனம்
- கல்லூரி ஆயின் 2-3 வருட காலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
- எம்மிடம் Student Visa விற்காக இணைவோருக்கு இலவச IELTS வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
- சகல ஆவணங்களும் மிக திருத்தமாக சமர்பிக்கப்படின் இரு மாத காலங்களில் UK பயணத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்

வார நாட்களில் 9-5 மணிவரையும் வார இறுதியில் 9-2 வரையும் எமது யாழ் கிளையினூடு இலவசமான UK Student Visa தொடர்பான ஆலோசனைகளை பெற்றுகொள்ள முடியும்

EXPONET Overseas Consultants
#197, Arasady Road, Jaffna. #379-1/2 Galle Road, Col -06
021 7538395 / 021 2227230 Hotline: 01175555511/14/18
E-Mail: nimal@expogroup.lk | Website: www.expogroup.lk

## A/L தமிழ் -72

மாபெரும் இறுதிக்
**கருத்தரங்கு - 2014**
**திரு.க.சந்திரலிங்கம்**
B.A(Hons) Ta-spl, P.G.D.E, M.A (Tamil)- Ind

வெளி மாணவர்களும் பங்குபற்றலாம் 5 நாள்கள் கையேடுகள்
இன்று முதல் பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளவும்
ஆரம்பம் 21.07.2014 திங்கள் பி.ப.2 மணி
DCM
" கடுமையான கற்றல் இலகுவான பரீட்சை"

## Mangala மங்களா நிறுவனத்தின் 10%-50% வரை ஆடி மாபெரும் அதிரடி மலிவு விற்பனை

ARPICO DAMRO Piyestra Nilkamal போன்ற நிறுவனங்களின் அனைத்து தளபாடங்களிற்கும் விசேட விலை குறைப்பு

கைவிருப்பு உள்ளவரை மட்டுமே | டெலிவரி இலவசம்

| Item | Old price | New price |
|---|---|---|
| Low back | 6000 | 3000 |
| M.back | 9000 | 4800 |
| High back | 10500 | 5250 |
| 6x3 (office) | 13000/= | 8500/= |
| 6x4 | 17000/= | 10200/= |
| 6x3 | 14500/= | 8900/= |
| 6x5 | 23000/= | 14500/= |
| | 17000/= | 10900/= |
| | 21000/= | 12000/= |
| | 29000/= | 16500/= |
| Lether sofa | 49000/= | 37500/= |
| | 58000/= | 49500/= |
| Cloth Sofa | 30000/= | 17500/= |
| | 38000/= | 19900/= |
| Iron Board | 1500/= | 1000/= |
| மெத்தை (டபிள்) | 5000/= | 2500/= |
| Baby தொட்டில் | 5000/= | 3500/= |
| Kitchen Rack | 2500/= | 1500/= |

10% - 50% வரை நம்பமுடியாத விலைக்கழிவில் மர. வெளிநாட்டு. மூங்கில் தளபாடங்கள். சோபா செற்றிகள். Baby தொட்டில்கள். வீடு. அலுவலகத்திற்குரிய அனைத்து தளபாடங்களும் மின்னியல் பொருட்களும் பெற்றுக்கொள்ள முடியும்.
ஆடி தள்ளுபடி

536, கே.கே.எஸ் வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம். 021 222 8367, 021 222 8366, 077 7286069

## BREAKING NEWS அன்னை நாகா பூட் சிற்றி

யாழ் கிளை: 175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
நல்லூர் கிளை: 341, 343, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
ANNAI NAGAA FOOD City

MRP யை விட குறைய... 1000 இற்கு மேற்பட்ட பொருள்கள் விலை குறைப்பு

Shop a lot. Save a lot.

THE NEW PRICE DROP Rs. HELPING YOU SPEND LESS EVERY DAY



வந்து பாருங்கள்! வித்தியாசத்தைக் காணுங்கள்! (10.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வேலை பெற்றுத் தருவதாக தென்னிலங்கைவாசி மோசடி

## அவர் மீது நீதிமன்றில் வழக்கு

தென்மராட்சி, ஜூலை 20
ஜனாதிபதியின் உறவினர் என்று கூறி வேலை பெற்றுத் தருவதாக 3 லட்சம் ரூபா பணம் பெற்ற தென்னிலங்கை வாசிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பமே பணம் கொடுத்து இவ்வாறு ஏமாந்துள்ளது.

போத்தல்கள் கொள்வனவு செய்யும் பணியில் ஈடுபட்ட குறிக்க நபர் அந்தக் குடும்பத்துடன் பழகியதன் பயனாக கொழும்பில் உள்ள நிறுவனத்தில் வேலை பெற்றுத் தருவதாக மூன்று லட்சம் ரூபாவைப் பெற்றுக் கொண்டு சென்றவர் பல தினங்களாக சாவகச்சேரிக்கு வரவில்லை.

தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த குடும்பத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். குறித்த நபரைக் கண்டால் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வருமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் சாவகச்சேரிக்கு வந்த நபரை அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்றனர். அங்கு கடமையிலிருந்த பொலிஸார் முறைப்பாட்டை எடுக்க முற்பட்டபோது உயர் அதிகாரி தலையிட்டு அவரை விடுவித்துள்ளார்.

அதனை அடுத்து அந்த நபர் 50 ஆயிரம் ரூபாவை மறுநாள் ஒப்படைத்ததாகவும் மிகுதிப் பணத்தைப் பெறுவதற்கு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்தனர். (வ-9)

# பொதுக் கிணற்று நீரை அனுமதியின்றி வீதி வேலைக்குப் பயன்படுத்தத் தடை

வலி.தென்மேற்கு, ஜூலை 20
பிரதேச சபையின் அனுமதியின்றி வீதி அபிவிருத்தி வேலைக்கு பொதுக் கிணற்றிலிருந்து பவுசர் மூலம் தண்ணீர் எடுப்பதற்குத் தடை விதித்துள்ள தவிசாளர், தொடர்ந்தும் தண்ணீர் எடுக்கப்படுமாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாரதியை எச்சரிக்கை செய்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் ஆனைக்கோட்டைச் சந்தியில் பிரதான வீதியில் அமைந்துள்ள பொதுக்கிணற்றில் பிரதேச சபையின் அனுமதியின்றி மண்டைதீவில் இடம்பெறும் வீதி அபிவிருத்தி வேலைக்காக கடந்த சில தினங்களாக பவுசர் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டது.

இதுகுறித்து உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளருக்குத் தெரியப்படுத்தியதுடன் அதைத் தடுத்து நிறுத்துமாறும் கோரியிருந்தார். அதை அடுத்து தண்ணீர் எடுப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று ஆனைக்கோட்டை உப அலுவலகப் பொறுப்பதிகாரிக்கு தவிசாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை வழமைபோல் பவுசர் மூலம் தண்ணீர் எடுப்பதில் சாரதி ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது உப அலுவலகப் பொறுப்பாளர் தண்ணீர் எடுப்பதற்கு தடை விதித்த போதும் தொடர்ந்தும் தண்ணீர் எடுக்கப்பட்டது.

இதுகுறித்து தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அங்கு விரைந்து சென்ற தவிசாளர் தண்ணீர் எடுப்பதைத் தடை செய்ததுடன் மீண்டும் தண்ணீர் எடுக்க முற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சாரதியை எச்சரித்துள்ளார். (வ-115)



நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி கொடியேறுவதையொட்டி ஆலய சுற்று வீதிக்குப் புதிதாக மணல் பறிக்கப்பட்டு வருகின்றது. அங்கபிரதிட்டை செய்யும் அடியார்களின் வசதி கருதி ஏற்கனவே இருந்த மணல் அகற்றப்பட்டு, புதிய மணல் பறிக்கப்பட்டு பரவப்பட்டு வருகின்றது. (ஓ-17)

# சர்வதேச தரத்திலான கல்வியில் தமிழ் குழந்தைகள் பின்னடைவு

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் விசனம்

திருகோணமலை, ஜூலை 20
எமது நாட்டில் உள்ள தமிழ் பேசும் குழந்தைகள் சர்வதேச தரத்திலான தரமான கல்வியை இன்று இழந்து நிற்கின்றனர். அவர்களின் தரமான கல்வியை உறுதிசெய்ய அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வும் உயர்மட்ட மாநாடும் கடந்த 12ஆம், 13ஆம் திகதிகளில் திருகோணமலை லிங்கநகர் ஸ்ரீகோணலிங்க மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் சங்கத்தின் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். தாய்ச்சங்க உறுப்பினர்களான தலைவர் வி.ரி.சகாதேவராஜா தரமான கல்வி தொடர்பாக சர்வதேச கல்வியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு மலேசியாவில் நடைபெற்ற ஜோன் தொம்சன் செயலமர்வு பற்றியும், நிர்வாகச் செயலாளர் க.நல்லதம்பி மலேசியாவில் நடைபெற்ற தரமான கல்வியின் அடிப்படைகளும் அதன் தேவைகளும் என்ற செயலமர்வின் கருத்துக்களையும், மலேசியாவில் நடைபெற்ற ஜோன் தொம்சன் செயலமர்வு தொடர்பாக துணைப் பொதுச் செயலாளர் திருமதி சரஸ்வதி பாலசுப்பிரமணியமும் பத்திரிகைச் செயலாளர் சு.உதயகுமாரும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அப்போது கருத்துத் தெரிவித்த பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன்; எமது தமிழ் பேசும் குழந்தைகளின் தரமான கல்வியை உறுதி செய்ய நாம் அனைவரும் அணி திரள வேண்டும். வளர்ந்த நாடுகளில் கல்விக்காகக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் எமது நாட்டில் கொடுக்கப்படுவதில்லை. எமது நாட்டின் கல்விக் கொள்கைகளை அரசியலாளர்களே வகுக்கின்றார்கள். ஆனால் பிறநாடுகளில் அவ்வாறில்லை. மேலும் உலகில் உள்ள நாடுகளில் எமது நாட்டு ஆசிரியர்களே மிகவும் குறைவான வேதனத்தைப் பெறுகின்றார்கள் எனத் தெரிவித்தார். சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற இரண்டுநாள் செயலமர்வு மற்றும் ஆட்சிமன்றக் கூட்டத்தில் பல்வேறு முன்மொழிவுகளும், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. (க)

# உரிமை கோராத சைக்கிள்கள் வறிய குடும்ப மாணவர்களுக்கு

## சாவகச்சேரி வணிகர் மன்றம் ஏற்பாடு

தென்மராட்சி, ஜூலை 19
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அநாதரவாகக் காணப்பட்டு கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக உரிமை கோரப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ள சைக்கிள்கள் நீதிமன்ற அனுமதியுடன் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக அநாதரவாகக் காணப்பட்ட சைக்கிள்கள் மன்றத்தின் இரவுப்பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு மன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பல தடவைகள் வணிகர் மன்றத்தால் பொது விளம்பரங்கள் மூலம் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டும் பத்திரிகைகளில் செய்திகளாக தகவல்கள் வெளியிட்டபோதிலும் இதுவரை எவரும் உரிமை கோராத நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த சைக்கிள்களை நீதிமன்றின் பரிந்துரையின் பிரகாரம் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்க வேண்டும் என்று சங்க நிர்வாகம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்ற அனுமதி கிடைக்கும் வரை கடந்த மூன்று வருட காலத்தில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கைவிடப்பட்டு காணாமற்போயுள்ளதாக கருதும் சைக்கிளைத் தொலைத்தவர்கள் சைக்கிள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்க இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# திருட்டு சம்பவத்தில் கைதாகிய நபருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூலை 20
சாவகச்சேரி பெரிய அரசடிப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞரை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் உத்தரவிடப்பட்டது.

குறித்த இளைஞரிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் 9 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான போலி நகைகள் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

திங்கட்கிழமை பட்டப்பகலில் பெரிய அரசடியில் முத்துவேல் உதயகுமார் என்பவரது வீட்டில் ஆள்களில்லாத வேளையில் உள் நுழைந்த 3 பேர் தங்க நகைகள் மற்றும் பணம் திருடிய வேளையில் அங்கு வந்த வீட்டுக்காரப் பெண் வீட்டினுள் ஆள்கள் நிற்பதைக் கண்டு கூக்குரலிட்டுள்ளார்.

சத்தம் கேட்டு ஓடி வந்த அயலவர்கள் ஒருவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அந்த நபரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டது. தப்பியோடிய இருவரைத் தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ-9)

# ஊவாவில் வெற்றிபெறுவது ஐ.தே.கட்சிக்கு பகல் கனவு

## மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்

தேர்தல் வந்துவிட்டால் வெற்றி பெறுவோம், வெற்றி பெறுவோம் என பேசிக்கொண்டேயிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் முடிவடையும் போது தோல்வியையே தழுவுகின்றது. ஊவாவை வெற்றி கொள்வதென்பதும் ஐக்கிய தேசியக் கட்சியின் பகல் கனவு மட்டுமே என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்தில் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி, சுதந்திரத்துக்கு பின்பு எந்த அரசாலும் மேற்கொள்ளப்படாததாகும் என சுட்டிக்காட்டிய அவர், அடுத்த தேர்தலில் 29 ஆவது தடவையாகவும் தோல்வி யுற்ற எதிர்க் கட்சித் தலைவராகவும் ரணில் விக்ரமசிங்க வரலாறு படைப்பார் என்றும் தெரிவித்தார்.

மேல் மாகாண கல்வித் திணைக் களத்தினால் ஆசிரிய ஆலோசகர் 83 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு சிராவஸ்தி மந்திரயில் மேல் மாகாண முதலமைச்சரின் காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.



இதன்போது அவர் மேலும் கூறுகையில்,


இன்று இந்த நாடு நாளுக்கு நாள் முன்னேற்றமடைகிறது. சிலருக்கு இந்த முன்னேற்றத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நாட்டில் சமாதானம் ஏற்பட்டு அரசியல் நிலையாக இருப்பதனை அவர்கள் விரும்பமாட்டார்கள். எப்போதும் தேர்தலில் வெற்றி பெற முடியாதவர்கள் நாட்டிற்கு சிக்கலை ஏற்படுத்த முனைகின்றனர். எங்களுடைய நாட்டு மக்கள் அதற்கு இடமளிக்க மாட்டார்கள்.

நாம் எதைச் செய்தாலும், கொமிஸ் எடுப்பதற்கு செய்கின்றோம் என இவர்கள் கூறுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் மக்களின் பணத்தை வீண்விரயம் செய்தது கொள்ளையிட்டது முழு நாட்டிற்கும் தெரிந்த விடயம். நாங்கள் எங்களுடைய மக்களுக்கு சேவை செய்வதற்காக அன்றி மக்களின் பணத்தில் கொமிஸ் எடுப்பதற்கு வரவில்லை.

அரசு கல்விக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை எனக் கல்வியை நாசமாக் குவதற்கு வெள்ளை அறிக்கை கொண்டு வந்த சிலர் கூறுகின்றனர். கல்விக்கு பெருமளவு நிதியை ஒதுக்கிய அரசு வரலாற்றில் இல்லை. மேல் மாகாணத்தில் அதிகம் நிதி ஒதுக்கப்படுவது கல்விக்காகும். வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக பாரிய தொகையை அரசு எங்களுக்கு ஒதுக்கித் தந்துள்ளது. நான் 2009 இல் முதலமைச்சரானதன் பின்னர் மேல் மாகாணத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தேன். ஆசிரியர்கள் 10 ஆயிரம் பேரை இணைத்துக்கொண்டேன். 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையை மாற்றி 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளேன். - என்றார்

## நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் சின்னத்தம்பி சின்னையா | அமரர் சிவசாம்பவி சிவதாசன்





24.01.1940 { மண்ணில் } 19.09.1975
21.06.2014 { விண்ணில் } 18.06.2010

31ஆம் நாள் நினைவினிலே | 4ஆம் ஆண்டு நினைவினிலே

நீங்கள் இவ்வுலக வாழ்வைவிட்டு நீங்கி,
நாள்கள், மாதங்கள், வருடங்கள் என்று பல காலம்
சென்றாலும் உங்களுடன் வாழ்ந்த காலங்கள் என்றும்
எமது மனதில் பசுமையாகவே இருக்கும்.
நாம் செய்யும் எல்லாக் கருமங்களிலும் நீங்களே
பக்கபலமாக இருந்து எம்மை வழி நடத்துவீர்களாக!

எமது குடும்பத்தலைவர் சின்னத்தம்பி சின்னையா அவர்களது 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் 21.07.2014 திங்கட்கிழமை இருட்டு மடுவீதி, உடையார்கட்டு வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடையார்கட்டு. (41327)(10.6.3) குடும்பத்தினர்.

## பாடசாலைக்கு போட்டோ பிரதி இயந்திரம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்துக்கு அந்தப் பாடசாலையின் பழைய மாணவரும் சுவிஸ் நாட்டில் வசிப்பவருமான தில்லைராஜா விஜயரட்ணமும் அவரது சுவிஸ் நண்பர்களும் இணைந்து ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான போட்டோப் பிரதி இயந்திரத்தை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் உரும்பிராய் பங்குத் தந்தை அருட்திரு யூட்நிக்சன், பாடசாலை ஸ்தாபகரின் பேர்த்தியாகிய செல்வி சுசிலா சாரங்கபாணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க)

## அரச கரும மொழித் தேர்ச்சி; எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் 2014ஆம் ஆண்டுக்கான அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரச சேவையிலுள்ள அலுவலர்கள் அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை தமிழ்/சிங்களம் பாடங்களில் மட்டம்III, மட்டம்II, மட்டம் I (உயர் மட்டம்) ஆகிய தேர்வுகளுக்குத் தோற்ற முடியும்.

பரீட்சைக் கட்டணம் 300 ரூபா. விண் ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஓகஸ்ட் 18. மேலதிக விவரங்களை ஜூலை 18ஆம் திகதிய அரச வர்த்த மானியில் பார்வையிடலாம். (ஓ)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
40 நாள்கள் நிறைந்த ஜேர்மன் செப்பேட் அல்சேசியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குள்ளன.
(50131)(5.6.3) தொடர்பு: 077 3024483

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த 83ஆம் ஆண்டு அத்தம் 79 கி.பாவம், கொழும்பு பங்கு வர்த்தக நிலையத்தில் எக்கவுண்டனாக தொழில் பார்க்கும் மணமகனுக்கு அழகிய தொழில் பார்க்கும் மணமகள் தேவை(சி/15484)(5.6.3) தொடர்பு: 077 2304550

**வீடு தேவை**
யாழ் கச்சேரியில் பணிபுரியும் அரச உத்தியோக கணவன், மனைவிக்கு யாழ்.நகர எல்லைக்குள் வீடு தேவை.
T.P : 077 128 5134 (50133)(7.6.3)

**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=
(Attached Bathroom)
Hotel Villa City
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 2222

**நாய்கள் விற்பனைக்கு**
1½ வயது நிரம்பிய ஜேர்மன் செப்பேட் ஆண், 1½ வயது ஜேர்மன் செப்பேட் பெண் நாயும் 2 மாத டோமன் குட்டிகளும், 2 மாத டசோன் குட்டிகளும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: (50130)(5.6.3)
077 918 5723/021 499 3264

**Batiks ஆடைத் தெரிவுகளுக்கு**
உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பற்றிக் (Batik) ஆடைகளையும் மலிவாகவும் தரமாகவும் அவரவர் அளவிற்கு ஏற்றவாறு மொத்தமாகவும், சில்லறை விலைக்கும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
Sunshine, 351, Sea Street, Colombo-11
www.sunshinebatik.com TP:077 866 3652
E.mail:ceylonbatiks@gmail.com

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் செல்லையா சிவப்பிரகாசம்



பிறப்பு : 12.12.1943

இறப்பு: 03.06.2014

கடந்த 03.06.2014 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சியாமளா மில் வீதி,
மீசாலை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர். (43890)(5.6.3)

**வெற்றிடம்**
ஒரு முன்னணி நிறுவனத்தில் லொறி சாரதி (Lorry Drivers) வெற்றிடங்கள் உள்ளன.
★ 03 ஆண்டுகள் அனுபவம் 40 வயதுக்கு கீழ் இருத்தல் வேண்டும்.
0777 579 122 / 0775 563 640 (சி/15507)(5.6.3)
31/6,1st Lane, Negombo Road, Oliyamulla,Wattala.

**மணமகள் தேவை**
யாழ்.இந்து,1984, பூரம், கிரகபாவம் 29, பிரான்ஸ்PR மணமகனுக்கு சிவந்த அழகிய மணமகள் தேவை.
(சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.)
தொடர்பு: 077 906 0297
aneethan@hotmail.com (50132)(5.6.3)

## 13ஆவது ஆண்டு நினைவு தினம்



எங்களுக்காக 29.05.1944

ஆண்டவரிடம் 20.07.2001

அமரர்
J.S.சத்தியநாதன்
(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர் பனை அபிவிருத்திச் சபை)

அப்பா! என்றழைத்திட...
அகிலத்தில் யார்? எமக்கு
கண்கண்ட தெய்வம் உங்களுக்கு நிகராக...
சீரிய நல்வாழ்வு தந்தீர்...
சத்தியத்தின் வழி வாழ்ந்தீர்...
பேரனவன் மழலை முகம்
காண வாரும்... அப்பாவே!
ஆண்டுகள் பதின் மூன்றும் ஆனதப்பா
ஆற்றுவார் யாரிங்கு? எம் சோகம்...

"மடத்துக்கடவை"
அல்வாய் மேற்கு.
077 662 4408

மனைவி, மகன்,
மருமகள், பேரன்.

(50101)(7.6.3)

வணக்கம் அன்புடன் அழைக்கின்றோம்
ஆச்சி ஹொட்டேல்




சகல விதமான வைபவங்களுக்குமான சைவ மற்றும் அசைவ உணவு வகைகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இன்று தொடக்கம்
நீரிழிவு நோயாளிகளுக்கான
விஷேட உணவு பொதிகள்

**Aache Food centre**
No.117 Brown Road,Jaffna. Tel: 021 222 2092
No.102.Kandy Road,Chavakachcheri Tel: 077 639 1009
Chunnakam Junction, Chunnakam Tel: 076 675 7466
No. 01, Manipay Market, Manipay Tel: 078 352 5374
Kaithady East Kaithady Tel: 021 205 2455

(C15465)(5.6.3)
தயாரித்தலும் பொதி செய்தலும் :
கைதடி கிழக்கு, கைதடி. தொ.பே.: 021 205 2455

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm




Silver 2D 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
ஜோன். சண்முகம் சத்தியநாதன்
(முன்னாள் கணக்குப் பதிவாளர், இலங்கை பனை அபிவிருத்திச் சபை)



பசித்திட்ட வேளை புசிக்கத் தந்தீர்கள்
அணிந்திட உடுபுடைவை தந்தீர்கள்
நோய் கண்டவேளை மருந்து தந்தீர்கள்
படிப்பதற்கு பாடம் சொல்லித் தந்தீர்கள்
பண்புடனான பழக்க வழக்கங்கள்
போதித்தீர்கள்- உங்கள்
எண்ணங்கள் செய்கைகள்
எல்லாம் -எங்களின்
எதிர்கால நல்வாழ்விலே
குறியாயிருந்தது -அவற்றை
மனதில் கொண்டோம்
அதன்வழி நடந்தோம்
சௌபாக்கியம் பெறுகின்றோம்.
உங்களின் ஆசிர்வாதத்துடனே!

அன்னையிடம் 29.05.1944
ஆண்டவனிடம் 20.07.2001

கண கிருஷ்ணராஜன் குடும்பம்.
'ஷத்யகி',
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

(50126)(5.6.3)

## நிரந்தர வேலைவாய்ப்பு

ஒருமுறை தொடர்பு கொள்ளுங்கள்... உங்கள் வாழ்விற்கு அருமையான தொழில் வாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள நவீன தொழிற்சாலைகளான ஜாம்/கிளவுஸ்/பால்மா/ரொபி/யோகட்/சொக்லேட்/பொலித்தீன் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/தரம் பிரித்தல் பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண்/பெண் தேவை. சம்பளம் 19,000/=, 25,000/=, 32,000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். குழுக்கள்/நண்பர்கள்/தம்பதியினர்/ஒரே தொழிற்சாலைகளில். வருகை அன்றே வேலை வாய்ப்பு.

தொடர்பு : 077 556 1883 (43394) (7.6.3)

## வேலைவாய்ப்பு

வாழ்க்கைப் பயணத்தை வெல்ல பாதுகாப்பான சலுகையுடன் (EPF/ETF Welfare) உடன் வேலை வாய்ப்புக்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஜாம்/கோடியல்/இறைச்சி/சோயா/யோகட்/சொக்லேட்/பிஸ்கட்/கிளவுஸ்/ஆடை போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/தரம்பிரித்தல் பிரிவுகளுக்கு 18-50 வயது. ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலை களில் பெற வசதி செய்து தரப்படும். சம்பளம் 19,000/=, 25,000/=, 32,000/= வருகை தரும் நாளிலேயே வேலை வாய்ப்புக்கள்.

தொடர்புகளுக்கு: 077 683 8231, 077 111 6770 (43395) (7.6.3)

## தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய புத்தகங்கள், கொப்பிகள், பத்திரிகைகள், கார்ட்போட்டுகள் என்பவற்றை தங்களிடமிருந்து கொள்வனவு செய்துகொள்கின்றோம்.

(50121) (12.3.6) தொடர்பு: 077 418 0185

## அறைகள் வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, நல்லூரில் சகல வசதிகளுடனும் கல்வி கற்கும் மாணவிகள் அல்லது தொழில் புரியும் பெண்களுக்கான அறைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வாடகைக்கு விடப்படும். (50087) (7.5.3)

தொடர்பு : 077 161 4355

## காணி விற்பனைக்கு

இராசவீதி, கரந்தன் சந்திக்கு அருகில் 8 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

077 118 5263, 077 735 3179

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் CD 200 Road Master உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 988 0000, 021 791 2997

Multi farm (Rajeevan)




## சகஜ யோகா வழங்கும்

"இசைவழியாக இறைவனுடன் இணைவோம்"

உலகப் புகழ்பெற்ற ஆத்மார்த்தமான பாடகர் பண்டிதர் சுப்பிரமணியம் அவர்களுடன் ஒரு பாரம்பரிய இசைப்பயணம்.

| | |
|---|---|
| யூலை 26ம் திகதி (சனி) மாலை 3.00 - 6.00 மணி | "தமிழ்ச் சங்கம்" உருத்ரா மாவத்தை, கொழும்பு - 06. |
| யூலை 27ம் திகதி (ஞாயிறு) மாலை 3.00 - 6.00 மணி | "துர்க்கா மணி மண்டபம்" யாழ்ப்பாணம். |
| யூலை 30ம் திகதி (புதன்) மதியம் 1.00 மணி - (மாணவர்கள்) மாலை 5.00 மணி - (பொதுமக்கள்) | "புனித ட்ரினிற்றி மத்திய தமிழ்க்கல்லூரி சௌமியா மண்டபம்" நுவரெலியா. |
| யூலை 31ம் திகதி (வியாழன்) காலை 9.30 மணி | "ஹில்சைட் டெவலப்மென்ட் சென்ரர்" ஹற்றன். |
| ஆகஸ்ட் 1ம் திகதி (வெள்ளி) மாலை 5.00 மணி | "இந்து இளைஞர் மன்றமண்டபம்" 394/25, பேராதெனியா றோட், கண்டி |

**இலவசம்**

வரையறுக்கப்பட்ட ஆசனங்கள்

தொடர்புகளுக்கு :

| | |
|---|---|
| திருமதி. இந்திரா (கொழும்பு) | : 0777 832 415 |
| செல்வி. பராசக்தி (யாழ்) | : 0773 312 265 |
| திருமதி. தேவி (கைதடி) | : 0750 465 332 |
| திருமதி. திரு (ஹற்றன்) | : 0512 225 733 |
| திருமதி. அபர்ணா (கண்டி) | : 0773 114 619 |

(சி.15504) (45.6.3)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து






ஞானேந்திரன் -துஷாந்தி

தம்பதியரின் செல்வப்புதல்வி

செல்வி யஸ்வினி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா,அம்மா,அப்பப்பா,அப்பம்மா, செல்வன் பெரியப்பா,தர்மபாலா மாமா, அம்மன் அத்தை, மச்சாள்மார், மச்சான்,கனடாவில் வசிக்கும் தனபாலன் மாமா, குமுதினி அத்தை, மச்சாள்மார், ரவி பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், கொலண்டில் வசிக்கும் அப்பன் பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணாமார், அம்மம்மா, மாமா, சித்திமார், உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் அருள்மிகு சொர்ணசித்தி விநாயகர் அருளால் பல்கலைகளும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

க.மகாதேவா (அப்பப்பா)

'துவாரகை'56,பூநாறி மர வீதி,

கொக்குவில் மேற்கு,கொக்குவில்.

(51328)(5.6.3)

## இடமாற்றத்தை முன்னிட்டு.....

**யாழ். நகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!**

இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே



- பட்டு சாறிகள் - 2250/=
- சல்வார் - 800/=
- இந்தியன் ஸ்கேட் - 300/=
- இந்தியன் ரொப் - 750/=
- சேட் - 250/=
- ஜீன்ஸ் - 650/=

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

**கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்**

114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 221 9393

(49911)(10.6.3)

# விசா பெற்றுக் கொள்ள இருப்பவர்கள்

**STUDENT VISA 100%**

**(Genuine Student Only)**



**June, July, September - Any other intake**

- இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு! நீங்கள் விரும்பும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக் கடிதம் மிகவிரைவில் இயலுமான செலவில் நாம் பெற்றுத் தருவோம்.
- எமது விரைவான, வசதியான, இலாபகரமான சௌகரியமான சேவையை இன்றே நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- எமது பயிற்சி பெற்ற சட்ட வல்லுநர்கள் புதிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக விசா தொடர்பான சகல கருமங்களையும் செய்து தருவார்கள்.

ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**வங்கியில் பணவைப்பு**

**Saving book, Fixed Deposit, Statement**

**UK, USA, AUSTRALIA, CANADA, NEW ZEALAND & All other Countries**

எவ்வித முற்பணமும் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளைப் பெறலாம்.

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions

**SKYWALK VISA SOLUTION**

No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)

Web: www.skywalk.com (சி.14696) (45.6.3)

**Hotline: 0777 711 905**



ஜீவநதி சஞ்சிகையின் ஏழாவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும், வடமராட்சி படைப்பாளர்கள் நூல்களும், தமிழ்ச் சஞ்சிகைகளின் கண்காட்சியும் அண்மையில் அல்வாயில் உள்ள கலையகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜீவநதி சஞ்சிகையின் ஆசிரியர் நூலை வெளியீட்டு வைக்க கலாநிதி க.ஶ்ரீகணேசன் பிரதியைப் பெற்றுக் கொள்வதையும் கண்காட்சியைப் பார்வையிடுவோரையும் காணலாம். (ஓ)




அகில இன நல்லூறவு ஒன்றியத்தால் சமய சமூக கலை கலாசார ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விருது வழங்கும் விழா அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்றது. இந்த விருது வழங்கும் விழாவில் புஸ்பராஜா தினேஸ்குமார் மற்றும் காராளசிங்கம் சுரேன் ஆகியோருக்கு "சாமஶ்ரீ தேசமானிய" விருது வழங்கப்பட்டது. கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் நஜீப் ஏ.மஜித் மற்றும் கிழக்கு மாகாண சபையின் நீர்ப்பாசன அமைச்சர் எம்.எல்.உதுமா லெப்வையிடம் இருந்து அவர்கள் தத்தமது விருதுகளைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம். (ஓ)



யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் இலங்கையில் முதன் முதலாக ஊடக எழுத்தறிவு தின நிகழ்வு கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது. இதன் போது 'அச்சு ஊடக தொழில் நுட்பம்' விபரணப்பட இறுவட்டு, தொடர்பாடல் ஊடகக் கற்கை - கற்றல் வளம்' இறுவட்டு வெளியீடும், ஊடகவியலாளர் நூல் வெளியீடும் ஊடக விருது வழங்கல் மற்றும் ஊடக சம்பந்தமான நூல்கள் வெளியீடும் இடம்பெற்றன. (ஓ-10)





சுன்னாகம் ப[illegible]லணி சைவ மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட க.த. இராஜசிங்கம் நினைவுப் பேருரை வழங்கிய சி.சிவஞானராஜா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் அங்கு இடம் பெற்ற மாணவிகளின் கலை நிகழ்வையும் காணலாம். (ஓ)



கொழும்பு றோயல் கல்லூரியால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட நாடகப் போட்டியில் யாழ்ப்பாண திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளின் 'பூ[illegible]' என்ற நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் நான்கு சிறப்பு விருதுகளையும் பெற்றுக் கொண்டது. இந்த நாடகத்தில் பங்கு பற்றிய மாணவிகளையும் பொறுப்பாசிரியர் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோரைக் காணலாம். (ஓ-20)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சுற்றாடல் முன்னோடிகளுக்கான முதலாவது பதக்கமான சுற்றாடல் முன்னோடிப் பதக்கம் சூட்டும் நிகழ்வு அண்மையில் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி தி.சிவானந்தனின் பிரசன்னத்துடன் நடைபெற்றது. இந்த நிகழ்வு மானிப்பாய் மகளிர் கல்லூரியினால் முதன் முதலாக வலிகாமம் கல்வி வலய, சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)



மானிப்பாய் சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் ஆலயத்துக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 30 அடி உயரமான சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா கடந்த புதன்கிழமை அடியவர்களின் "அரோகரா" ஓசையின் மத்தியில் இடம்பெற்றது. தேரை ஆண், பெண் பேதம் இன்றி இருபாலாரும் வடம் பிடித்து இழுத்துச் செல்கின்றனர். (ஓ-86)





தெல்லிப்பழை தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக் கிழமை ஆனந்த ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு அருகில் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.சிவானந்தராசா தலைமையில் நடைபெற்றது.
ஆடிக் கூழ் காய்ச்சும் நிகழ்வு தமிழ்ப் பாரம்பரியத்துக்கு ஏற்ப காய்ச்சப்பட்டதுடன் பனை ஓலையால் செய்யப்பட்ட பெட்டிகளில் கொழுக்கட்டைகள் கொண்டு வரப்பட்டு பரிமாறப் பட்டதுடன் கூழும் கூட பலா இலையில் பரிமாறப்பட்டது. (ஓ-86)